# ராமன் தேடிய சீதை

ரமணிசந்திரன்

# ராமன் தேடிய சீதை

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3 கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை : சென்னை - 600 014.

# நூல் விவரப் பட்டியல்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : ராமன் தேடிய சீதை |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : நவம்பர், 1992 |
| இரண்டாம் பதிப்பு | : நவம்பர், 1993 |
| மூன்றாம் பதிப்பு | : ஆகஸ்ட், 1995 |
| நான்காம் பதிப்பு | : மார்ச், 1998 |
| ஐந்தாம் பதிப்பு | : மே, 2000 |
| ஆறாம் பதிப்பு | : மார்ச், 2002 |
| ஏழாம் பதிப்பு | : மார்ச், 2004 |
| எட்டாம் பதிப்பு | : டிசம்பர், 2005 |
| ஒன்பதாம் பதிப்பு | : நவம்பர், 2007 |
| பத்தாம் பதிப்பு | : மே, 2009 |
| மொத்தப் பக்கங்கள் | : 144 |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| நூலின் கட்டுமானம் | : சாதா அட்டை |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. |

விலை: ரூ.40.00

அச்சிட்டோர் : உதயம் ஆப்செட்ஸ், செ-2. ☎ 28454808

திருமதி. ரமணிசந்திரன் எழுத்துக்களை மிகுந்த ஈடு பாட்டோடு படிக்கும் வாசகர்கள், வாசகிகள் தமிழ் பேசும் உலகெல்லாம் பல்லாயிரக்கணக்கிலே பெருகி வருகிறார்கள்.

தினமும் ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன.

அதிலே மலேசியாவில் உள்ள மதிப்பிற்குரிய வாசகி ஒருவரின் கடிதத்தைக் கீழே தருகிறோம்.

"நம் வாழ்க்கையில் மிக அவசியமானது அமைதி, மகிழ்ச்சி. இவை இரண்டும் உங்கள் புத்ககங்களில் எனக்கு கிடைக்கின்றன. என்னிடம் நீங்கள் எழுதிய 26 புத்தகங்கள் உள்ளன. ஒவ்வொரு புத்தகத்தையும் குறைந்தது 100 தடவையாவது படித்திருப்பேன். படித்து முடித்ததும் மனதிற்கு ஒரு உற்சாகம் மகிழ்ச்சி பொங்கி வழியும்.

என் கணவர் கேட்பார் "அப்படி என்னதான் இந்தப் புத்தகத்தில் இருக்கு;இப்படி சிரிச்சுகிட்டே படிக்கி றியே"என்று. பதில் கூறினால் அவருக்குப் புரியாது. திரும்பத் திரும்பப் படிக்க போர் அடிக்கலியானு கேட்பார். எனக்கு ஒரு தரம்கூட போர் அடித்தது இல்லை. இது நிஜம்.

இவ்வளவு அருமையான புத்தகங்களைத் தரும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்; நன்றியும் கூட"

இப்படிப்பட்ட எண்ணற்ற வாசகிகள், வாசகர்களின் பாராட்டுகளுக்கு எங்கள் நன்றி.

வாசகர்களின் பாராட்டை மேலும் பெறும் வகையில் "ராமன் தேடிய சீதை"என்ற அருமையான நாவலை திருமதி. ரமணிசந்திரன் அவர்கள் தந்துள்ளார்கள்.

படித்து மகிழுங்கள், கருத்தை எழுதுங்கள்.

அருணோதயம் அருணன்

# ராமன் தேடிய சீதை

# ராமன் தேடிய சீதை

## 1

அதிகாலை நேரம்

ஆழ்ந்த உறக்கம் தான் நிர்மலாவுக்கு.

ஆயினும் கன்னத்தைத் தாங்கியிருந்த கைக் கடிகாரத்திலிருந்த அலாரம் ஒருதரம் கிணுகிணுத்து முடிப்பதற்குள் விழித்து, அடுத்த மணி அடிக்குமுன் அவசரமாக அதை நிறுத்தினாள்.

அவளுக்கு மிக அருகிலேயே போடப்பட்டிருந்த கட்டிலில் அயர்ந்து தூங்கி கொண்டிருந்த அன்னை விழித்து விடக்கூடாதே.

மணியை நிறுத்திய கையோடு எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள். கண்ணைக் கசக்கி, உடலை நெளித்து சோம்பல் முறித்து, இன்னும் கொஞ்சம் என்று கெஞ்சிய உடலிலிருந்து தூக்கத்தை விரட்ட முற்பட்டாள்.

முன்னொருதரம் இப்படி உடனே எழுந்து கொள்ளாமல், அலாரத்தை நிறுத்தி விட்டுப் படுக்கையில் புரண்ட வளுக்கு மீண்டும் கண் சொக்கிவிட்டது. ஆறரைக்குப் பால்காரி கதவைத் தட்டிய பிறகு விழித்து, பதறி அடித்து எழுந்து வேகவேகமாக வேலைகளை முடித்துவிட்டு ஓடி ஓடிச் சென்ற போதும் வேலைக்குப் போய்ச்சேர முழுவதாக நாற்பது நிமிடங்கள் தாமதமாகிவிட்டது. ஒரே களேபரம். விஷயம் மானேஜரைத் தாண்டி, அதிசயமாய் அங்கே அன்று வந்திருந்த எம். டி. வரை சென்று, அவரிடம் அன்று வாங்கிக் கட்டிக் கொண்டது இந்தப் பிறவி முழுமைக்கும் போதும் என்பது நிர்மலாவின் கருத்து.

சம்பவம் நடந்து ஓர் ஆண்டு முடிந்து விட்டது.

ஆனால் அதன் பிறகு நிர்மலா தாமதமாக எழுந்து கொண்டதும் இல்லை. ஒரே ஒரு புரளல் தானே என்று, விழித்தபின் படுக்கையில் புரண்டதும் இல்லை. மணியை நிறுத்தியதுமே டக் கென்று எழுந்து உட்கார்ந்து விடுவாள்.

''முருகா சரணம்' சொல்லி உடம்பை விழிப்பு நிலைக்குக் கொணர்ந்து எழுந்தாள் என்றால் அப்புறம் பம்பரம் தான். அதிலும் அதி வேகமாகச் சுழலும் பம்பரம்.

நோயாளியான தாயாருக்கு, அவளுக்கு ஏற்றாற் போல முன்று வேளை உணவையும் தயாரித்து, உரிய வகையில் வைத்து மூடிவிட்டு இரண்டு வேளை காஃபியை ஃபிளாஸ்கில் ஊற்றி விட்டு, கூடவே தாயாரை எழுப்பி, பல்துலக்கி, உடம்புதுடைத்து, தலைசீவி உடை மாற்றி என்று காலை வேலைகள் அத்தனையும் செய்யவேண்டும்.

தானே எழுந்து குளியலறை சென்று வரத்தான் கோதைக்கு விருப்பம். ஆனால் அந்தச் சிறு சிரமம் கூடத் தாங்காமல் தாய் இரைப்பதும் மூச்சுக்குத் தவிப்பதையும் மகளால் தாங்கமுடியாது. அதன்பின் பாதித் தூக்கியும் இழுத்துமாக அழைத்து வந்து, படுக்கையில் கிடத்தி, பிரா

ணவாயுக் குழாயை மாட்டிவிட்ட பிறகுதான் கோதைக்கு மூச்சு ஒருவாறு சீராகும்.

இதற்குப் பயந்தே படுக்கையிலேயே இயற்கைக் கடன்களைக் கழிப்பது கோதைக்குக் கட்டாயமாகிப் போயிற்று. இந்த உதவியெல்லாம் மகள் முகம்மாறாமல் செய்வதைக் காண அவள் மனம் நோகும். "குழந்தையாக இருக்கையில் உனக்கு நான் செய்ததற்கு இப்போதே கடன்தீர்க்கிறாயா கண்ணு?" என்று கண்ணீருடன் உட்படுவாள்.

நோகும் மனதிற்கு ஆறுதலாக ஏதாவது உரைத்தபடி வேலையைத் தொடர்வாள் நிர்மலா.

அருகில் கிடக்கும் சாய்வு நாற்காலியில் கோதையை உட்காரவைத்து, காலை உணவைக் கொடுத்துவிட்டு தானும் குளித்து, வயிற்றுக்கும் ஏதாவது போட்டுக் கொண்டு வேலைக்குச் செல்லத் தயராகும் போது ஆயாவந்து சேருவாள்.

முன்னாளில் மருத்துவமனை ஒன்றில் பிள்ளை குளிப்பாட்டியவள் அவள். அங்கே பழகிய பழக்கத்தில் 'பெட்பான்' வைப்பது, பிராண வாயுக் குழாய் மாட்டுவது, நோயாளியைக் கையாள்வது போன்றவைகளும் அவளுக்குக் கைவரும்.

அதற்காக என்று பயின்ற நர்சை அமர்த்தும் அளவு பொருள் வசதியற்ற நிர்மலாவுககு இந்த ஆயா, ஆலையில்லா ஊரில் கிடைத்த இலுப்பைப்பூ வரப்பிரசாதம்.

பலகாலம் குடும்பத்தோடு பழகியவர் என்பதால் தாய், மகள் இருவரிடமுமே ஆயாவுக்கு உள்ளார்ந்த பிரியமும் உண்டு என்பதால் நம்பி அன்னையையும் வீட்டையும் அவளிடம் ஒப்படைத்து விட்டு வேலைக்கு ஓரளவு நிம்மதியுடனேயே கிளம்புவாள் நிர்மலா.

அன்றும் அப்படியே, தாயாரின் உணவு, மருந்துகளை வேளை வாரியாகப் பிரித்து வைத்து, ஆயாவிடம் விவரம் சொல்லிவிட்டு ஓட்டமும் நடையுமாக பஸ்நிறுத்தத்தை நோக்கி விரைந்தாள் அவள்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்ததுமே, வழக்கம் போலவே அவளது பார்வை முன்னாலும் பக்கவாட்டிலும், எதிருமாக விரைந்த ஸ்கூட்டர்களோடு ஒரு தவிப்புடன் அலையலாயிற்று.

எத்தனை ஸ்கூட்டர்கள்!

எல்லோரும் நன்றாகத்தானே ஓட்டிக்கொண்டு போகிறார்கள்!

ஒரு கவலையற்றுப் பேசிச் சிரித்தபடி, இரண்டு பிள்ளைகளைக்கூட இடையே உட்காரவைத்துக் கொண்டு எப்படி ஓட்டுகிறார்கள்!

அவளுடைய தகப்பனாரால் மட்டும் அது ஏன் முடியாமல் போயிற்று?

அப்பாவின் ஸ்கூட்டரில் எப்போதும் 'ப்ரேக்' தகராறுதான். அதைச்சீர் செய்வதற்காக அடிக்கடி ஒரு செலவு வந்துகொண்டே இருக்கும். மிகவும் பழையதாகி ஓடி ஓடித் தேய்ந்து விட்டதோ என்றிருக்கும் நிர்மலாவுக்கு.

"சேச்சே. உன்னைவிட ஒரே ஒருவயதுதான் இதற்கு அதிகம் . இதைப் போய்ப் பழசு என்கிறாயே நிம்மி" என்று சிரிப்பார் சுந்தரேசன்.

ஆனால் லொட லொட வென்ற சத்தத்துடன் அடுத்த தெருவில் வரும் போதே அப்பா வருவது வீட்டில் தெரிந்துவிடும்.

இதை இனி ஓட்டக் கூடாது என்று அப்பாவிடம் பிடிவாதம் பிடித்திருக்க வேண்டுமோ? குறைந்தபட்சம் 'பிரேக்' சிஸ்டத்தையாவது முழுவதாக மாற்றாமல் வண்டியைத் தொடக் கூடாது என்று ஆடி ஆர்ப்பாட்டம் செய்திருக்க வேண்டுமோ?

ஆனால் அப்பாவிடம் அப்படி ஆர்ப்பாட்டம் செய்து அவளுக்குப் பழக்கம் இல்லையே.

அன்பான அப்பா, மகளின் சின்னச் சின்ன சுகங்களையும் துக்கங்களையும் பொறுமையோடு கேட்டுப் பங்கெடுத்துக் கொள்ளும் பிரியமான தந்தை; அவளது

ஆசைகளைக் கேட்டறிந்து முடிந்தவரையில் நிறைவேற்றும் தகப்பனார். இவரிடம் ஆடுவதாவது ஆர்ப்பாட்டம் செய்வதாவது?

ஆனால் ஒன்று, நிர்மலாவின் ஆசைகளும் அளவு மீறியவை அல்ல. தங்கம், வைரம், பட்டு என்று அவள் கேட்டதே இல்லை. வண்ணவண்ண பிளாஸ்டிக் தொங்கட்டான்களும், கோட்டா சேலைகளும்தான். கார்டன் சேலைகூட ஒரே ஒருதரம்தான் கேட்டிருக்கிறாள். அதைச் சுந்தரேசன் மகளுக்கு வாங்கிக் கொடுத்து விட்டார் என்ற போதும், கேட்ட உடனே தந்தையின் கண்களில் சிறுயோசனை படர்ந்ததைக் கண்டுவிட்ட நிர்மலா அதன்பிறகு அந்த அளவு விலையுள்ளது எதையும் கேட்டது இல்லை. அத்தோடு அவளுக்கு அந்தக் கோட்டா சேலையிலேயே குதூகலம்தான்.

அவ்வப்போது கோதைக்கு மட்டும் ஏக்கம் தலைநீட்டும். அவர்களுடைய சின்னக்குடும்பத்தில், கணவர் சம்பாத்தியத்தில் பெரும்பகுதி தனக்கே மருந்தாக மாறிவிடுகிறதே என்று வருந்துவாள். இப்படி இருந்தால் எந்தப் பணத்தை எப்படிச் சேர்த்து எப்போது அருமை மகளின் திருமணத்தை நடத்தப்போகிறோம் என்று வருந்துவாள்.

இந்தநாட்டில், அதுவும் நம் தங்கத்தமிழ் நாட்டில் ஒரு பெண்ணின் திருமணத்தை நடத்துவது என்றால் அங்கே தங்கத்தையும் நிறுத்து வைத்தாக வேண்டுமே!

பெண் குழந்தையைப் பெற்று வைத்துக் கொண்டு, மகளின் திருமணத்துக்கு என்று ஒருகாசு சேமிக்க முடியாமல், வருவதை எல்லாம் தனக்கான வைத்தியச் செலவுக்கே கொட்டுவது என்றால் உயிரோடு இருப்பதே தப்பு போலத் தெரிகிறது என்று அவ்வப்போது மறுகுவாள்.

எப்போதுமே அம்மா ஓரளவு நோயாளிதான். சற்று பலவீனமான இருதயம். கூடவே அவ்வப்போது நுரையீ

ரலில் சளி அடைத்துக் கொள்ளும். இரண்டுமாகப் பணத்தை விழுங்கோ விழுங்கு என்று விழுங்கின.

அந்த மாதிரி கோதை வருந்தும்போது, கையைப் பற்றி, "பைத்தியம். தாய் என்று நீ உலகத்தில் இருப்பதே நிர்மலுக்குப் பெரிய பாக்கியம். எனக்கும்... உனக்குத் தெரியாதா?" என்று தட்டிக் கொடுத்து சமாதனப் படுத்து வார் சுந்தரேசன்.

இது அவ்வப்போது நிகழ்வதுதான்.

ஆனால் அன்று ஒரு வித்தியாசம்.

"இந்தக் கவலையை இன்றோடு விடு கோதை."என்றார் சுந்தரேசன் உற்சாகத்தோடு." முறைப் படி அலுவலகத்திலிருந்து எழுத்து மூலம் உத்திரவு வந்த தும் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் அதற்குள் நீ கவலைப்பட்டே உடம்பைக் கெடுத்துக் கொள்வாய் போல இருக்கிறதே. அதனால் இப்போதே சொல்லி விடுகிறேன். நன்றாகக் கேட்டுக் கொள். இன்னும் ஒரு மாதத்தில் எனக்கு வேலை உயர்வு கிடைக்கப்போகிறது. பெரிய தாவல். அதிலிருந்து சம்பளத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் கூடுதலாக வரும். ஒன்றா? அப்புறம் இரண்டாவ தாகக் கார் வசதி தருவார்கள். இந்த ஸ்கூட்டருக்கு ஆகும் பெட்ரோல் செலவு ஒரு முன்னூறு ரூபாய் மிச்சம். மூன் றாவதாக வீட்டு வாடகைப்படி வேறு கூடுதலாக நானூறு வரும். எல்லாமாகக் கூட்டிப்பார். விலைவாசி ஏற்றம் என்று கொஞ்சம் கூடுதலாகச் செலவு செய்தால் கூட மாதத்துக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் மிஞ்சும். அதை ஆர். டி. யில் போட்டால் மூன்று ஆண்டுகளில் என்ன ஆகும் தெரியுமா?

"உன் பெண்ணுக்கு இப்போதுதானே பதினெட்டு ஆகிறது? மூன்று அல்லது நாலு வருடம் சேர்ப்போம். மக ளுக்குக் கல்யாணம் என்று கேட்டால் ஆபீசில் மேலே கூட வட்டியில்லாத கடன் தருவார்கள். அதை இந்த அதி கப்படிப் பணத்தில் இலகுவாக அடைத்து விடலாம்..... ஏய்... என்ன, என்ன, இப்போதே மனதில் வாண வேடிக்

கைகளுடன் கல்யாண ஊர்வலம் பவனி வரத்தொடங்கி விட்டதா? ம்? ..ம்?"என்று கேலி பேசிச் சிரித்தார் சுந்தரே சன்.

கணவருடன் சேர்ந்து, கீதம்போல இணைந்து நகைத்தாள் கோதை.

அந்தச் சிரிப்பொலியால் கவரப் பெற்று அடுத்த அறையிலிருந்த நிர்மலா எட்டிப் பார்த்தாள்.

வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும் அழியாத சித் திரமாய் அவள் மனதில் பதிந்தது தாயின்முகம்.

நோயின் வேதனை அடியோடு மறைந்து குதூகலச் சிரிப்பில் பூரித்திருந்த அந்தமுகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருந்தது அவளுக்கு.

இளவயதில் இந்த அம்மா எவ்வளவு அழகாக இருந் திருக்க வேண்டும்!

அசைவு உணர்ந்து நிமிர்ந்து பார்த்த கோதை மகளைக் கண்டதும் மலர்ந்த முகம் மேலும் விகசிக்க மகளை நோக்கிக் கைகளை நீட்டினாள்.

ஓடிவந்து கைக்குள் புகுந்த மகளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.

அம்மாவின் இந்த ஒரு சந்தோஷம் அந்தக் கடவு ளுக்கு ஏன் பொறுக்கவில்லை?

வழக்கமான 'செக்அப்'தான்.

"என்னமோ, எனக்கு இனி டாக்டரைப் பார்க்க வேண்டும் போலவே இல்லை... "என்று மறுத்துப்பேசிய மனைவியை வற்புறுத்தி அழைத்துச் சென்றார் சுந்தரே சன்.

பெற்றோருக்குக் கைகாட்டி விட்டுக் கல்லூரிக்குச் செல்ல பஸ் நிறுத்தத்தை நாடிப்போனாள் நிர்மலா.

பாதி வகுப்பில், அவளை அழைத்துச் செல்லக் கல் லூரிக்கு ஆள் வந்தது.

மருத்துவமனையில் பெற்றவரை அவளுக்கு அடையாளமே தெரியவில்லை. அத்தனை காயங்கள்!

மகள் வருகைக்காகவே காத்திருந்தவர் போல, நிர்மலாவின் கையைப்பற்றி, "நிம்மி, அம்மா... அம்மாவைப் பார்த்துக் கொள், கண்ணு,"என்றவர் அத்துடன் அடங்கிப்போனார்.

மறைந்து விட்ட தந்தைக்காக ஒருமூச்சு அழக்கூட அவளுக்கு வாய்ப்பிருக்கவில்லை. இன்னொருபக்கம் அரை உயிரும் அரை நினைவுமாகக் காலனுடன் போராடிக் கொண்டிருந்த அன்னையைக் கவனிக்க வேண்டியிருந்தது. இரவும் பகலுமாக அவளுடன் சேர்ந்து போராடி, கிட்டத்தட்டப்போய்ச் சேர்ந்து விட்டிருந்த உயிரைத் திருப்பிக் கொணரவேண்டியிருந்தது.

ஒருவாறு கொண்டு வரவும் முடிந்தது.

ஆனால் அதற்குள்ளாக வீட்டில் இருந்த கொஞ்ச நஞ்சப் பணமும், பொன் பொடி பொட்டுகளும் கூடக் காலியாகிப்போயின.

பிழைத்துவிட்ட பிறகும் தாயாரை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வருவதில் பல பிரச்சினைகள் இருந்தன.

ஏற்கனவே நோய்ப்பட்டிருந்த கோதையின் உடல், விபத்தில் தூக்கி எறியப்பட்ட விதத்தில் மேலும் பாதிக்கப்பட்டு, நடமாடுவது கூடச் சிரமகாரியம் என்று ஆயிற்று. மூச்சுக்குத் தனியாகப் பிராணவாயு தேவைப்பட்டது.

மருத்துவமனையில் பிராணவாயு கிடைப்பது எளிது. ஆனால் வீட்டில்?

தந்தையின் அலுவலகத்துக்கு ஓடினாள்.

பிராவிடண்டுஃபண்டுத் தொகையில் பெருமளவு கடன் வாங்கியிருந்தார் சுந்தரேசன். ஐம்பது நூறு என்றாலும் அதிகப்பணம் வரக்கூடிய வேலை என்று மாற்றிக் கொண்டே இருந்ததில் இந்த வேலையில் சேர்ந்தும் சில ஆண்டுகளே ஆகியிருந்தன.

ஆயினும் நிர்வாகம் பரிவுகாட்டி, கிராஜுவிட்டி தொகையில் கூடப்போட்டுப் பதினைந்து ஆயிரம் ரூபாய் கொடுத்தது. வீட்டுப்பிரச்சினைகளை முடித்துக் கொண்டு வந்ததும் அவளுக்கு தகுந்ததாக ஒருவேலை தருவதாகவும் உறுதி கொடுத்தது.

கிடைத்தபணம் அவ்வளவையும் தாயாரின் சுகத் துக்காகவே செலவு செய்தாள் நிர்மலா.

முக்கியமான ஓர் உடனடிச் செலவு பிராணவாயு சிலிண்டர். ஒரு சிலிண்டர் காலியானால் உடனே கிடைக்குமோ, சமையல் வாயு போல அடுத்த சிலிண்டர் கிடைக்கப்பத்துப் பதினைந்து நாள் தாமதம் ஆனால் என்ன செய்வது என்ற பயத்தில் இரண்டு சிலிண்டர் களை வாங்கிவைத்தாள்.

அதுபோக அன்றாட மருந்துகளின் செலவு, தாயா ருக்குத் துணை ஆள், அன்றாட வீட்டுச்செலவு என்பதை யெல்லாம் கணக்குப்பார்க்கத் தொடங்கிய நிர்மலா மிரண்டுபோனாள்.

படிப்பை முடித்துவிட்டுத்தான் வேலை என்று எண் ணியிருந்தவள் நேரே வேலையை நாடிச் சென்றாள்.

தகுந்த படிப்போ, அனுபவமோ இல்லாத நிலையில் நிர்மலாவை அந்த ஓட்டலின் வரவேற்பு பெண்களில் ஒருத்தியாக நியமித்தார் அதன் நிர்வாகி.

வீட்டுச் செலவு மட்டும் என்றால் சம்பளப்பணத்தில் நன்றாகவே சமாளிக்கலாம்தான். ஆனால் முன்னை விடவும் கூடிவிட்ட மருத்துவச் செலவு?

'அம்மாவைப் பார்த்துக் கொள்' என்று மட்டும் இந்த அப்பா சொல்லாமல் விட்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று ஒரோர் சமயம் நிர்மலா நினைப் பது உண்டு.

அவர் அதைச் சொல்லாதிருந்தாலும் கூட நிர்மலா பெற்றவளைச் செலவு என்று கருதிப் புறக்கணித்திருக்க

மாட்டாள் தான். அவளால் இயன்றவரை முயன்று தாயைப் பாதுகாக்கப் பாடுபட்டிருப்பாள்தான்.

ஆனால் அந்தப் பணியில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கமாட்டாள். எதையும் அன்னையிடம் கலந்து ஆலோசித்திருக்கமுடியும். தாயாரின் அனுபவ அறிவையும் பயன் படுத்திக் கொள்ள முடிந்திருக்கும்.

தாயாரின் யோசனையைக் கேட்க முடிந்திருந்தால் அன்னையைக் காப்பதற்கு என்று அவள் இவ்வளவு தூரம் துணிய நேர்ந்திராதோ என்று அவள் பலமுறை எண்ணியது உண்டு.

அம்மாவோடு மட்டும் இதுபற்றிப் பேச முடிந்திருந்தால் "வேண்டாம்மா, இதைவிட அப்பாவிடமே போய்ச் சேர்ந்துவிடலாம்" என்று அன்னை ஆலோசனை கூற அப்படியே இருவரும் போய்ச் சேர்ந்தும் இருப்பார்கள், நிம்மதியோடு.

அதைவிட்டு இப்படி அர்த்தராத்திரியில், அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடியான ஒப்பனைகளோடு...

எப்போதும் போலவே இது பற்றி மேலே நினைக்கக் கூடாது என்கிற தீர்மானத்தில் மனதை வேறுபுறம் திருப்பினாள்.

பொய், களவு செய்யவில்லை. பிறகு என்ன என்று நிமிர்ந்தவள் உடனே தொய்ந்தாள்.

இந்த வாழ்வும்தான் எவ்வளவு காலம் நடக்கும்? அவள் உடலில் இளமை வாடாமல் இருக்கும் வரை? ஓர் ஏழு... எட்டு ஆண்டுகள்?

அப்புறம்?

ஊகூம். எதிர்காலத்தைப்பற்றி எண்ணிப் பார்ப்பதே வேதனை. அபாயம். அப்படி ஓர் எதிர்காலம் எதிரே வந்து நிற்கும்போது அதைச் சமாளிப்பது பற்றி யோசித்துக் கொள்ளலாம். படுகிற வேதனைப் பட்டுக்

கொள்ளலாம். அதற்கு முன் அதை எதிர்பார்த்து எதிர் பார்த்து அந்தச் சிந்தனையில் வேறு கலங்கவேண் டுமா? ஊகூம். வேண்டவே வேண்டாம். ஏதோ, மனதுக்குப் பிடிக்காத தொழில் என்றாலும் மனச்சாட் சிக்கு ஒவ்வாதது அல்லவே! இப்போதைக்கு விடிந்து எழுந்தால்... ஊகூம், விடிகாலையில் எழுந்தால், அவளாக ஏற்றுக் கொண்ட பணிகளை எல்லாம் தங்கு தடை இல்லாமல், மனதில் எந்த உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் ஒரு மரப்புடன் சீராகச் செய்துமுடித்து விட்டுத் தலையணையில் தலை சாய்ப்பது வரைதான் வாழ்வுபோல அவள் இயங்கியாக வேண்டும்.

பொறியைத் தட்டியதும் இயங்குகிற இயந்திரம் மாதிரி.

இயந்திரங்கள் எல்லாம் நல்லது, கெட்டது, எதிர்கா லம் என்று எண்ணிக் கொண்டா இயங்குகின்றன? இல்லையே!

இயன்றவரையில் இயந்திரத்தன்மையுடன்தான் அன்றும் வேலைக்குப் போய்ச் சேர்ந்தாள் நிர்மலா.

அங்கே அன்று அணியவேண்டிய சிவப்பு வண்ணச் சேலையும், கையில்லாத ரவிக்கையும் தயாராக இருந்தன.

அவசரமாக உடையை மாற்றிக் கொண்டு சேலைக் குப் பொருத்தமாக நெற்றியில் சிவப்புத் திலகமிட்டு, உதட்டில் சாயத்தைத் தீற்றி, முகத்தில் புன்னகையைப் பூசிக் கொண்டு இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

அமரும்போதே அடுத்தவளிடம், அவளுடைய சின்னத் தம்பியின் உடல் நிலைபற்றி ஒரு விசாரிப்பு.

அதற்குள் நிர்மலாவின் முன்னிலையில் இருந்த தொலைபேசி கிணுகிணுத்தது.

எடுத்து, "ஹல்லோ, வரவேற்பு." என்றாள் இனியகுரலில்.

"எனக்குத்தானே?" என்று குறும்பாகக் கேட்டு எதிர் முனையில் நகைத்தது ஓர் ஆழ்ந்த ஆண்குரல்.

திடுமென அங்கே நறுமணத் தென்றல் வீசியது குயில் கூவியது: பட்டான ரோஜா இதழ்களை யாரோ அவள் மீது அள்ளிப்பொழிந்தார்கள்.

நிர்மலாவின் முகம் மெய்யாகவே மலர்ந்தது.

## 2

டெலிஃபோன் குழாய் வழியே கேட்ட அந்தக் குரலில் லயித்து, தன்னை மறந்து நிர்மலா நின்றது ஒரே ஒரு கணமாகவும் இருக்கலாம், ஒரு முழு நிமிடமாகவும் இருக்கலாம். ஒருவாறு சுதாரித்துக் கொண்ட பிறகே அவளுக்கு அவனது பேச்சு நினைவு வந்தது.

என்ன துணிச்சல்!

கூடவே அந்தப் பேச்சை ரசித்துத் தோன்றிய முறுவலை மறைக்க முயன்றபடி," எதற்காகவோ?" என்று மிடுக்காகவே கேட்டாள்.

"காரணம் எதற்கு? மகாராஜாக்கள் எங்கே சென்றாலும் வரவேற்புத்தான்."

"எவ்வளவு பெரிய மகாராஜா என்றாலும் அது அவரவர் ஊரில்தான். உள்ளூர் ராஜா வெளியூர் கூஜா என்பார்கள் தெரியுமா? "

"ம்ம்? என்னைப் பொறுத்த வரையில் யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று அவன் விடாமல் கூறவும் சிரித்து விட்டாள் அவள்.

"ஆகா! இது சிரிப்பு! காதில் தேன்பாய்வது போல இருக்கிறது" என்று ரசித்தான் அவன்.

நாக்கைக் கடித்துக்கொண்டாள் நிர்மலா.

இந்த ஓரளவு உயர்தர ஓட்டலில் ,ஆயிரக்கணக்கில் பணம் கொடுத்துத் தங்குகிறவன் அவன். இந்தமாதிரித் தளுக்கான பேச்சுக்கள் அவனுக்குக் கைவந்த கலையாக இருக்கும். அதுபுரியாமல் இந்தத் தேன்பாகு சர்க்கரைப் பேச்சில் இளகுவது அவளுக்கு நல்லதல்ல.

"கவனம் சார். எறும்பு கடித்துவைக்கப் போகிறது. எதற்கும் காதைக் கழுவி விடுங்கள். அப்புறம் இப்போது எதற்காக அழைத்தீர்கள் சார்? "என்றாள் முடிந்த அளவு உணர்ச்சியற்ற குரலில். "அதுவா ஒன்று தெரியவேண் டும். இன்று காலையில் உங்கள் ஓட்டலில் மின்சாரம் வரவில்லையா? எல்லாம் இருட்டடித்துக் கிடந்ததே!"என் றான் அவன் சீரியசான குரலில்.

இருளில் எங்கேனும் முட்டிக் கொண்டானா? ஆனால்... "கொஞ்சம் பொறுங்கசார் . கேட்டுச்சொல்கி றேன்." என்று கூறி, வருகிறவர்களின் பெட்டி, பொருட்களைத் தூக்கிச் சென்று அறைகளில் வைப்பதற்காக 'வரவேற்பை' ஒட்டி நின்று கொண்டிருக்கும் பையன், பாண்டியை அழைத்து விசாரித்தாள்.

அவனது பதிலைப் பெற்றுக் கொண்டு மீண்டும் பேசினாள். "இல்லையே சார். மின்சாரம்தடைப் படவே இல்லையாமே. ஏதேனும் பல்பு ஃப்யூஸ் போயிருக்குமோ என்னவோ! எந்த இடம் என்று சொன்னீர்களானால் மாற்றச் சொல்கிறேன்" என்றாள் வினயமாக.

"உங்கள் வரவேற்புப் பகுதியில்தான் " என்றான் அவன் இலகுவாக.

கைநீட்டி ஸ்விட்சுகளைப் போட்டுப் பார்த்து விட்டு "இங்கே இல்லையே, சார் எல்லாம் எரிகிறதே" என்று

பதிலளித்தாள் நிர்மலா. "அப்படியா? நிச்சயமாய் நான் காலையில் வரும் போது அங்கே இருட்டாகத் தோன்றியதே... ஒரு வேளை இப்படியிருக்குமோ? நிர்மலமான ஒளியை வீசி அந்த இடத்தையே பிரகாசப்படுத்திக் கொண்டிருந்த ஒரு பெண் அங்கே இல்லாததால் இருட்டாகத் தோன்றியிருக்குமோ?"

நமட்டுச்சிரிப்புடன் கேட்டான் அவன்.

இதற்குச் சிரியாமல் எப்படி இருப்பது? இந்த முகஸ்துதியில் தலை சுழலாமல்எப்படித்தடுப்பது?

மிகவும் சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு, "சார், வேறே ஒன்றும் இல்லையானால் ரிசீவரை வைக்கிறீர்களா? எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்றாள் நிர்மலா.

"ஓ.கே. ரூம் சர்வீசுக்குக் கொடுங்கள் " என்று கூறிப் பேச்சை முடித்தான் அவனும்.

"யார் அது நிர்மல்? சிங்கப்பூர் சென்ட் வியாபாரியா? "என்று முறுவல் செய்து வினவினாள் பக்கத்து இருக்கை அஞ்சலி.

"ம் அதே மிஸ்டர் ஆனந்தன்தான் " என்று பதிலளித்த நிர்மலா கடைக் கண்ணில் விஷமத்தோடு தோழியை நோக்க, இருவரும் கிளு கிளுத்துச் சிரித்துக் கொண்டனர்.

அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு இரகசிய ஜோக் அது. ஏனெனில் ஆனந்தன் சிங்கப்பூரில் ஒரு பெரிய சென்ட் தொழிற்சாலையின் உரிமையாளன். உலகெங்கெங்கிலும் அவனது தயாரிப்புகளுக்குக் கிராக்கி உண்டு. தோழியர் இருவரும் சும்மா போரடிக்கும் நேரங்களில் வருகிறவர்கள் போகிறவர்களைப் பற்றித்தங்களுக்குள் 'கமண்ட்' அடித்துக் கொள்வார்கள். ஏதாவது வேடிக்கையாகப் பெயர் வைப்பார்கள். ஒரு தரம் ஏதோ வியாபாரப் பெருக்கத்துக்காக கூட்டம் ஒன்று நடத்திய ஆனந்தன் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்குக் கொடுத்தது போலவே ஓட்டலில் பணிபுரிபவர்

களுக்கும் ஒரு சிறு சென்ட் புட்டியைப் பரிசாக அளித்த பிறகு சிநேகிதிகளுக்குள் அவன் பெயர் சென்ட் வியாபாரி ஆகிப்போயிற்று.

அதன்பின் இருவருக்கும் பேசிக்கொள்ள அவகாசம் இல்லாதபடி வேலை சரியாக இருந்தது.

முன்பதிவு செய்து விட்டுவந்தவர்களுக்கு அறைகள் ஒதுக்கி, ரிஜிஸ்தரில் பதிந்து சாவி கொடுத்து, சாமான் கொண்டுபோகப் பையன் பார்த்து அனுப்புவது, திடுதிப்பென்று வந்த நின்றவர்களிடம் அறை இல்லை என்பதை திருப்பித் திருப்பி இன்முகமாகவே சொல்லித் திருப்புவது, ஏற்கனவே தங்கி இருந்தவர்களின் சின்னச் சின்னப் புகார்கள் (சோப்பு வைக்கவில்லை, டவல் ஒன்றுதான் இருக்கிறது, பேப்பர் வரவில்லை....) கவனித்து ஆவன செய்வதற்குள் இருவருக்கும் முழி பிதுங்கிப் போயிற்று மொத்தம் நூற்றிப்பத்து அறைகள் ஆயிற்றே,

மணி பத்தை நெருங்குகையில் சாவியைக் கொடுத்துவிட்டு ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்புகிறவர்கள் வரத் தொடங்கினார்கள்.

அவ்வப்போது லிஃப்டின் பக்கம் நிர்மலாவின் கண்கள் பாய்ந்து மீண்டன. யார் யார் வெளியே போகிறார்கள் என்று கண்டு கொள்ளத்தான் வேறு எதற்கு என்று தனக்குத்தானே சொல்லிக்கொள்கையில் "ஆகா!இன்று 'டேஞ்சர் லைட்டா' அபாய அறிவிப்பு பார்க்கப் பயமாய் இருக்கிறதே" என்று அருகிலிருந்த ஆனந்தனின் கேலிக்குரல் கேட்டது.

திடுக்கிட்டுப் போய் "நீங் நீங்கள் எப்போது எப்படி" எனறு திணறியபடி கேட்கும் போதே அவளது பார்வை அவனையும் மீறி வேகமாக ஒருதரம் லிஃப்டின் பக்கம் பாய்ந்து மீண்டும் அவனைக்காட்டிக்கொடுத்தது,

உல்லாசமாகச் சிரித்தவன், "உங்கள் ஒட்டலில் மாடிப்படி மாடிப்படி என்று அந்தப்பக்கமாய் அழகாகக் கட்டி வைத்திருக்கிறார்களே, உங்களுக்குத் தெரியாதா?

இரண்டாவது மாடியிலிருந்து அதன் வழியாகக்கூட இறங்கிவரலாம் தெரியுமா?" என்றான் கிண்டலாக.

"இரண்டாவது மாடியா? உங்களறை ஆறாவது மாடியில் அல்லவா இருக்கிறது?" என்றாள் நிர்மலா ஆச்சரியத்துடன்;

"கரெக்ட், இரண்டாம் மாடியறை லிஃப்டில் வந்தேன். கூட்டம் நெரித்துவிட்டது. அங்கேயே வெளியேறிவிட்டேன். அதுவும் ஒருவகைக்கு நல்லது தான், மிஸ்.....?" என்று இழுத்தான் ஆனந்தன்.

அவன் தன்னைக் கண்டு கொண்டதும், சிரித்ததும் உள்ளூர புகைச்சல் ஊட்ட, " வரவேற்பு." என்றாள் அவள் எடுப்பாக.

அவள் எதிர்பார்த்தது போலவே புருவங்களை உயர மேட்டுக்கு உயர்த்தி வியந்து, "பெயரே வரவேற்பா?!" என்று வியந்தான் அவன்.

நன்றாக நிமிர்ந்து, "உங்களைப் பொறுத்த வரையில், இந்த ஓட்டலில் வந்து தங்கும் வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரையில் என் பெயர் 'வரவேற்பு' தான்" என்று மிடுக்காக மொழிந்தவள், நல்ல சமயத்தில் டெலிஃபோன் மணி அடிக்கவே, அதை எடுக்கக் கையை நீட்டிய அஞ்சலியை முந்திக் கொண்டு, ரிசிவ்வரை எடுத்து, 'ஹல்லோ, வரவேற்பு.' என்று தொடங்கி கன அக்கறையுடன் பேசத் தொடங்கினாள்.

அவள் வாழ்விலேயே அந்த விநாடியில் மிகமிக முக்கியம் அந்தத் தொலை பேசிப் பேச்சுதான் போல ஒருபாவனை.

உள்ளார்ந்த சிரிப்பில் ஆனந்தனின் கண்கள் பளபளத்தன. 'யப்பா!' என்பதுபோல உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கியவன், கையோடு கொண்டு வந்திருந்த அவனது அறைச் சாவியை அவள்முன்னே வைத்தான். சற்றுத்திகைப்புடன் நோக்கியவளிடம், "மாலை வந்துவிடுவேன். அதற்குள் 'கான்ஃபரன்ஸ்

ஹாலை – நான் சொன்னபடி தயார்பண்ணச் சொல்லுங்கள்."என்று கூறிக் கையாட்டிவிட்டு வெளியேறினான் ஆனந்தன்.

'உன்னைக் கண்டுபிடித்து விட்டேனே' என்பது போல அந்தச் சிரிப்பு அவளை வெகுநேரம் தொல்லை செய்தது.

இந்த'வரவேற்பு'ப் பகுதியில்பணி புரிகிறவர்களுக்குச் சிரித்துப் பேசுவது ஒருகட்டாயம்.

இதுபுரியாமல் எத்தனையோ பேர் வழிவதுண்டு.

அதில் இவன் இந்த ஆனந்தன் மட்டும் என்னதனி?

யோசனை ஓடும்போதே நிர்மலாவுக்கு 'அவன் என்ன தனி' என்பதும் புரிந்துவிட்டது. ஆனந்தன் வழிவது இல்லை. ஒருசிறு இணுக்கு கிடைத்தாலும் பற்றிக்கொண்டு அவள் காலை வாரிவிடுவதிலேயே குறியாய் இருப்பான். அவளும் அப்படித்தான்.

பேச்சுக்குப் பேச்சு என்று இந்தப் போட்டாபோட்டியில் அவளுக்கு'டானிக்' குடித்ததுபோல ஓர் உற்சாகம் உண்டாவதுவழக்கம். மற்றவர்கள வழிசலோ எப்போதடாமுடியும் என்று அலுப்பாய் இருக்கும். இது தான்வேறுபாடு.

இனி ஆனந்தன் மாலையில்தான் வருவான் என்று எண்ணியபடி வாயிலைப்பார்த்தாள் நிர்மலா.

அவன் கூறியதுபோல ஹாலுக்கும், அடுத்து அவன் அளிப்பதாக இருந்த விருந்துக்கும் உரிய ஏற்பாடுகள் குறித்து நிர்வாகியிடம் நினைவு படுத்திவிட்டு மீண்டும் வந்து பணியைத் தொடங்கினாள்.

மதிய உணவின்பின் சற்று மந்தமாய் அமர்ந்திருந்த நேரத்தில் சினேகிதிகளுக்கிடையே பேச்சு ஓடியது.

"என்வீட்டில் எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறார்கள், நிம்மி."என்றாள் அஞ்சலி திடுமென்று.

"ஓ!" என்ற நிர்மலா வேறு எதுவும் சொல்ல வில்லை. அவ்வப்போது வந்து, அஞ்சலியிடம் அரட்டை அடித்துவிட்டு, கல்யாணத்துக்கு நாள் பார்க்கட்டுமா என்று தவறாமல் கேட்கும் பாபுவைப்பற்றியும் அறிந்தி ருந்ததால் கவலையாகத் தோழியை நோக்கினாள்.

வெறுப்புடன் தோளைக் குலுக்கினாள் அஞ்சலி. "என் வயது தெரியும் இல்லையா, நிம்மி. இருபத்தியாறு முடிந்து விட்டது. இப்போதுதான் திடீரென்று எனக்குக் கல்யாணம் பண்ணுகிறவேகம் அப்பா அம்மாவுக்கு வந்திருக்கிறது. ஏன் வந்தது என்று புரிகிறதா?"

பாபு பற்றிச் சொன்னாயா? என்று மெல்லிய குரலில் வினவினாள் நிர்மலா.

"நான் சொல்லவேண்டியதே இருக்கவில்லை. பாபுவை இங்கே பார்த்துவிட்டு யாரோ வீட்டில் வத்தி வைத்திருக்கிறார்கள். இப்போது பிரச்சனை ஒன்றே ஒன்றுதான். ஊரில் சிவன் கோயில் பிரசாதத்தில் காலம் கழிக்கும் மாமா அதுதான் என் அம்மாவின் தம்பி தாவலாமா, அல்லது அப்பாவின் அக்காமகன் மேலா என்று யோசித்துக் கொண்டு இருக்கிறார்கள்."

தோழியின கசந்த குரல் மனதைக் கசக்க,"யார், கொஞ்சம் அசடுமாதிரி என்பாயே.... அவரா! "என்று பதறினாள் நிர்மலா.

"அதே அவதாரம்தான் பார் நிர்மலா, நான் உனக்கு ஆறு ஆண்டு சீனியர். எல்லாம் சேர்த்து கைக்கு இரண்டாயிரம் வருகிறது. என் சாப்பாடு இங்கே கழிந்து விடுவதில் பஸ்செலவு போகப் பணம் அப்படியே கைக்கு வருகிறதில்லையா? அதை விடமனம் இல்லை. இந்த இரண்டில் ஓர் அசமந்தத்தைப்பிடித்துப் போட்டு வைத்தால் கல்யாணத்துக்குக் கல்யாணம் செய்த மாதிரி யும் ஆகும்;பணமும் கையைவிட்டுப் போய்விடாது. இந்த அழகில் எனக்கு உபதேசம் வேறு. என் சம்பளத் துக்காகத்தான் பாபுஎன்னைச் சுற்றுகிறாராம்"

சற்று மவுனமாய் இருந்துவிட்டு, "அப்படி இல்லை என்பது நிச்சயம்தானே, அஞ்சு?"என்று மெதுவாகக் கேட்டாள் நிர்மலா. தோழி அங்கேவேறு நொந்து விடக் கூடாதே என்ற கவலை அவளுக்கு.

"சர்வநிச்சயம். குடும்பத்தோடு வேலையையும், சேர்த்து விட்டுவிட்டு வந்துவிடும்படிதான்பாபு சொல்கிறார். ஆனால் அது அவமானம் இல்லையா, நிம்மி, வீட்டை விட்டு வெளியேறி... கேவலமாய்ப் பேசுவார்கள் என்பதோடு மதுவைப்பிரிந்து என்னால் எப்படி இருக்கமுடியும்?"என்று குரல் தழுதழுத்தாள் பெரியவள்.

மது அஞ்சலியின் கடைசித் தம்பி. போலியோ வந்ததில் கால் சற்று ஊனப்பட்டு விட்டது. தன்கையில் கிடைக்கும் அதிகப்படி நேர வேலைப் பணத்தை எல்லாம் அஞ்சலி தம்பியின் வைத்தியத்தில்தான் செலவு செய்வாள்.

"என்ன செய்யப்போகிறாய்?"

"என்ன செய்வது? இப்போதைக்குத் தள்ளிப்போட முயற்சி செய்வேன். மற்றபடி வேறு ஒருவரோடு திருமணம் என்பது மட்டும் நடவாத காரியம்"என்று முடித்தாள் அஞ்சலி.

ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வேதனை.

அங்கே மகளுக்குத் திருமணம் செய்யமுடியவில்லையே என்று அம்மாவுக்கு வேதனை. இங்கே இப்படி ஒரு திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய முயல்கிறார்களே என்று இன்னொரு வீட்டில் மகளுக்கு வேதனை.

கூட்டிக்கழித்தால் ஒவ்வொருவருக்கும் கவலை மட்டும்தான் மிஞ்சும் போலும்!

இல்லையே. கவலையே இல்லாமலும் மனிதர்கள் இருக்கிறார்களே. கேலியும் கிண்டலும் சிரிப்புமாய் இந்த ஆனந்தன் மாதிரி... என்று சற்றுப் பொறாமையுடன் எண்ணினாள் நிர்மலா.

# 3

அந்த நேரத்தில் பொறாமை உணர்வு எட்டிப் பார்த்த போதும், மாலையில், "மேடம் வரவேற்பு, என் சாவி வேண்டுமே . ." என்று புன்னகையோடு ஆனந்தன் வந்து நின்றபோது சிரிப்பு தான் வந்தது.

மேடம் வரவேற்பாமே!

கட்டுப்பாடான முறுவலுடன் சாவியை எடுத்துக் கொடுத்தாள்.

"ரூம் நம்பர் சொல்லாமலே சரியாகத் தந்துவிட்டீர் களே. இந்த அளவு நினைவுவைத்திருப்பது என்பாக்கி யம், மேடம் வரவேற்பு."

ஆனந்தன் மேலும் இரண்டுதரம் இந்த 'மேடம் வர வேற்பு' போட்டதும் பெயரைத்தான் சொல்லி விடேன், நிர்மலா," என்று பகிரங்க ரகசியம் பேசினாள் அஞ்சலி.

நிர்மலாவின் முகம் சிவக்கவும், மேலும் நகைத்த படியே சென்று விட்டான் ஆனந்தன்.

"எந்த வித அசிங்கக் கலப்பும் இல்லாத சுத்தமான கேலி. மிஸ்டர் ஆனந்தனோடு பேசும்போது நன்றாயி ருக்கிறது இல்லையா, நிர்மல்? ஒருமாதிரி- வந்து- சேலை ஒதுங்கி விட்டதோ என்கிற மாதிரிக் கூச்சம் இல்லாமல் இவரோடு சாதாரணமாகப் பேச முடிகிறதே", என்று நற் சான்று கொடுத்தாள் அஞ்சலி.

நிர்மலாவுக்கு ஏனோ உள்ளூரப் பொறாமையாக இருந்தது.

ஆனால் வெளியில்காட்டிக்கொள்ளாமல், "ஆ... மாம். பாட்டிலில் கொட்டி கலப்படமில்லாத சுத்தமான தேன் என்பது போல இது சுத்தமான கேலி என்று லேபிள் ஒட்டி விற்பனை செய்யவேண்டியதுதான்." என்று கிண்டலடித்து முடித்து விட்டாள். மாலையில்

ஆனந்தனின் கூட்டம் ஹாலில் தொடங்கு முன்பே வேலை நேரம் முடிந்து நிர்மலா வீடுதிரும்பி விட்டாள்.

மறு நாள், அவள் வேலைக்குச் சென்று சேருமுன் பாகவே அவன் அறையைக் காலி செய்து சென்று விட்ட சேதியை முதலாக அறிந்ததும் உள்ளூர அவளுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது.

அவ்வளவு ச்கஜமாக பேசிச் சிரித்தவன் சென்று வருவதாக ஒரு வார்த்தை சொல்லி இருக்கக் கூடாதா என்று ஒயாமல் தோன்றியது.

இந்த ஆனந்தன் அவள்–நிர்மலா வேலை செய்யும் ஓட்டலில்அவ்வப் போது தங்கிப் போகிறவன். அடிக்கடி சந்திக்க நேரிட்டதால் இலகுவாகப் பேசுகிறான். இன்னும் எத்தனையோ ஊர்களிலும்கூட அவன் இதே போலத் தங்குகிற ஓட்டல் பணியாளர்களிடம் இப்படித் தான் பேசிப்பழகி இருப்பான். கர்வம் இல்லாததால் கல கலப்பாகப் பழகுகிறான். இவ்வளவுதான் விசயம் இதைப் போய் பெரிதாக எண்ணிக் கொண்டு, தன்னி டம் விடைபெற வில்லை என்று வருந்துவது மடத்தனம்... பைத்தியக்காரத்தனமும் கூட, என்று பல முறை திரும்பத் திரும்பச் சொல்லித் தான் அவள் தன்னைச் சமாதானப் படுத்திக் கொள்ள முடிந்தது.

இரண்டே நாட்கள் !

இருபத்தி நாலு மணி நேரத்துக்குப் பதிலாக ஒரு நாளுடைய கால அளவை இருபத்தி இரண்டு மணி நேரமாக ஆக்கிவிட்டாற் போல நிர்மலா உணர்ந்த இரண்டு நீண்ட நாட்கள் ஒருவாறு சென்று மறைந்த பின்,"ஹல்லோ வரவேற்பு, என் சாவி வேண்டுமே." என்று வந்து நின்றான் ஆனந்தன்

மீண்டும் நேரம் கடுகி ஓட, தன்னை மீறி முகம் கண் எல்லாம் பரவிய முறுவலுடன் சாவியை எடுத்து வைத்தாள் நிர்மலா.

"வெல்கம் சார்"என்று புன்னகையோடு ரிஜிஸ் தரை கையெழுத்துக்காக அவன் முன்வைத்தாள்.

அந்த ஒட்டலில் ஆனந்தன் தங்குவதற்காகவே சகல வசதிகளுடனும் கூடிய சூட் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரு சிறு ஹால், படுக்கை அறை, குளியல் அறை, ஒரு சிட் அவுட் என்று இவ்வளவுமாக அமைந்த பகுதி அது. ஆனந்தன் நிச்சயமாக வருவதற்கில்லை என்று இருந் தால் மட்டுமே மற்றவர்களுக்கு வாடகைக்கு கொடுப்பார் கள். வரும் போதும் செல்லும் போதும் அவன் கையெழுத்திடுவதை வைத்து மாதா மாதம் பில் தயாரிப் பார்கள்.

குனிந்து கையெழுத்திடுகையில் கையருகே பள பளத்த அவனது தலைக்கேசத்தைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல நிர்மலாவின் கைவிரல்கள் குறு குறுத் தது.

என்ன பைத்தியக்காரத்தனம்! ஓர் அயலானைத் தொடுவதாவது!வர வர புத்தி கெட்டுத்தான் போய்க் கொண்டிருக்கிறது. இனித் தலையை விரித்துப் போட் டுக்கொண்டு சேலையை அங்கங்கே கிழித்துக் கொண்டு ஓடுவதுதான் பாக்கி!

இவன் ஏன் இவனுடைய மனைவியை அழைத்துக் கொண்டு வருவதில்லை? உடையவர் அருகில் இருந்தால் மற்றவர்களுக்கு இந்த மாதிரிக் குறுகுறுப்பெல்லாம் தோன்றாதில்லையா? குறைந்த பட்சமாய் பெண்களுக் குத் தாலியைப் போல ஆண்களுக்கும் ஏதாவது கட்டிக் கொண்டு அலைவது தான் நல்லது. வேலி இருப்பது தெரிந்து போகும் இல்லையா ..... அதுதான் சரி.

மனதால் ஆனந்தனுக்குத் தாலி அணிந்து பார்த்த வளுக்குச் சட்டெனச்சிரிப்பு வந்தது.

கையெழுத்திட்டுவிட்டு நிமிர்ந்தவன் கண்களில் அவளது சிரிப்பு பட்டுவிட, "என்ன ஜோக்? என்னிடம் சொன்னால் நானும் சந்தோசப்படுவேன்" என்று வின வவும் அவளுக்கு முகம் கன்றிவிட்டது."அது ... அது பெண்கள் ஜோக் சார். உங்களுக்கு ரசிக்காது"என்று எப் படியோ சமாளித்து வைத்தாள்.

ஆனால், "அதை நானல்லவோ சொல்ல வேண்டும்?".என்று அவன் விடாப்படியாகக் கேட்டான், "ஓகோ!அப்படியா? சரி, கேட்டுக் கொள்ளுங்கள். ஆண்களுக்கும் தாலிகட்டி வைப்பது நல்லது என்று நினைத்தேனா, சிரிப்பு வந்து விட்டது. அவ்வளவுதான்" என்றாள் நிர்மலா ஓர் அலட்சியம் காட்டி.

ஒருகணம் ஆனந்தனின் விழிகளில் ஒரு கூர்மை தோன்றியது. உடனேயே வழக்கமான புன்னகையோடு," அப்படி யாருக்குத் திருமணம் ஆகிவிட்டதா இல்லையா என்று நீங்கள் அறிந்தாக வேண்டும் ?" என்று கேட்டு அவளை அயரவைத்தான் .

மேலே கேட்டால் 'ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா?' என்பது போல ஏதாவது பேசி சமாளித்து விடலாம் என்று எண்ணியிருந்தவளுக்கு அவன் பெருமளவு உண்மையை ஊகித்து விட்டது பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

இனி அதைச்சொன்னால் நம்ப மாட்டான் என்று புரிந்து,"என் என் சிநேகிதியின் கா..தலன் வந்து...அது யார் என்று கேட்டு விடாதீர்கள். நான் சொல்வதற்கில்லை "என்று பேச்சை முடிக்க முயன்றாள். "ஆமாமாம். மற்றவர்கள் பேச்சு நமக்கெதற்கு?" என்று ஆனந்தனும் ஒத்துக்கொள்ளவும் 'அப்பாடி' என்று மூச்சு விட்டாள்.

"பேசுவதற்கு நம்மைப்பற்றி எத்தனையோ இருக்கிறதே"என்று அவன் தொடர்ந்து கூறவும் மீண்டும் அவளுக்கு மூச்சு முட்டியது.

இவன் என்ன அவளை முழுவதாக அறிந்து கொண்டு விட்டானா? இனிமுகத்தை எங்கே கொண்டு வைத்துக் கொள்வது என்று அவள் திணறிய போது, "உதாரணத்திற்கு உங்கள் உடையை எடுத்துக் கொள்வோமா?" என்று கேட்டு மேலும் அவளைச் சீராக மூச்சு விட வைத்தான்.

தன் அந்தரங்கம் பத்திரமாக இருக்கிறது என்கிற நிம்மதியோடு, "ஒ.எடுத்துக்கொள்வோமே" என்று அவசரமாகச் சொல்லிவிட்டு, அவனது கேலிப் பார்வைகளால் முகம் சிவந்து," உடையைப் பற்றிய விஷயத்தைப் பேசுவதற்கு எடுத்துக் கொள்ளலாம் என்றேன்" என்று விளக்கினாள்.

" உம். செய்வோம் பாருங்கள், அன்றானால் ஆளை மிரட்டுகிற மாதிரி 'டேஞ்சர் லைட்' போல ஒரே சிவப்பில் நின்றீர்கள். இன்றானால் எங்களூர் அம்மனுக்குத் திருவிழாவில் 'பச்சை சாத்தி'என்று ஓர் அலங்காரம் செய்வார்கள் மாலை கூடப்பச்சைதான். மருக்கொழுந்து, மருவு, தவனம், பெருமாள் பச்சை என்று வாசனை இலைகளால் கட்டிய பச்சை மாலைதான் போடுவார்கள். அதுமாதிரிப் பச்சையம்மனாக நிற்கிறீர்கள், இன்னும் ஒன்று..."

" மஞ்சள் சார். அதுவும் கூட ஆளைஅடிக்கிற மஞ்சள்தான். சிவப்பு,பச்சை,மஞ்சள் தான் எப்போதும், சார் நீங்கள் தான் நிர்வாகத்திடம் சொல்லுங்களேன்."என்றாள் நிர்மலா ஆர்வமாக.

"ம்ம்...?"என்று முகவாய்க்கட்டையைத் தடவினான் ஆனந்தன். "சேலை என்பது. . பெண்கள் விஷயம். எனக்கு என்ன தெரியமுடியும், சொல்லுங்கள்? "என்று வேகமாகச்சீண்டிவிட்டு, "வேற என்னென்ன கலர் நன்றாயிருக்கும்? "என்று அப்பாவி பாவனையோடு வினவினான்.

கிண்டலைக் கவனியாமல், "ஏன், சார், எத்தனை எத்தனை அழகான வண்ணங்கள் இருக்கின்றன தெரியுமா? மேக வர்ணம் பார்த்திருக்கிறீர்களா, சார்? காலையில் ஆரஞ்சும் மஞ்சளுமாய், மாலையில் சிவப்பும் நீலமுமாய் எவ்வளவு அழகாய் இருக்கும் தெரியுமா? லேசான பச்சையும் சிவப்புமாய் மாந்தளிரைப் பார்த்திருக்கிறீர்களா? கடல் பச்சை நிறம் சூப்பர் சார். அப்புறம் 'பிங்கில்' எத்தனை? சிவப்பு ரோஜா நிறத்திலிருந்து

வெளிர் ரோஜா நிறம் வரை எத்தனை வண்ணங்கள்" என்று அடுக்கினாள் நிர்மலா.

"திவால்தான், இத்தனை வாங்கிக் கொடுத்தால் அப்புறம் ஓட்டல் போண்டியாகிவிடும்" என்று அவன் சிரிக்கவும், "அத்தனையுமா கேட்டேன்?"என்று கூறி அவளும் நகைத்தாள்.

அன்று மாலையில் வேலை முடிகிற நேரத்தில், வேலைமுடிந்ததும் "சற்று என் அறை வரை வந்துவிட் டுப் போகமுடியுமா?"என்று ஆனந்தன் டெலிஃபோ னில் அவளை அழைத்தான்.

"ஒருநிமிடம் சார்." என்று ரிசீவரின் வாயைப் பொத்திக் கொண்டு வேகமாக யோசித்தாள் நிர்மலா.

ஓட்டலில் தங்குகிறவர்கள் அவளை அவர்களின் அறைக்கு அழைப்பது இதுதான் முதல் தடவை என்று இல்லை.

தூணுக்குச் சேலையைச் சுற்றிவிட்டால் திரும்பிப் பார்க்கிற ஆண்கள் நிறைந்த உலகில் அழகி என்று அழைக்கத் தகுதிவாய்ந்த அவளை அழைக்காமல் இருந் தால் தான் அதிசயம்.

ஆனால் ஆனந்தன் அழைப்பது இதுதான் முதல் தடவை.

மற்றவர்களிடம் மரியாதையோடு மறுத்ததுபோல இவனிடம் மறுக்கவும் அவளுக்கு ஏனோ மனம் வர வில்லை.... போவதும் சரியோ என்னவோ? இப்போது அவள் என்ன செய்வது?

அவள் யோசித்து முடிக்குமுன், "அறைக்குள் வந்த துமே கதவைச் சாத்திவிட்டு மேலே பாய்ந்து விடுவேன் என்கிற பயம் இருந்தால் நான் அழைத்ததையே மறந்து விடலாம், நிர்மலா" என்றான் ஆனந்தன் ஒருமாதிரிக்குர லில்.

அதுதாளாமல் "அய்-யோ, அப்படி ஒன்றும் இல்லை சார். இ-இங்கே ஒரு சிசின்னவேலை. நான்-நான் ஆறுமணிக்கு வேறு ஆள் வந்து வேலை ஏற்றுக் கொண்டதும் வருகிறேன் சார்." என்று வாக்குக் கொடுத்தாள் நிர்மலா.

அருகில் இருந்த அஞ்சலி சிறு வினாக்குறியோடு நோக்குவது புரிந்தும், அவளிடம் எதுவும் சொல்லமணம் இல்லாமல், 'ரிசர்வேஷன் ரிஜிஸ்தரை' ஆராய்வது போல அதற்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் நிர்மலா.

ஏனெனில் இதை எந்தமாதிரி அஞ்சலியிடம் சொல்வது? வேலைமுடிந்ததும் அந்திவேளையில் ஆனந்தன் அவனது தனியறைக்கு அழைத்தான், நானும் போகப்போகிறேன் என்றால் எவ்வளவு அசிங்கமாக அர்த்தம் தோன்றும்! அவனோ அவளோ தவறான நோக்கத்தில் அழைக்கவோ, செல்லவோ இல்லாத போது எதற்காக அந்தமாதிரிப் பொருள்படும் வார்த்தைகளைப் பேசவேண்டும்.?

அஞ்சலியிடம் மறைக்கவேண்டும் என்று இல்லை. ஆனால் சென்று வந்தபின் விவரத்தைமட்டும் சொன்னால் போதுமென்று தோன்றவே, அடுத்து இரவுப் பொறுப்பேற்க வருகிறவருக்குத் தேவையான தகவல்களைக் குறித்து வைக்கத் தொடங்கினாள் அவள்.

நல்லவேளையாக அன்று அஞ்சலியை அழைத்துச் செல்ல பாபு வந்திருந்ததால் மேற்கொண்டு எதுவும் கேட்க அஞ்சலிக்கும் வழியில்லாது போயிற்று.

பாபுவும் அவளும் சென்றதும், வேகவேகமாய்க் குளியலறைக்கு ஓடி, அவசரமாக முகம் கழுவிப் பொட்டிட்டு, சேலையின் நலுக்கங்களைச் சீர் செய்து கொண்டு ஆனந்தனின் அறையை நாடிப் போனாள் நிர்மலா.

அவள் தட்டுமுன் கதவு திறந்து கொள்ள உள்ளே சென்றவளிடம், ஹாலில் இருந்த வட்டமான கண்ணாடி மேசையைக் காட்டினான் ஆனந்தன்.

வலிவும் வனப்புமான அவனது நீண்ட விரல்களில் இருந்து பார்வையை மேசையின்புறம் திருப்பிய நிர்மலாவின் அகன்ற விழிகள் வியப்பினால் மேலும் விரிந்து வட்டவடிவமாயின.

அன்றுகாலையில் அவனிடம் அவள் ஆவலும் ஏக்கமுமாகச் சொன்ன அத்தனை வண்ணத்துச் சேலைகளும் அங்கே அழகாக வீற்றிருந்தன. கிரேப்பும் ஜார்ஜெட்டும் ஷிஃபானும் கண்ணைப்பறித்தன.

திகைத்துப்போய்ச் சிலையாக நின்றிருந்தவளிடம், "பிடித்திருக்கிறதா? உனக்குத்தான். எடுத்துக்கொள். " என்றது ஆனந்தனின் மாயக்குரல்.

## 4

ஆனந்தனின் குரல் ஒலியில் நிர்மலாவின் பிரமிப்பு சற்றே கலைந்தது.

இவன்..... இந்த ஆனந்தன் இப்போது என்ன சொன்னான்? என்ன நினைத்துச் சொன்னான்?

"சார்..... நீங்..... நீங்கள் என்ன சொன்னீர்கள்?"என்று குரல் தழுதழுக்க உள்ளூரக் கலக்கத்துடன் வினவினாள் அவள்.

"அத்தனையும் உனக்குத்தான் எடுத்துக் கொள் என்றேன்..... ஊகூம், நோ தப்பாக எதுவும் எண்ணத் தொடங்கிவிடவேண்டாம் நிர்மலா. இதற்கு விலையாக நான் உன்னிடம் எதையும் கோரப்போவது இல்லை." என்று அவசரமாகச் சேர்த்துச் சொன்னான் ஆனந்தன்.

"பி.. பின்னே ஏன் சார்? இத்.. தனை சேலைகளை இவ்-வ்வளவு பணம் செலவு செய்து ஏ...ஏன் சார் வாங்கினீர்கள்?"

"ஏதோ ஓர் உந்துதலில் நீ.... ஊகூம், நீங்கள் ஒன்றுமே செய்வதில்லையா, நிர்மலா? எல்லாவற்றுக்கும் காரணம் இருந்தாகவேண்டுமா? ஓகே, கேட்டுக் கொள்ளுங்கள். நான் ரசிகன். அழகுக்கு அழகு செய்து பார்க்க விரும்பினேன். அவ்வளவுதான். மற்றபடி இத்-தனை சேலைகள் இவ்....வ்வளவு பணம் செலவு செய்து என்று பேசுமளவு நான் ஒன்றும் அதிகம் செலவு செய்து விடவில்லை," என்று விளக்கம் உரைத்தான் அவன்.

அதிகச் செலவு செய்ய வில்லையாமே!

அவளுக்குப் பெருமலையாகத் தோன்றுகிற தொகை அவனுக்குப் படுமணலாகத் தோன்றுகிறது போல. எல்லாம் அவரவர்கையிருப்பின் அளவைக் கொண்டு வருகிற மனோபாவம்!

எப்படியும் அவளுக்கு அது பெருமலைதானே?

கொஞ்சம் ஏக்கம் கலந்த பார்வை ஒன்றை அந்தச் சேலைகளின் பக்கம் செலுத்திவிட்டுப் பிடிவாதமாய்த் திரும்பிநின்று, "சாரி சார். இதில் ஒன்றைக்கூட நான் எடுத்துக் கொள்வதற்கில்லை சார். "என்றாள் உறுதியான குரலில் நிர்மலா.

"ஏன்? நன்றாயில்லையா?" என்று விசாரித்தான் அவன்.

"நன்றாக – ரொம்பநன்றாகவே இருக்கிறது, சார்."

"பின்னே?"

"அன்னியர்களிடமிருந்து நான் எதையும் பெற்றுக் கொள்வது இல்லை. என்றாள் நிர்மலா தெளிவாக.

சட்டென ஆனந்தனின் கண்களில் குறுஞ்சிரிப்பு குடிவந்துவிட்டது. "அன்னியனா? நானா?"என்று புருவங்களைத் தூக்கி வியந்துவிட்டு, மாதத்தில் பத்து நாட்கள் பார்த்துக் கொள்கிறோம், பேசிக் கொள்கிறோம், என்னைப் போய் அன்னியன் என்கிறாயே." என்று கேட்டான் அவன்.

"தினமும் நிர்வாகியை, பெல்மாஸ்டரை, ஒட்டல் காவல்காரனைப் பார்க்கிறேன், பேசுகிறேன். அதனால் அவர்களிடமிருந்து எதையும் வாங்கிக் கொள்ள முடியுமா?"

இந்த வாதத்துக்குப் பதில் சொல்லமுடியாமல், "பின்னே இதையெல்லாம் என்ன செய்வது? எக்காரணம் கொண்டும் விற்ற பொருட்கள் வாபஸ் பெறப்படமாட்டாது, என்று பில்லில் தெளிவாக எழுதிவைத்திருக்கிறானே. நான் என்ன செய்யட்டும்?" என்று வருத்தம் காட்டினான் ஆனந்தன்.

சார் இந்த வழியில் வருகிறீர்களா' என்று தனக்குள் எண்ணியவள், வெளிப்படையாக, "அப்படியானால் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்." என்றாள் விட்டேற்றியாக.

"நானா?!"என்று மீண்டும் வியந்தான் அவன். "நான் என்றைக்குச் சேலைகட்டி நீ பார்த்தாய், இதையெல்லாம் நானே வைத்துக் கொள்ளுவதற்கு?"

சிரிப்பு வந்தபோதும் அதை அடக்கி, அலுப்புற்றவள் போல உச்சுக் கொட்டினாள் நிர்மலா."ச்சு, நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்றால் நீங்கள்தான் கட்டிக் கொள்ளவேண்டும் என்றா அர்த்தம்? உங்கள் வீட்டில் உள்ள பெண்களுக்குக் கொடுங்கள் என்றுதான் பொருள்." என்றாள் விளக்கமாக.

"ஓகோ, அப்படியா விஷயம்! நல்லவேளை சொன்னீர்கள், நிர்மலா, வீட்டில் யாருக்குக் கொடுப்பது? அம்மா இதையெல்லாம் கட்டமாட்டார்கள். அப்பாபோன பிறகு தூய வெண்மைதவிர மற்றதைத் தரிப்பதே இல்லை..."

"உங்கள் அக்காவுக்குக் கொடுங்கள்."

"நான்தான் குடும்பத்துக்கு மூத்த பிள்ளை. குடும்பத் தலைவன், அக்கா ஏது."

."பின்னே உங்கள் தங்கைக்குக் கொடுங்கள்."

"தங்கையா? என் தங்கையா? அது சரியான சுரி தார்ப் பைத்தியம். சேலையைத் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டாள். திருமணத்துக்காவது சேலை கட்ட வேண்டும். பழகிக்கொள் என்று அம்மா சொல்வதுண்டு. அவள் என்ன பதில் சொல்வாள் தெரியுமா? சுரிதாரிலேயே கட்டிக் கொள்கிறவனைத்தான் கல்யாணம் செய்வேன் என்கிறாள்."என்று தங்கையின் பேச்சை எண்ணி ரசித் துச் சிரித்தான் அவன்.

"அப்புறம்..... அப்புறம் உ உங்கள் மனைவி.... அவர்க ளுக்குக் கொடுங்கள்."என்று லேசாகக் குரல் நடுங்கக் கூறினாள் நிர்மலா.

"அது செய்யலாம்," என்று உடனே ஒத்துக்கொண் டான் ஆனந்தன்.

## 5

மனைவிக்குக் கொடுக்கலாம் என்று ஆனந்தன் தயங்காமல் ஒத்துக் கொண்டதும் சற்றுநேரம் நிர்மலா வுக்குக் கண்ணில் பூச்சி பறந்தது. ஒன்றுமே புரியாமல் உள்ளே எல்லாம் காலியாகிவிட்டாற்போல உணர்ந் தாள்.

மனைவி என்று ஒருத்தியை வைத்துக் கொண்டா இன்னொரு பெண்ணுக்கு இப்படிப் பத்து சேலைகள் பரிசு கொடுக்க முன்வந்தான்?

இவர்கள் எல்லாம் என்ன மாதிரி மனிதர்கள்!

முள்ளின் மேல் நிற்பதுபோல எப்போது வெளியே போவது என்று துடித்தபடி நின்றாள் நிர்மலா.

அவளது தவிப்பைச் சற்றும் கவனியாமல், "ஆனால் காலவரையற்றுக் காத்திருக்க வேண்டும்." என்று தன்பேச்சைத் தொடர்ந்தான் ஆனந்தன்.

தன் வேதனையை அவன் கண்டுகொள்ளாமல் மறைக்கமுயன்றபடி, "ஏன் சார், வெளியூர் போயிருக்கிறார்களா?"என்று கனத்த இதயத்துடன் சிரமப்பட்டு சாதாரணக் குரலில் வினவினாள் நிர்மலா.

"ஊகூம்."

"பி..பின்னே?"

"அதில்லை....எனக்கென்று ஒருத்தி எப்படியும் பிறந்திருப்பாள் என்பது நிச்சயம். அவளைக் கண்டுபிடித்து, தாலியைக் கட்டி இழுத்துவர எவ்வளவு காலம் ஆகும் என்று சொல்வதற்கு இல்லை. அதனால் தான்...." என்று ஆனந்தன் இழுக்கவும் கலகலத்துச் சிரித்தாள் நிர்மலா.

சில வினாடிகள் அவள் சிரிப்பதைப் பார்த்திருந்து விட்டு,"இங்கே சரியாக' ஸ்டெபிலைசர்'வசதி செய்ய வில்லையா, வரவேற்பு மேடம்? மின்சாரம் அடிக்கடி ஏற்ற தாழ்வாய் வருகிறதே. சற்றுமுன் அறையே இருட்டித்தது. இப்போதானால் கண்கூசும் அளவு ஒளி அதிகமாகி விட்டதே!" என்று அப்பாவிபோல கேட்டான் அவன்.

இதற்குச் சிரிப்பது தவறு என்று தெரிந்தபோதும் தன் சிரிப்பை நிர்மலாவால் கட்டுப்படுத்தமுடிய வில்லை.

"ஆ! இது சரி." என்று மெச்சிய வண்ணம் சேலைகளை அடுக்கி, "எடுத்துச் செல்கிறாயா" என்று வினவினான் ஆனந்தன்.

"ஊகூம்." என்று காதில் கிடந்த பிளாஸ்டிக் தொங்கட்டான் ஆடத்தலையசைத்தாள் நிர்மலா."சாரி சார். மன்னித்துக் கொள்ளுங்கள். இதில் ஒன்றைக்கூட நான் வாங்கிக் கொள்வதற்கு இல்லை. "என்று முறுவலித்த வண்ணமே திரும்பி ஓடிவிட்டாள் அவள்.

வழக்கமாகச் செல்லும் பஸ்சை விட்டுவிட்டு, அரை மணிநேரம் காத்திருக்க நேர்ந்தபோதும், வீடு சென்ற பின் வழக்கமான வேலைகள் நெட்டி முறித்தபோதும்

அதிசயமாய் நிர்மலாவுக்கு அன்று கலைப்பே தோன்ற வில்லை.

பலநாட்கள் இதே மனநிலை நீடித்தது: இடையே ஆனந்தன் இருதரம் வந்து தங்கிச் சென்று மீண்டும் வந்தான். அன்று காலையில் எழும்போதே நிர்மலா வின் மனதில் வழக்கமான சனிக்கிழமைக் கனமும் கலக் கமும் அழுத்தத் தொடங்கிவிட்டிருந்தன.

எப்போதும்போல வேலைகளை முடித்துவிட்டு ஆயாவிடமும் அண்ணையிடமும், 'நைட்டியூட்டி' இருப்ப தால் மறுநாள் காலையில் திரும்புவதாகக் கூறிவிடை பெற்றாள்.

தாயார் வெகுளி. எதையும் தப்பாக நினைக்க அவ ளுக்கு ஒருநாளுமே தோன்றப்போவது இல்லை.

ஆனால் ஆயா? அவள் பதிலே சொல்லவில்லை என்பது நினைவுவர நெஞ்சுக்குள இன்னமும் சுமை ஏறிற்று.

இந்த 'நைட்டியூட்டி' களைப் பற்றி அவள் வெளியே பேசினால்..... கேட்கிறவர்கள் அவளைத்தவறாக எண் ணினால்..... எண்ணம் ஓடும்போதே அவளது தலை மீண்டும் நிமிர்ந்து விட்டது.

இந்தக் கேட்கிறவர்கள் பார்க்கிறவர்களில் எத்த னைபேர் அவள் தன்னந்தனியாய்த் தவித்து நின்ற போது உதவினார்கள்? இனியும்தான் எந்த வகையில் உதவப்போகிறார்கள்?

இவர்களின் அபிப்பிராயம் பற்றிக் கவலைப்படு வதே அனாவசியம்.

இந்தமாதிரி மனநிலையில் இருந்ததால் யாரோ ஒரு நண்பருடன் பேசியபடியே வந்த ஆனந்தனின் முறுவ லுக்குப் பதிலாக அழகாகப் புன்னகைக்க அவளால் முடிந்தது.

இந்தப் புன்னகைப் பரிமாறலைக் கண்டுவிட்டுத் தான் கேட்டாரோ, அன்றி யதார்த்தமாகத் தான்

கேட்டாரோ, "என்ன ஆனந்தன், எப்போது திருமணம்?" என்று விசாரித்தார் ஆனந்தனுடன் வந்த நண்பர்.

சாவியை நிர்மலாவிடம் கொடுத்துவிட்டு அவளை ஊடுருவிப் பார்த்தான் ஆனந்தன். பிறகு நண்பரிடம் திரும்பி, அவருடன் இலகுவாய் நடந்தபடி," ஒரு நல்ல பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தேன், சபேசன். நான் தேடியிருந்த சீதையைக் கண்டுவிட்டேன் என்று நினைக்கிறேன். எனவே திருமண விருந்து விரைவி லேயே கிடைக்கும். முதல் அழைப்பு உங்களுக்குத்தான் கவலையே படாதீர்கள்...."

ஆனந்தனின் குரல் காற்றோடு சென்று மறைய அவளும் காற்றில் மிதந்தாள்.

இந்த மிதப்பு மிகவும் அதிகப்படி என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள அவள் வெகுவாக முயன்றாள்.

முதலாவதாக ஆனந்தன் திருமணம் செய்யப்போ வதாகச் சொன்னானே தவிர நிர்மலாவைத் திருமணம் செய்யப்போவதாகச் சொல்லவில்லையே. அத்தோடு பத்து சேலைகளை மறுத்து விடுவதாலேயே யாரும் சீதையாகி விடமுடியாது. அதுவும் அவள்....

மனதோடு முகமும் வாடிச் சோர்கையில் அஞ்சலி ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தாள். ஒருமணிநேரம் லேட்.

அவளைக் கண்டதும் அவசரமாக அட்டென்டன்ஸ் ரிஜிஸ்டரைத்திறந்து வைத்துப் பேனாவையும் அவள் கையில் கொடுத்து, "முதலில் கையெழுத்தைப் போட்டு விடு அஞ்சி. நான் இன்னமும் ரிஜிஸ்டரை மானேஜர் அறைக்கு அனுப்பவில்லை. அவர் எப்போது கண்டுபி டித்து ஆள் அனுப்பிவிடப் போகிறாரோ? சீக்கிரம், போடு பிறகு நன்றாக மூச்சுவாங்கிக் கொள்ளலாம்." என்று விரட்டினாள்.

கண்களில் நன்றியுடன் அஞ்சலி கையெழுத்திட்டு ரிஜிஸ்டரை மூடிவைக்கவும் நிர்வாகியின் பியூன் அந் தப்புத்தகத்துக்காக வந்து விட்டான். "என்னாம்மா,

நீயாவே கூப்பிட்டுக் கொடுத்திருக்கப்படாதா? ஏன் வாங்கி வைக்கவில்லை என்று எனக்கு டோஸ் விழப் பண்ணிட்டியே...." என்று புலம்பியபடி ரிஜிஸ்டரோடு சென்றான் அவன்.

"இன்றைக்கு நன்றாக வாங்கிக் கட்டியிருக்கவேண்டியவள் உன்னால் தப்பினேன். " என்று வார்த்தையாலும் நன்றி கூறிவிட்டு, "இன்று விடிந்த வேளையே நன்றாக இல்லை நிம்மி. "என்று பெருமூச்சுவிட்டாள் அஞ்சலி.

"என்ன விஷயம்?"

"அப்பாவின் அக்காமகனே தேவலாம் என்று வீட்டில் முடிவு செய்து விட்டார்கள். அவன் சொன்ன பேச்சைக் கேட்டுக் கொண்டு இருப்பானாம். காலையிலிருந்து ஒரே சத்தம். முடியாது என்று கத்திவிட்டு வந்திருக்கிறேன். ... சே, என்ன மனிதர்கள் ..." என்றாள் அஞ்சலி வெறுப்புடன்.

சற்று யோசித்து விட்டு, "ஏன் அஞ்சலி, அவர்கள் உன்னைப் பெற்ற அம்மாவும் அப்பாவும். அவர்களுக்கு நீ நன்றாக இருக்கவேண்டும் என்று ஆசையிராதா? உன்னை விட உன் பணம் மேல் என்று எப்படி.... அப்படி நினைப்பார்கள் என்றா எண்ணுகிறாய்?" என்று கேட்டாள் நிர்மலா.

"இன்றைய நிலைமை அப்படித்தான், நிர்மல்."என்றாள் அஞ்சலி. "ஆனால் தப்பு என்மீதும் தான். முதலில் நான் வேலை பார்ப்பதற்காக எதிர்ப்பு தெரிவித்தவர்கள்தானே. எனக்குத்தான் அப்பா மாதிரி சம்பாதிக்கற ஆசை! நான் வேலையில் சேர்ந்து சிலமாதங்களில் அப்பாவின் தொழிற்சாலையில் ஒரு தகராறில் அடிபட்டு விட்டார். குணமாக நாலுமாதம் ஆனது பெரிதில்லை. ஆனால் நிர்வாகம் யூனியன் இரண்டுமே அப்பாவைக் கைவிட்டுவிட்டது.

"அப்பாதான் ஏதாவது அடாவடித்தனம் செய்திருக்க வேண்டும் என்று இப்போது தோன்றுகிறது. ஆனால் அப்போது அவர் இடிந்து கிடப்பது தாங்க

வில்லை எனக்கு. வீட்டு சாமான்கள் எல்லாம் வாங்கிப் போட்டு விட்டு மீதிப் பணத்தையும் அப்படியே கையில் கொடுத்துவிட்டேன்.

"முதலில் அப்பா வேலை தேடத்தான் செய்தார். ஆனால் நிர்வாகம், சங்கம் இரண்டினிடமும் கெட்ட பெயர் வாங்கிவிட்ட அவருக்குப் பழைய மாதிரி வேலை கிடைக்கவில்லை. மட்ட வேலை செய்ய அவருக்கு மனம் இல்லை. அப்போதும் அவர் சோர்வது காணப் பொறுக் காமல் என் சம்பளத்தை வைத்துக் காலம் முழுவதும் உங் களைக் கஷ்டப்படாமல் காப்பாற்றுவேன் என்று வசனம் பேசிக் கெடுத்துக் கொண்டது நானேதான்.

"சொற்பகாலம் ஒரு குறுகுறுப்புடனேயே அனுப வித்தவர்களுக்கு நாளாக, ஆக, அனுபவிப்பது உரிமை என்று தோன்றத் தொடங்கியது. பெரியதம்பி உருப்படா மல் போனது வேறு. அப்பாவுக்கும் உழைக்க மனம் இல்லை. எதை நம்பி என் சம்பளத்தை விடுவார்கள். சொல்லு? அதைத் தக்க வைத்துக் கொள்ள ஆனதெல் லாம் செய்கிறார்கள்."என்று மனதிலிருந்ததை எல்லாம் கொட்டித் தீர்த்தாள் அஞ்சலி.

"பின்னே இதற்கு என்னதான் முடிவு, அஞ்சி, நான் அறியவே பாபு ஒன்றரை ஆண்டுகளாகக் காத்திருக்கி றார்."

ஒரு பெருமூச்சு விட்டு, அதுதான் நான் செய்த பிழை நிர்மலா. பேசாமல் வீட்டுக்கு உழைக்கும் இயந்திர மாகவே வாழ்க்கையை ஓட்டி முடித்திருக்கலாம். ஆனால் அப்போது, எப்படியாவது ஒருநாள் குடும்பப் பொறுப்பை அப்பா ஏற்றுக் கொள்வார் என்று நம் பிக்கை இருந்ததால் பாபுவின் ஆவலுக்கு நானும் எதிரொலி தந்து விட்டேன். இப்போது நாலு ஆண்டுக ளாகின்றன. ஒரு நல்ல மனிதரை ஆசைகாட்டி, ஏமாற் றிக் கொண்டு இருக்கிறோம் என்கிற வேதனையும் சேர்ந்து கொண்டதுதான் மிச்சம்."என்று வருத்தப்பட் டாள் அவள்.

"ஆனால்... அஞ்சலி, நீங்கள் இப்படியே இருந்துவிட முடியாதில்லையா?"

"இப்படித்தான் இருந்தாகவேண்டும், நிம்மி. அப்பா அம்மாவிடம் அந்தத்திருமணத்தை மறுத்துவிட்டு, இங்கே பாபுவிடம் என்னை மறந்து வேறு பெண்ணை மணந்து கொள்ளுமாறு கூறிவிட்டு இப்படியே இயந்திர மாய் வாழவேண்டியதுதான்."என்று முடித்தாள் அஞ்சலி.

நெஞ்சுக்குள் வலித்தது நிர்மலாவுக்கு.

இந்த வேலையில் சேர்ந்த புதிதில் வேலையின் நெளிவு சுழிவெல்லாம் அவளுக்குச் சொல்லிக் கொடுத் தவள் இந்த அஞ்சலிதான்.

'குளியல் அறைக்குழாயில் வென்னீர் சூடாக வர வில்லை என்று சிடுசிடுப்பார்கள், சிலபேர். அறைக்கு வரவழைத்திருந்த சிற்றுண்டியில் உப்பு போதாது, காஃ பியில் இனிப்பு அதிகம் என்று மூக்கால் அழுவார்கள் சிலர். இதற்கு மேல் ராத்திரி ரூமுக்கு வருகிறாயா?' என்று கண்ணடிப்பார் ஒரு கைத்தடிக் கிழவர்.

முதலில் மிரண்டுபோய் அழுதுவிட்டாள் நிர்மலா.

அவளைத் தேற்றி, இவர்கள் எல்லோரையுமே முக மலர்ச்சி வாடாமல் சமாளிக்கும் விதத்தைக் கற்றுக் கொடுத்தவள் இந்த அஞ்சலிதான்.

தன் சொந்த வாழ்வைச் சீர்ப்படுத்தும் விதம் அவ ளுக்கும் தெரியவில்லையே? இயந்திரம் என்கிறாளே.

இன்னோர் இயந்திரமா?

இப்படியே இயந்திரங்கள் பெருகிக் கொண்டே போனால் அப்புறம் உலகத்தில் பெண்கள் எங்கே மிஞ் சுவார்கள்?

மனம் சலித்துப் போயிற்று அவளுக்கு.

ஆனால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்த அஞ்சலி, அப்போது வந்து சேர்ந்த ஓர் இளம் ஜோடிக்கு

இன்முகத்துடன் வரவேற்புரைத்து, சாவியை எடுத்துக் கொடுப்பதைக் காணவும் தன் முகத்திலும் மலர்ச்சியை வரவழைத்துக் கொண்டாள்.

மாலை நெருங்க நெருங்க உணர்ச்சிகளை எல்லாம் மரத்துப் போகச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டாள்.

இரவு வேலை முடிந்து அங்கேயே தங்கிவிட்டுக் காலையில் எழுந்து முகம் கழுவிக்கொண்டு அவசரமாக வீட்டிற்குக் கிளம்பினாள்.

ஒட்டமும் நடையுமாக வெளியேறி குனிந்ததலை நிமிராமல் நடக்கத்தொடங்கியவள், "ஹலோ குட்மார்னிங், இந்த நேரத்தில் இங்கே எப்படி?" என்று ஒரு குரல் குதூகலத்தோடு வினவவும் மெய்பதறி விதிர் விதிர்த்து நின்றாள்.

# 6

இனிய முறுவலுடன் உற்சாகமே உருவாகக் காலை வாழ்த்துச் சொல்லியபடி எதிரே வந்து நின்ற ஆனந்த னைக் கண்டதும் முதலில் நிர்மலாவுக்கு ஒன்றுமே ஓட வில்லை. அந்தக் காலத்தில் சீ தையை விழுங்கிய மாதிரி பூமி வெடித்து தன்னையும் விழுங்கி விடாதா என்று இருந்தது அவளுக்கு. ஆனால் அப்படி யெல்லாம் சுலபத் தில் காப்பாற்றி விடுகிறவரா கடவுள்? ஊகூம், அது நடக் கிற காரிய மில்லை...

ஆனால் இப்போது இவனிடம் பதில் சொல்லியாக வேண்டுமே, இந்த நேரத்தில் இங்கே எப்படி வந்தாள் என்று. என்ன சொல்வது? இருநூற்றுப் பதினாறு எழுத் துக்களால் உருவான எத்தனையோ ஆயிரம் வார்த்தை கள் இருந்தும் உருப்படியாக ஒன்று கூட சொல்லத் தோன்றாமல் பேந்த விழித்தாள் அவள்.

அவள் எதிரே வந்து நின்று முகத்துக்கு நேராகக் குறும்பாகச் சொடக்குப் போட்டு அவளது திகைப்பைக் கலைத்தான் ஆனந்தன். "மேடம் வரவேற்புக்கு ஒட்டலை விட்டு வெளியே வந்தால் பேச்சுவராதா?...ஒகோ! திடீரென்று ஆண்குரல் கேட்கவும் மிரண்டு போனாயாம்மா?" என்று சட்டென்க் கனிந்துவிட்ட குரலில் விசாரித்தான்.

கொஞ்சம் சுதாரித்துக் கொண்டாள் நிர்மலா. பழக்கம் காரணமாகக் "குட்மார்னிங்" சொன்னவளுக்கு அவனது முதல் கேள்விக்குரிய பதிலை என்ன முயன்றும் கண்டு பிடிக்கமுடியாமல் போகவே, "நீங்கள் எங்கே இந்த நேரத்தில் இங்கே வ. .வந்தீர்கள்?" என்று பதில் கேள்வி கேட்டுப் பேச்சைத் திசை திருப்பினாள்.

"வாக்கிங்!" என்றான் அவன் எளிதாக "ஆனால் நீ" சட்டென இடைமறித்து, "தினமும் வாக்கிங்" போவீர்களா? உடல் பயிற்சிக்காகவா?" என்று ஆவலாக விசாரிப்பது போலப் பாவனை செய்தாள் அவள். கடவுளே, இவன் காலையில் வாக்கிங் வருவான் என்று தெரியாதே. இதுவரை கண்டதே இல்லையே. இன்று இப்படி மாட்டிக் கொள்ளும்படி ஆயிற்றே. இதிலிருந்து எப்படி மீள்வது?

"நான்... நான் தினமும் 'வாக்கிங்' போவது என்று பழக்கம் இல்லை. உடல் பயிற்சியெல்லாம் அங்கங்கே இருக்கும் இடத்தில் காலையில் முடித்து விடுவேன். இன்று. . அதை அப்புறம் சொல்கிறேன். உங்கள் வேலை நேரம் காலை எட்டுமணியிலிருந்து மாலை ஆறுமணிவரைதானே? இப்போது ஏன்...."

வேலை நேரம். வேலை...

சட்டெனப் பதில் தோன்றிவிட – தோன்றி விட என்பதைவிட நினைவு வந்து விட என்பது சரியாயிருக்கும். வீட்டில் சொல்வதுதானே – அவன் பேச்சில் குறுக்கிட்டு, "நைட்...நைட்டியூட்டி சார். இன்று அரைநாள் லீவு

என்பதால் நேற்று இரவும் வேலை" என்று உரைத்தாள் நிர்மலா.

"நேற்று இரவா?" என்று புருவத்தைச் சுருக்கி யோசிப்பது போலப் பாவனை செய்துவிட்டு " நேற்று நான் சினிமா பார்த்துவிட்டு வந்தபோது பம் மென்று மீசை வைத்த யாரோ அல்லவா இருந்தார். கள். ம்?" என்று தலையைச் சரித்து அவள் முகத்தை ஆராய்வது போல் நடித்தான் ஆனந்தன். தொடர்ந்து," ஊகூம். இல்லையே. நிச்சயமாக அந்த மீசைக்கார ஆள் நீ அல்ல" என்று கூறிக் கண்ணால் சிரித்தான்.

இன்னமும் இவனுக்குத்தவறாக ஒன்றுமே படவில் லையே. சந்தேகமே தோன்றவில்லையே. யாரிடமும் மறைக்கக் கூடிய விஷயம் எதுவும் அவளுக்கு இராது என்பது போல நம்பிக்கையோடு பேசுகிறானே என்று நெஞ்சுக்குள் வலித்தது நிர்மலாவுக்கு. காட்டிக் கொள்ளா மல், "பாலன் சாரைப் பார்த்திருப்பீர்கள். நா. . நான் டீ குடிக்கப் போனபோது..." என்று மேலே மேலே பொய் புகல முடியாமல் நிறுத்தினாள் அவள்.

"ஓகோ அப்படியா விஷயம். இரவு இங்கேயே தங்கி விட்டு வீட்டுக்குக் கிளம்பியாயிற்றாக்கும். ஒகே. பஸ் நிறுத்தம் வரை உடன் வருகிறேன். "என்று திரும்பி அவளோடு நடக்கத் தொடங்கினான்.

மகாபாரதத்தில் பாண்டவர்கள் அரக்கு மாளிகை யில் அழிந்து போனார்கள் என்பதை அறிந்த போது திருதராஷ்டிரனுடைய மனநிலை பற்றி ஓர் அழகான வர்ணனை வரும். வெயில் காலத்து நீர்மடு மேலே வெப் பமாகவும் கீழே குளிர்ச்சியாகவும் இருப்பது போல அவ னுக்கு ஒரே சமயத்தில் சந்தோஷமாகவும் துக்கமாகவும் இருந்ததாம்.

இப்போது நிர்மலாவுக்கும் அப்படித்தான் இருந்த தாம். ஆனந்தனின் அருகாமையில் அவளுக்கு மிகுந்த

ஆனந்தமும் இருந்தது. ஆனால் இந்தச் சில நிமிடப் பரிதவிப்பின் பிறகு, இந்த அருகாமை ஒரு வழியாலும் நிலைக்கப் போவது இல்லை என்பது தெளிவாகப் புரிந்து போனதால் மகா வேதனையாகவும் இருந்தது.

அவளது நடைக்குத் தகுந்தபடி காலெட்டுகளைக் குறுக்கி நடந்தபடி, "நிர்மலா, எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டான் ஆனந்தன்.

"என்ன சார்?"

"அடடடா! தேவைப்படும் உதவி இரண்டாகிப் போயிற்றே!"

புரியாத மருட்சியுடன் அகன்ற விழிகள் கேள்வியாய் நோக்கவும், மெல்ல நகைத்து, "முதல் உதவியாக இந்த சார் மோரை எல்லாம் விட்டு விடவேண்டும். விட்டுட்டு எனக்கு நெருக்கமானவர்கள் அழைப்பது போல என்னை 'ஆனந்த்' என்று அழைக்க வேண்டும். செய்வாயா?" என்று கேட்டான் அவன்.

நெருக்கமானவர்கள் போலவா? தொண்டை அடைத்தது நிர்மலாவுக்கு "சா.. சாரி. வேலை விதிப்படி யாரிடமும் நாங்கள் நெரு. . . வந்து ஓட்டல் வாடிக்கையாளர்களைப் பேர் சொல்லி அழைப்பது பிழை சார். அதனால்..."

"வேலை நேரத்தில்? இப்போது இந்த சமயத்தில் அப்படி அழைப்பதில் என்ன ஆட்சேபனை?"

"சா..."

மிரட்டுவது போல சுட்டுவிரலை உயர்த்தி விளையாட்டாய் எச்சரித்து விட்டு, "ஆனந்த். . . ஆ. ன. . ந்த். . . ஆனந்த். உச்சரிப்பதற்கு அது ஒன்றும் சிரமமான பெயர் இல்லையோ?" என்றான் அவன் விடாப்பிடியாக.

உள்ளிருந்த குழப்பங்களை மீறிக் கொண்டு அவளது கன்னங்களில் செம்மை பூக்க" அடுத்த உதவி என்ன... ஆனந்த்?" என்று வினவினாள் நிர்மலா.

"வெரி..குட்.." என்று மகிழ்ச்சியோடு மெச்சினான் ஆனந்தன்." இப்போது எனக்கும் எவ்வளவு வசதி பார். உன்னிடம் மரியாதைப் பன்மையில் பேசவேண்டும் என்று அவ்வப்போது ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டியது இல்லை. மனதில் நினைப்பது போலவே நிர்மலா என்று அழைத்து ஒருமையில் விளித்துப் பேசலாம்..."

விழிகள் விரிய அவனைத் திரும்பிப் பார்த்தாள் நிர்மலா. "அதற்கு நான் அனுமதி தரவேண்டாமா?" என்றாள் தலையைச் சரித்து.

"ஆட்சேபிக்கமாட்டாய் என்பதில் அபார நம் பிக்கை! மாட்டாய்தானே?" என்று புன்னகையோடு அவன் கேட்டபோது அவளால் தலையசைக்கத்தான் முடிந்தது.

புன்முறுவல் மேலும் விரிய, "அடுத்த வேண்டு கோளை அவிழ்த்து விடட்டுமா? உன்னுடைய 'நைட் டியூட்டி'.நாட்களை முன்கூட்டியே தெரிவித்தாயானால் கண்ட சினிமாவில் அழுது வடிவதை விட்டு உன்னிடம் வந்து. " அவன் முடிக்குமுன் அவள் குலுங்கிப் போனாள்.

அவளது முகத்தில் அறைபட்ட அதிர்ச்சியைக் காணவும், "ஊகூம். தப்பாக ஏதும் இல்லை நிர்மலா. சும்மா வெறும் வாயரட்டைதான். இதோ, இப்போது போலத்தான்." என்றான் கனிவான குரலில்.

அவன் பார்வையில் இருந்த மென்மை அவளது நெஞ்சைக் கசக்கிற்று.

சமாளித்துக் கொண்டு, "பார்க்கிறவர்கள் தப்பாய் எண்ணுவார்கள். அதனால் ப்ளிஸ், வேண்டாம் சா.." என்று தொடங்கி அவனது பார்வையில், "ஆனந்த்" என்று முடித்தாள் நிர்மலா.

"ம்ம். . . " என்றவன் லேசாகத் தோளைக் குலுக்கி, "பரவாயில்லை..ஏதோ ஓர் உதவியேனும் - அரைகுறையாக என்றாலும் உன்னால் செய்ய முடிந்ததே பட்டினிக்கு கால் ரொட்டி மேல்தான்." என்றான் ஆனந்தன்.

வேதனையை அடக்கிக் கொண்டு," என் பஸ் நிற்கும் இடம் பக்கத்தில் தான். அதனால். . . " என்றவள் அவன் சிரிப்பதைக் கண்டு "என்ன" என்று வினவினாள்.

"உன்புஸ் என்கிறாயே! நான் தமிழ் நாடு அரசாங்க பஸ் என்று தான் இவ்வளவு நாள் நினைத்திருந்தேன். எப்போதம்மா விலைக்கு வாங்கினாய்? என்ன விலை?" என்று கேட்டு அவளைச் சிரிக்க வைத்துத் தானும் நகைத்தான்.

பிறகு, "பஸ் நிறுத்தம் வரை நானும் வருகிறேன்" என்று உடன் நடந்தபடி," நான் இன்று 'வாக்கிங்' வந்தது பற்றி அப்புறம் சொல்வதாகச் சொன்னேனே, பொதுவாக எதையாவது பற்றித் தீவிரமாக யோசித்து முடிவு எடுப்பதானால் இப்படி அதிகாலையில் தனியாக வெகுதூரம் நடப்பேன். இன்றும் அப்படித்தான்." என்றான்.

நெஞ்சுபடபடக்க, "எதைப்பற்றி யோசித்தீர்கள்?" என்று எழும்பாத குரலில் கேட்டாள் நிர்மலா.

உள்ளூரத் தன்யோசனையைத் தொடர்ந்தவன் போல, "இப்போது புதிதாக ஒரு "சென்ட்" தயாரித்துக் கொண்டு இருக்கிறோம். இது ஓர் உன்னத தயாரிப்பு. உயர்வான எண்ணங்களைத் தூண்டுகிற வாசனைக் கலவை. கிட்டத்தட்ட முடிவடைகிற நிலை. அதற்கு ஒரு பெயர் பொருத்தமான பெயர் தேடினேன். தேடிக் கண்டு பிடித்த பெயர் என்ன தெரியுமா? நிர்மல். நிர்மல் என்பது தான் எங்கள் புதிய தயாரிப்பிற்கு நான் வைத்திருக்கும் பெயர், நிர்மலா." என்றான் ஆனந்தன்.

உள்ளம் நெகிழ்ந்து போயிற்று அவளுக்கு.

கண்ணீரும் புன்னகையும் ஒருங்கேதோன்ற, "அ. . அதோ பஸ் வருகிறது. வருகிறேன்." என்று ஓடிச் சென்று அங்கே வந்து நின்ற பஸ்சில் நம்பரைக் கூடப் பார்க்காமல் ஏறிக் கொண்டாள் நிர்மலா.

எண்ணைப் பாராமல் நிர்மலா ஏறியிருந்த போதும் நல்லவேளையாக அது அவள் ஏறிச் செல்ல வேண்டிய பஸ்சாகவே இருந்தது.

சற்று அதிகாலை நேரமானதால் கூட்டமின்றி உட்கார இடமும் இருந்தது.

டிக்கட்டை வாங்கிக் கொண்டு ஓர் ஓரத்து இடத்தில் அமர்ந்து கொண்டவளுக்கு நெஞ்சுக்குள் ஒரே கலக்கம், களேபரம்.

சீதையைக் கண்டுவிட்டேன் என்றான். திருமணம் விரைவில் என்றான். உயர்ந்த எண்ணங்களைத் தூண்டுகிற உன்னத தயாரிப்புக்கு அவளது பெயர் என்றான்.

இதையெல்லாம் எண்ணி ஏழாவது சொர்க்கத்தில் நின்று பூரிக்க வேண்டிய மனம் இப்போது மேலும் மேலும் துக்கத்தில் ஆழ்ந்து பரிதவித்தது.

ஆனந்தனின் கம்பீரமான நடை, உடை, பாவனை, பேச்சுகள் அவளை ஏற்கனவே மிகவும் கவர்ந்திருந்தன. அவனுக்கும் அவளிடம் ஈர்ப்பு அதிகமாகவே இருந்ததை இன்னோரன்ன வார்த்தைகளால் அவனும் இப்போது தெளிவாகவே காட்டி விட்டான்.

ஆனால் அவளது ரகசியம் தெரிந்தால் இது என்னாகும்?

சூரியனைக் கண்ட பனிபோல இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடாதா?

ஒரு வேளை, ஒருவேளை அவளது நிலைமை புரிந்து அவளை அவன் மன்னிக்கக் கூடும். அதுகூட ஒரு கால்தான். பத்தில் ஒரு வாய்ப்பாகத்தான்.

ஆனால் அடியோடு அதை மறந்து மனைவியாக ஏற்பது நிச்சயமாய் நடவாத, நடக்க முடியாத காரியம்.

கையருகே வந்து நிற்கும் சொர்க்கம் கண்ணுக்கெட்டாத தூரத்துக்கு விலகிவிடப் போவதை ஐயம் திரிபற உணர்ந்த நிர்மலாவின் மனம் நிராசையுற்றுத் துடித்தது.

'ஹோ' வென்று நெஞ்சை அடைத்துக் கொண்டு அழுகை வந்தது.

ஆனால் மனம் விட்டுக் கதறக்கூட அவளுக்கு வாய்ப்பு ஏது?

பஸ்சில் அழமுடியுமா? வீடு செல்லுகிற வழியில் அழமுடியுமா? அன்றி வீட்டில்தான் அதுமுடியுமா?

பற்களை இறுகக் கடித்து துக்கத்தை அடக்கிக் கொண்டு வீட்டை அடைந்தவள், குளிக்கிற சாக்கில், குளியலறைக் கதவை அடைத்துக் கொண்டு, குழாயைத் திறந்து விட்டுக் கொண்டு வெகுநேரம் ஓசையற்று விம்மி அழுது தீர்த்தாள்.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை ஞாயிற்றுக் கிழமை இரு தினங்களிலும் நிர்மலாவுக்கு இரவு வேலை இருக்கும். இரவு ஒருமணி வரை விழித்திருந்து விட்டு மறுநாள் காலையில் வேலை செய்வது கடினம் என்பதால் அவளது வாரவிடுமுறையை இரண்டாகப் பிரித்து ஞாயிறு, திங்கள் இரு நாட்களின் முற்பகலில் எடுத்துக் கொள்வாள்.

அவளுக்கு நிர்வாகம் அளித்திருந்த சலுகைகளில் இதுவும் ஒன்று.

அன்று மதியம் வேலைக்குச் சென்றபோது, ஆனந்தன் காலை பதினோரு மணி விமானத்தில் பம்பாய் சென்று விட்டதை அறிந்து ஒருவாறு நிம்மதியுற்றாள்.

மறுநாள் காலையில் பயமற்று வீடு திரும்ப முடியுமல்லவா?

ஆனாலும் அவனை எண்ணி எண்ணி மனம் ஏங்குவதை அவளால் தடுக்கமுடியவில்லை.

ஆனந்தனோடு வெறும் ஏட்டிக்குப் போட்டி பேசுவதிலேயே 'டானிக்' குடிக்கும் உற்சாகம் பெற்று அவள் மகிழ்ச்சியாக இருந்தாளே.

அவள் மனதில் இத்தனை ஆசைகளைத் தூண்டிவிடாமல் அவன் சும்மா இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்குமே என்று ஏங்கினாள்.

இரண்டொருதரம் திரும்பிப்பார்த்து விட்டு, "அம்மாவுக்கு ஒன்றும் மோசமில்லையே, நிர்மலா?" என்று அஞ்சலி கேட்ட பிறகுதான் தன் முகபாவம் சரியாக இல்லை என்பதை உணர்ந்து, வெகுவாக முயன்று அதைச் சீர்படுத்திக் கொண்டாள் அவள்.

அந்த முறை ஆனந்தன் திரும்பி வரச் சற்று அதிக நாள் ஆயிற்று.

அதுவும் நல்லதாக, இடையறாது தனக்குத் தானே சொல்லிக் கொண்ட புத்திமதியால் நிர்மலாவின் மனம் ஒருவாறு அமைதியுற்றது.

இனி ஆனந்தன் வந்தாலும் கூட இந்த அமைதி கலையாமல் அவனுடன் எட்ட நின்றே பேசிப்பழக முடியும் என்கிற தைரியமும் கூட உண்டாயிற்று.

இந்நிலையில் ஆனந்தன் மீண்டும் திரும்பி வந்தான்.

உள்ளே இருந்த வருத்தத்தை மறைத்து அவனிடம் சாதாரணமாகப் பேச தன்னால் முடிவதைக் கண்டு நிர்மலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. பெருமையாகவும் தான். இதுபோதும். அவளது நிலைமைக்கு இதுவே பெரும்பேறு.

ஆனால் இந்த அமைதி, தைரியம், பெருமை எல்லாம் ஆடிச் சூறாவளியில் அகப்பட்ட இலவம் பஞ்சாகப் பறக்கப் போவதை அவள் அப்போது அறியவில்லை, ஆனந்தனே அந்தச் சூறாவளியாக ஆகப்போவதும் அவளுக்கு அப்போது தெரியாது போயிற்று.

# 7

அன்று நிர்மலாவின் வேலை நேரத்தில்தான் ஆனந்தன் ஒட்டலுக்கு வந்து சேர்ந்தான்.

டாக்ஸியை விட்டு இறங்கும் போதே அவன் குரல் நிர்மலாவுக்கு இனம் புரிந்து விட்டது. டெல்லியிலிருந்து விமான மூலம் வருகிறான் என்று ஊகித்தாள்.

டாக்ஸிக்குப் பணம் கொடுத்து விட்டு அவன் ஒட்டலின் உள்ளே வருவதைக் கீழ்க் கண்ணால் கவனித்தாள்.

இது தன்க்குரிய பரீட்சை என்பதை உணர்ந்து அத்தனை நாட்களாகத் தயார் செய்து கொண்டதை எல்லாம் அவசரமாக நினைவுக்குக் கொண்டுவந்தாள்.

ஆனந்தன் வந்து தனது வெண்ணிறப் பல் வரிசை தெரிய முறுவலித்து, "குட்மார்னிங்" சொன்னதும் அவளும் உதட்டளவில் வழக்கம் போலவே புன்னகை செய்து பதில் வணக்கம் கூறி வரவேற்றாள்.

அடுத்த வார்த்தை பேச இடம் கொடாது அவசரமாகத் திரும்பி, ரிஜிஸ்டரை எடுத்து, கவனத்துடன் பக்கம் பிரித்து, கையெழுத்துக்காக அவன் முன்னே வைத்தாள்.

அவனது பார்வையைச் சந்தியாமலே மீண்டும் திரும்பிச் சாவியை எடுத்து ரிஜிஸ்டரின் அருகே வைத்து விட்டு, சாமான் தூக்கி செல்லும் பையனை அழைத்துப் "பாண்டி, சாருக்கு வேண்டியதைச் செய்" என்று பணித்தாள்.

அடுத்து உள்ளிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து படுமும்முரமாக ஏதோ குறிப்புகளை எழுதத் தொடங்கினாள்.

அவளது குனிந்ததலையில் பார்வையைப் பதித்த ஆனந்தனின் இதழ்களில் குறுநகை படர்ந்தது, "மேடம்

வரவேற்பு படுபிசி போலத் தெரிகிறதே பேசக்கூட நேரம் இல்லைபோல?" என்றான் வேடிக்கையாக.

"ஆ. . ஆமாம் சார். சாரி சார்." என்று நிமிராமலே பதிலளித்து வேலையில் முனைந்தாள் அவள்.

முகம் மேலும் விகசிக்க, " ஒகே, வருகிறேன்" என்று கூறி லிஃப்டை நாடிச் சென்றான் அவன்.

லிஃப்ட் கதவு மூடியதும், சட்டெனத் தலையைத் திருப்பி மூடிய கதவை வெறித்தாள் நிர்மலா.

இதே கதை தொடர்ந்தது.

மறுப்போ எதிர்ப்போ காட்டாமல் ஒரு குறும்புப் பார்வையுடன் அவளது ஒதுக்கத்துக்கு மதிப்பு கொடுத்து விலகிப்போனான் ஆனந்தன்.

முதலில் சிறுவியப்புடன் நோக்கிய அஞ்சலி கடைசியில் பொறுக்கமாட்டாமல் கேட்டு விட்டாள், "ஊடலா, நிம்மி?" என்று.

'முதலில் பதில் கூறாமல் மவுனமாயிருந்த நிர்மலா வுக்கு உடனே மனம் சுட்டது. ஐந்து ஆண்டுகளுக்கும் அதி கமாகப் பெரியவள் என்ற போதும் அவளது வேதனைகளை பெற்றவர்களைப் பற்றிக்கூட ஒளிவு மறைவே இல்லாமல் அவளிடம் கொட்டியவள் இந்த அஞ்சலி. அப்படியிருக்க, நிர்மலா மட்டும் கவுரவம் பாராட்டிக் கொண்டு தனக்குள்ளேயே பூட்டிக் கொள்வது சரியாகுமா?

"நான்...என் வாரக் கடைசிகள் உனக்குத் தெரியுமல் லவா?" என்று தோழியிடம் வினவினாள்.

ஆமாம் என்பது போலத் தலையாட்டிவிட்டு, "ஆனால் நீ ஒரு நாளும் சொன்னதில்லை, நிர்மல். நானாக ஒரு சந்தேகத்தில் – ஏதேனும் தப்பில் மாட்டிக் கொள்கிறாயோ என்று கவலையால் நீ அறியாமல் பின்னே வந்து கண்டு கொண்டேன்." என்று மெல்லிய குரலில் கூறினாள் அஞ்சலி.

"அதுதான் விஷயம். இந்த . இந்த மேட்டுக்குடி மனிதர்களுக்கு இதெல்லாம்... நாமெல்லாம்... ஒத்துவ ராது அஞ்சலி." என்று சற்றுத் திணறியபடியே பதில் சொன்னாள் நிர்மலா.

தோழியின் கையைப் பற்றி லேசாக அழுத்தி விட்டு. "உண்மைக் காரணத்தைச் சொல்லிவிடேன். அது தெரிந்த பிறகும் கோபப்படுவாரா என்ன?" என்று கேட்டாள் அஞ்சலி.

"கோபம் வருத்தம் என்று எதற்காகவும் நான் எதையும் மறைக்கவில்லை, அஞ்சலி ஆனால். நிலைமை இப்படியேதான் இருக்கும். என் அவலத்தை ஒருவரிடம் சொல்லி, அதன் பிறகும் அப்படியே இருப்ப தற்குச் சொல்லுகிற அவமானத்தை மிச்சப்படுத்திக் கொள்ளலாம் இல்லையா?" என்று வரண்ட குரலில் உரைத்தாள் நிர்மலா.

சற்று யோசித்து, "மறைத்தே வைத்துவிட்டால்?" என்று வினவினாள் அஞ்சலி.

ஒரு கணம் ஆவலில் பளபளத்த கண்கள் உடனேயே மங்கிப் போயின. "அப்புறம் இந்த விஷயம் தெரிந்தவர்கள் எவரைக் கண்டாலும் நடுங்கிச் சாக வேண்டும். உன்னைப் பார்த்தாலும் கூடத்தான். வாய் தவறிப் பேசிவிடலாமில்லையா? ஊகூம். அது. . . ஒன்றும் சரிப்பட்டுவராது விட்டுவிடு அஞ்சலி" என்றாள் நிர்மலா சலித்த குரலில்.

சற்று நேரம் பேசாமல் இருந்து விட்டு, " கடவுள் நம் இருவரையும் படைக்காமலேயே இருந்திருக்கலாம்." என்றாள் அஞ்சலி சோர்வுடன்.

குறிப்புப் புத்தகத்தை மூடிவைத்து விட்டு அஞ்சலி யைத் திரும்பிப் பார்த்தாள் நிர்மலா. " ஏன், புதிதாக என்ன, அஞ்சலி? அதுதான் திருமணத்தை உன் பெற்றோர் ஆறப் போடச் சமமதித்து விட்டார்கள், இப் போதைக்குக் கவலை இல்லை என்று சொன்னாயே. அப்புறம் என்ன?"

"பாபு." என்றாள் அஞ்சலி.

"பாபு"

"ஆமாம். பாபுவேதான். அவருக்கும் பொறுமை 'ஸ்டாக்' இல்லையாம். முழுக்க தீர்ந்து விட்டதாம். இந்த ஞாயிறன்று என் வீட்டுக்குப் பெண்கேட்க வரப்போகிறாராம். வீட்டில் சம்மதித்து ஒழுங்காகக் கல்யாணம் செய்து கொடுத்தால் சரியாம். முடியாது என்றால் நான் வீட்டைவிட்டுக் கிளம்பி வந்தாக வேண்டுமாம். இதற்குச் சம்மதிக்கவில்லை என்றால்...

"சம்மதிக்கவில்லை என்றால் அவரை அடியோடு மறந்து விடவேண்டுமாம். அப்புறம் என்னால் எப்படி உயிரோடு இருக்க முடியும்?" என்று கூறிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் அஞ்சலி.

"ஒரு வேளை. . அஞ்சலி, ஒரு வேளை பாபுவை நேரில் பார்த்தால் உன் பெற்றோர் மனம் மாறினாலும் மாறக்கூடும்." என்று அவளைத் தேற்றமுயன்றாள் நிர்மலா.

"ஊ. .கூம்." என்றாள் மற்றவள் நிச்சயத்துடன்." பாபு நல்லவரா கெட்டவரா, என்னை வைத்துக் காப்பாற்று வாரா இல்லையா என்பது பிரச்சனையாய் இருந்தால் நீ சொல்வது போல அம்மா அப்பா மனம் மாறுவது சாத்தியம் தான். ஆனால் அங்கே என் சம்பளம் முழுவதுமாய்க் கைக்கு வருவது மட்டும் தான் பிரச்சனை. பாபுவுக்கோ திருமணமான பின் நான் வேலை பார்ப்பதே பிரியமில்லை. அதையும் மீறி வேலைபார்த்துச் சம்பளத்தைத் தருகிறேன் என்றால் வீட்டில் அதை நம்பத் தயாராயில்லை. குழந்தை குட்டி என்று வந்து வேலையை விட்டு விட்டால் கோர்ட்டுக்கா போகமுடியும் என்று பேசிக் கொள்கிறார்கள்!"

பேரன் பேத்தி என்று மழலைச் செல்வங்களைக் கொஞ்ச ஆசைப் படுவதற்கு மாறாக இப்படி ஒரு சுய நலமா?

நிராசையுற்று வேதனையில் தவித்த இரு நெஞ்சங்களும் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் அளிக்க முயன்று தோற்றனர்.

சனி, ஞாயிறு நெருங்க நெருங்க இரு பெண்களுக்குமே ஒரே தவிப்பு.

'நைட்டியூட்டி' யா என்று ஓட்டலிலோ, சாலையில் வீடு செல்கையிலோ ஆனந்தனைச் சந்திக்க நேர்ந்து விடக் கூடாதே என்கிற பதட்டம் நிர்மலாவுக்கு.

ஞாயிறன்று பாபு வீடு தேடி வரும்போது பெற்றோர் அவனை அவமானப் படுத்தி விரட்டுவார்களே, அதன் பின் வீடா, பாபுவா என்று முடிவு எடுத்தாக வேண்டும் என்கிற கலக்கம் அஞ்சலிக்கு.

சனிக்கிழமை மாலையில் இருவருமே ஒருவருக்கு ஒருவர் கடவுள் காப்பாற்றுவார் என்று தேறுதல் சொல்லிக் கொண்டு அந்த நம்பிக்கை அறவே இல்லாமல் பிரிந்து சென்றனர்.

இதற்கு நேர்மாறான மனநிலையில் இருந்தான் ஆனந்தன்.

கண்களில் ஒரு மிரட்சியுடன், உடலில் நாணேற்றிய வில்லின் விறைப்புடன் வரவேற்புப் பகுதியில் நின்று கொண்டிருந்த அந்தப் பெண் நிர்மலாவைப் முதல் முதலாகப் பார்த்த போதே அவனுள் எதோ ஒரு சிலிர்ப்பு.

அது ஏன் என்று வியப்புற்றவனாக அவளை மீண்டும் ஒருதரம் நோக்கினான்.

வாளிப்பான உடல் தான். அழகிதான். ஆனால் இவளைவிட அழகியர் உலகில் இல்லையா, என்ன?

புதுமாடு மிரள்வது வித்தியாசமாகத் தோன்றுகிறது போலும் என்று எண்ணியபடி, அஞ்சலியின் பக்கம் சென்று அவளிடம் சாவியைப் பெற்றுக் கொண்டு, அன்று உடன் வந்த பிங்கியின் இடையைத் தழுவியபடி அறைக்குச் சென்றான்.

ஆனால் அன்று ஏனோ பிங்க்கியிடம் லயிப்பு உண்டாகவில்லை.

அதற்காகப் பிங்க்கிக்குப் பதிலாக வரவேற்பில் முழித்துக் கொண்டு நின்ற அந்தப் பெண்ணைப் படுக்கையில் இழுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும் போலவும் தோன்றவில்லை.

சும்மா ஏதோ ஒரு தடை. இந்தத் தடை சென்னையில் மட்டும் என்று இல்லாமல் செல்வுமிடம் எல்லாம் தொடர்ந்தது.

விசித்திரமான வகையில் ஆத்திரமோ எரிச்சலோ உண்டாகவில்லை.

ஏதோ ஒருவகை நிம்மதி. ஓர் அமைதி!

சென்னைப் பயணங்கள் அதிகமாயின.

மற்றவர்களை அனுப்பிச் செய்யக் கூடிய வேலைகளுக்குக் கூட, சென்னை என்றால் அவனே வந்தான். என்னவோ ஓர் ஈர்ப்பு. வீடு வந்தாற் போல ஓர் உணர்வு.

அவ்வப்போது அவள் நிர்மலாவின் அருகில் நின்று வார்த்தையாடுவதில் ஒரு சுகம், ஒரு போதை, ஒரு விதக் கள்வெறி கொண்டது மனம்.

அவளும் அதற்குள் வேலையில் சுதாரித்துக் கொண்டுவிட்டாள் என்பது அவளது அமர்ந்த நடை, உடை பாவனைகளில் வெளிப்பட்டது. அவனோடு சரிக்குச் சரியாக வார்த்தையாடுவதிலும் தான்.

ஜோக் அடித்தால் என்ன அர்த்தம் என்று கேளாமல் பதிலுக்குக் காலை வாருகிற புத்திசாலித்தனம், பதில் சொல்லமுடியாமல் போகிறபோது மகாமும்முரமாய் வேலையில் ஈடு படுகிற பாவனை எல்லாம் மேலும் மேலும் அவன் மனதிற்கு ஆனந்தமூட்டின.

எண்ணி எண்ணி மகிழவைத்தன.

இவளோடு வாழ் நாள் முழுவதும் பேசிக் கொண்டே பேசிச் சிரித்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறதே என்று எண்ணவைத்தன.

அன்று சேலைகள், வண்ணங்கள் என்று கண்கள் பளபளக்க அவள் பேசியபோது காஞ்சிப்பட்டிலும், காசிப்பட்டிலுமாக வாங்கிக் குவித்து விடத்தான் ஆனந்தனுக்கு வேகம் வந்தது.

ஆனால் அவள் தவறாக எண்ணி அரண்டு விடக் கூடாதே என்று வெறும் 'கார்டனில்' வாங்கிவந்தான்.

ஆவலாக நோக்கியபோதும் அவற்றை நிர்மலா மறுத்த விதம் ஆனந்தனின் மனதில் வெகு அழுத்தமாகப் பதிந்து போயிற்று.

இதில் இரண்டு சேலைகளுக்காக இழுத்த இழுப்புக்கு வரக் கூடிய பெண்களை அவன் அறிவான். ஆனால் ஒருவித நிர்ப்பந்தமும் கிடையாது என்று அவன் உரைத்த பிறகும் வேண்டாம் என்று விட்டுவிட்டுப் போனாளே!

சீருடையாகக் கொடுக்கப்பட்டிருக்கும் கையில்லாத ரவிக்கையைக்கூட எவ்வளவு கண்ணியத்தோடு அணிகிறாள்!

கண்ணியம், ஒழுக்கம் என்பன்வற்றைக் கடைப்பிடித்ததோடு இல்லாமல் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்வதிலும் தான் அவளுக்கு எவ்வளவு கவனம்!

இரவு நேரத்தில் பக்கத்தில் வந்து நின்று பேசிக் கொண்டிருந்தால் கூட யாரவது தப்பாக நினைப்பார்கள் என்று பதறுகிறாளே!

இவளை மணக்கிறவன் எந்தக் கவலைக்கும் ஆளாகும் படி நேரவே நேராது. அப்படி ஒரு பாக்கியவானாக அவன் ஏன் இருக்கக் கூடாது?

எண்ணிப்பார்க்கப் பார்க்க மனம் அதில் உறுதி கொண்டது. அந்தப் புதிய சென்டைப் பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிமுகம் செய்து! என் மனைவிக்கு என் காணிக்கை இது; என் மனைவியின் பெயரும் நிர்மலா என்று அறிவித்தால் எப்... படி இருக்கும்!

ஆனால் நிர்மலா அவனை ஏற்பாளா?

ஒரு கணம் கதி கலங்கிப் போயிற்று அவனுக்கு.

அவன் பணக்காரன்தான். ஆனால் அவள் பணத்தில் மயங்குகிறவள் இல்லை என்பதை அந்தச் சேலை மறுப்பில் தெளிவாகக் காட்டி விட்டாளே!

வேறு என்ன இருக்கிறது அவனிடம்?

ஆள் பார்க்க நன்றாய்த்தான் இருந்தான். சந்தேகத்துக்குக் கண்ணாடி முன் சென்று நின்று ஆராய்ந்த பிறகும் அவனுக்கு அப்படித்தான் தோன்றியது.

ஆனால் அவனை விட அழகர்கள் எத்தனைபேர் இருப்பார்கள்!

அவர்களில் யாரிடமாவது அவள் மனம் ஏற்கனவே லயித்திருந்தால்?

இந்த எண்ணம் மனதைக் குடையத் தொடங்கிய பிறகு அவனால் எதிலும் நிம்மதியாக ஈடுபடமுடிய வில்லை.

புதிய 'சென்டின்' கலவை கண்டசி நிலையில் இருக்கும் போது அதுமுடியும் வரை காத்திராமல் இடையிலேயே இருதரம் சென்னைக்கு ஓடி – பறந்துவந்தான்.

பாவுவைப் பார்த்து முதலில் கலங்கியபோதும் அவன் அஞ்சலிக்காக வருவதை உடனே அறிந்து தெளிந்தான்.

ஆனந்தன் இலகுவில் எதையும் விட்டுவிடுகிறவன் அல்ல. ஏன் நினைத்துவிட்டால் அதை விடுகிறவனே அல்ல.

இப்போதும் தனக்குச் சாதகமான அத்தனையும் சேர்த்துக் குவித்து, சீர்தூக்கி ஆராய்ந்தான்.

அவனைக் கண்டு விட்டால் பூவென மலரும் நிர்மலாவின் முகம், அவன் வரக்கூடிய நேரங்களில் தன்னிச்சையாய்த் தேடும் கருவிழிகள், ஸ்விட்ச் போட்டாற் போல ஒளிரும் சிரிப்பு... எல்லாவற்றையும் விட அன்று பெயரைச் சொல்லி அழைத்தபோது அவளது கன்னங்க

ளில் பூத்த செம்மை. . . அத்தனையுமே அவனிடம் சம்ம நம் சம்மதம் என்று உறுதி கூறின.

நம்பிக்கையோடு வேலை செய்தான்.

சென்டின் இறக்குமதி தொடர்பான அத்தனை வேலைகளையும் முடித்துக் கொண்டு வந்துவிட்டான்.

சிங்கப்பூரை விட்டுக் கிளம்பும்முன் தாயாரிடம் ஒரு சின்ன நோட்டம் விட்டுப் பார்த்தான். புத்திசாதுரிய முள்ள அந்த அன்னை, "எனக்கு ஒரு மருமகள் வேண்டும். அவளும் நீயும் மனம் ஒருமித்து வாழ்ந்து எனக்குப் பேரன்பேத்திகளையும் பெற்றுத் தரவேண் டும். அவ்வளவுதான். வீட்டிற்கு வருகிற செந்தாமரை சேற்றில் மலர்ந்ததா, சீர்செனத்தி கொண்டுவருமா என்று நான் யோசிக்கப்போவது இல்லை." என்றாள் வெளிப்படையாக. மனம் நிறைந்த குதூகலத்துடன் மற்ற வேலைகளைக் கவனித்தான்.

புதிய சென்டை அறிமுகப் படுத்துவதற்காக நிருபர் கள் கூட்டத்திற்கும் நாள் குறித்தாகி விட்டது.

இனி நிர்மலாவிடம் விவரம் கூறி அந்த நாளைத் திருமண நிச்சய தினமாகவும் அறிவித்து விட வேண்டி யதுதான்.

அவனது பார்வையிலும் நடத்தையிலுமாக அவள் எதையும் ஊகித்து விட்டாளோ என்னவோ, திடுமென ஒரே வெட்கம் அவளுக்கு. வம்புப் பேச்சுக்கு ஆளாகி விடக்கூடாது என்கிற பயமும் இருக்கும் போலும். முன்போல் பேசக் காணோம்.

பேச்சை வளர்க்க இடம் கொடாமல் ஏதோ மகா வேலை செய்கிறமாதிரி அவள் நடிப்பதைக் கர்ண்கை யில் அவனுக்குச் சிரிப்புதான் வந்தது.

இதையெல்லாம் பிற்பாடு அவளிடம் சொல்லிச் சொல்லி கேலி செய்து சிரிக்கவேண்டும்.

என்னென்னவோ இனிய கற்பனைகள்.

உறக்கம் வரமறுத்தது.

எவ்வளவோ முயன்றும் இது இரவு, தூங்க வேண்டிய நேரம் என்பது அவனது உடலுக்குப் புரிவதாகவே இல்லை.

சிறு போராட்டத்தின் பின் தூங்கும் முயற்சியைக் கைவிட்டு எழுந்தான்.

இலகுவாக ஒரு குர்த்தாவை அணிந்து கொண்டு எதாவது கொறிக்கலாம் என்ற எண்ணத்தோடு 'காஃபி ஷாப்' புக்குள் நுழைந்தான்.

நுழைவாயிலின் அருகே இருந்த போர்டு, பக்கத்து ஹால் 'பாரடைசில் ஒரு ஸ்பெஷல்' விருந்து என்றது.

அதையே பார்க்கலாமே என்று அதற்குரிய டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு ஹாலுக்குள் சென்றான்.

இதமான ஏசிதான். ஆனால் அரையிருளில் ஆங்காங்கே மேசை நாற்காலிகளையும், அங்கே வீற்றிருந்தோரைச் சுற்றிச் சுற்றி வந்து ஆடிய, ஜிகினா பளபளத்த அரைகுறை ஆடையில் அழகியரையும் பார்க்கையில் ஏன் வந்தோம் என்று தோன்றிவிட்டது.

இதையெல்லாம் ஏனோ இப்போது அவனால் ரசிக்கவே முடியாமல் போய் விட்டது.

டிக்கட் பணம் வீணானாலும் பரவாயில்லை என்று சலிப்புடன் திரும்பியவனை மேடைமேல் சுற்றி வந்து கொண்டிருந்த வட்ட வடிவமான சிவப்பு ஒளி தடுத்து நிறுத்தியது.

'டேஞ்சர் லைட்'

நிர்மலாவுடனான பேச்சை நினைத்து முறுவலித்தபடியே மேடையே நோக்கியவனின் சிரிப்பு தானாக மறைந்தது.

சுற்றி வந்த சிவப்பு ஒளி மேடையின் நடுவே நின்று ஆடிக்கொண்டிருந்த பெண்ணின் மேல் நிலைத்து விட்டிருந்தது.

அங்கே லயம் தவறாமல் ஆடியபடியே, ஜிகினாச் சரங்களால் ஆன மேலங்கியைக் கழற்றி வீசியவள் நிர்மலா!

# 8

திகைப் பூண்டை மிதித்தாற்போல என்பார்கள் – ஆனந்தனும் சற்று நேரம் அப்படித்தான் மூச்சுவிடுகிற சிலையாகி விட்டிருந்தான்.

"சா. .ர்" என்று அழைத்த பேரரின் குரல் ஒருவாறு அவனை நடப்புக்குக் கொணர்ந்தது.

"என்ன?" என்றான் ஆனந்தன் வேறு எதுவும் சொல்லத் தோன்றாமல்.

சற்று விசித்திரமாய்ப் பார்த்துவிட்டு, "அங்கே ஒரு மேசை சாரி, சார். நீங்கள் அங்கே உட்காரலாம்." என்று ஒரு மூலையைக் காட்டினான் ஓட்டல் பணியாள்.

அமர்ந்து கொள்வது நல்லதுதான். அதுவும் ஓர் ஒதுக் குப்புறமாய் உட்காருவது மேல் என்று தோன்றவும் பேசாமல் அவன் காட்டிய இடத்தில் அமர்ந்து கொண்டான் ஆனந்தன்.

"என்னவேண்டும், சார்?" என்று ,பேரர் அவன் பணியைத் தொடரவும், "விஸ்கி ஒரு. ." என்று தொடங் கிய ஆனந்தன் உடனே மனம் மாறி, "ஒரு காஃபி நல்ல கறுப்பு காஃபி வேறு எதுவும் வேண்டாம்" என்று சொல்லி அவனை அனுப்பினான்.

இது மதுவில் மயங்குகிற நேரம் அல்ல. தெளிவாக– மிகவும் தெளிவாக சிந்தித்தாக வேண்டும். சிலபேரைப் போல விஸ்கி அவனது சிந்தனையை தூண்டுவது இல்லை.

முதலில், மெய்யாக இது நிர்மலாதானா?

கண்கள் அவளைவிட்டு விலக மறுத்து வெறித்து நோக்கி ஆராய்ந்தான்.

விற் புருவங்களைச் சற்று வித்தியாசமாக வரைந் திருந்த போதும், 'ஐஷாடோ'வும் 'மங்காரா'வும் தீற்றி

அகன்ற பெருவிழிகளை மீன்வடிவமாக மாற்றியிருந்த போதும், வடிவான இதழ்களைப் பெரிதாகத் தோன்றும் வண்ணம் சாயத்தினால் தீற்றியிருந்த போதும் அவள் நிர்மலா தான் என்பதில் அவனுக்குச் சற்றும் ஐய மில்லை.

தலையிலிருந்து கால்வரை அங்கங்கே ஒட்டியிருந்த பளபளதாளும், கூந்தலைத் தூக்கி கட்டியிருந்த விதமும் கூட அவளது அடையாளத்தை மறைக்க முயன்று அவ னிடம் தோற்றன.

கண்ணைப்பறிக்கும் சம்கி வேலை செய்த உள்ளா டைகளை மட்டும் அணிந்து இத்தனை பேர் பார்க்க வளைந்து நெளிந்து உடலழகைக் காட்டி ஆடுகிற இவள் அவனுடைய அடக்கமே உருவான நிர்மலாவேதான்.

என்ன வேடம் !

என்ன நடிப்பு !!

கையில்லாத ரவிக்கையைக் கூடக் கண்ணியமாக அணிகிறாள் என்று எண்ணினானே, இவளானால் ரவிக்கையே வேண்டாம் என்று கழற்றி வீசுகிறாளே!

இவளையா அவனது வீட்டுக்கு அரசியாக்க எண் ணினான்?

இவளையா அவனுடைய புனிதமான தாயாருக்கு மருமகளாக்க முடிவு செய்தான்!?!

என்ன மடத்தனம் ! நாயை நடு வீட்டில் வைக்க நினைத்தானே சீ ச்சீ.

ஆனால் நாய்க்கும் ஓர் இடம் உண்டு.

அந்த 'பிங்க்கி' யின் நினைவு வந்தது.

அவன் முகத்தில் கல்லின் கடினம் உண்டாயிற்று.

மீண்டும் ஒரு தரம் மேடையை வெறித்தவன், பையி லிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து மேசை மேல் போட்டு விட்டு அங்கிருந்து வெளியேறினான்.

மறுநாள் காலையில் முக்காடிட்ட தலையுடன் இங்கும் அங்கும் கவனமாகப் பார்த்துவிட்டு நிர்மலா

ஒட்டலை விட்டு வெளியேறி ஓட்டமும் நடையுமாகச் செல்வதை ஒளிந்திருந்து கவனித்தான் ஆனந்தன்.

இதுதான் நைட்டியூட்டியா?

ஆனால் இது மட்டும் நைட்டியூட்டியாக இருக்கும் என்று நம்ப அவன் இன்னமும் மடையனல்லவே!

அன்று மாலை நிர்மலா வேலையைத் தொடங்கும் நேரத்தை அறிவதில் சிரமம் இருக்கவில்லை.

மார்டிவராண்டாப் பக்கமாய் மறைவாய் நின்று அவளைக் கண்காணித்தான் ஆனந்தன்.

அவ்வப்போது லிஃப்டின் கதவு திறக்கும் போதெல்லாம் நிர்மலாவின் பார்வை அந்தப் பக்கம் பாய்ந்து சென்று ஏமாந்து மீள்வதைக் கண்டான். ஏளனமாய் சிரித்துக் கொண்டான்.

கொக்கு உறு மீன் தேடி வாடியிருக்கிறதாக்கும்! ஆனால் இந்த ஆனந்தன் கொக்கை எரித்துப் பொசுக்கி விடக்கூடிய கொங்கணவன் என்று அறியாமல் விளையாடி விட்டாள், பாவம்.

சற்றுப் பொறுத்து ஒன்றும் அறியாதவன் போல் லிஃப்ட் மூலம் கீழே சென்று நிர்மலாவை நெருங்கிச் சாவியை நீட்டினான் ஆனந்தன்.

சில தினங்களாகச் செய்வது போலவே, இடது கையால் எதையோ அடுக்குவது போன்ற பாவனையோடு கண்களை அந்த வேலையில் பதித்தபடி சாவிக்காக வலது கையை நீட்டினாள்.

சாவியை அவளது உள்ளங்கையில் வைத்து, சாவியோடு கையையும் தொட்டு அழுத்தினான் ஆனந்தன்.

திடுக்கிட்டு நிமிர்ந்த படி கையை உருவிக் கொண்ட வளின் முகம் ரத்தமெனச் சிவந்து போயிற்று.

என்ன ஜாலம்! இப்படி வினாடிக்குள் முகத்தில் சிவப்பு ஏற்றிக் கொள்கிற வித்தை அறிந்தவள் உலகத்திலேயே இவள் ஒருத்தியாகத்தான் இருக்கமுடியும்.

கை பட்டது பற்றி ஒரு சாரி கூட சொல்லாமல் ஓர் அலட்சிய பாவணையுடன் ஆனந்தன் நிற்கவும் நிர்மலா மேலும் மனம் திகைத்தாள்.

இவன் ஒரு நாளும் தரக்குறைவாய் நடந்து கொண்டவன் இல்லையே.

ஒரு வேளை அவன் அறியாமல் கைபட்டு, அதை அவன் கவனிக்கவே இல்லையோ?

ஆனால் கை நன்றாக அழுந்தினாற்போல அவள் உணர்ந்தாளே!

இந்தக் குழப்பத்தை அவனிடம் என்னவென்று கேட்டுத் தெளிவு செய்வது? அதற்கு வகையும் மனமும் அற்று, பேசாமல் சாவியை அதற்குரிய எண்ணிட்ட இடத்தில் எடுத்து வைத்து விட்டு தன் வேலையைத் தொடரமுயன்றாள்.

ஆனால் அத்துடன் விடமனமற்று, "இன்றென்ன, சிவப்புச் சேலையா, நிர்மலா? ஆனால் இன்று இதைப் பார்க்கும்போது அபாய அறிவிப்பை விட பொருத்தமாய் வேறு ஒன்று தோன்றுகிறது. . என்னவென்று தெரிகிறதா? சிவப்பு விளக்குப் பகுதி. . . ஆமாம், அதற்கும் இதுதானே நிறம்?" என்று அறியாதவன் போல விசாரித்தான் ஆனந்தன்.

மேலும் பிரமித்து விழித்தவளை நோக்கி, உதடுகளைக் காது வரை இழுத்து முறுவலித்து விட்டுத் திரும்பித் தன் வழியே போனான் அவன்.

காரணம் புரியாமல் அடிவாங்கிய அப்பாவிக் குழந்தை போல, ஆகா, என்ன அற்புதமான நடிப்பு! என்று கொதித்தது அவன் மனம்.

இந்த மாதிரி 'போஸ்' களில் மயங்க இனி அவள் வேறு ஆள்தான் பிடித்தாக வேண்டும்.

ஆனால் அதற்குமுன், இவளைப் பார்த்ததிலிருந்து பிரம்மச்சரியம் காத்த பைத்தியக்காரத்தனத்துக்கெல்லாம் இவள் ஈடுகட்ட வேண்டாமா?

மறுநாள் காலையில் அவள் வீடு திரும்பும் வழியில் காத்திருந்தான்.

ஒட்டலைவிட்டுக் கிளம்பி, யாரும் முக்கியமாக ஆனந்தன் பார்க்கவில்லை என்ற நிம்மதியோடு– நிம்மதி என்று எப்படிச் சொல்வது? அவன் சிவப்பு விளக்குப் பகுதியைப் பற்றிக் குறிப்பிட்டதிலிருந்து அவளுக்குள் நம நம வென்று ஒரே வேதனைதான். அந்த வேதனையோடு நடந்து கொண்டிருந்தவளுக்குப் பாதி வழியில் அவன் குறுக்கிட்டதும் தூக்கிவாரிப் போட்டது.

ஒருவாறு சமாளித்துக் கொள்ளுமுன், "நேற்றும் நைட்டியூட்டியா, நிர்மலா?" என்று விசாரித்தான்.

'ஆமாம்' என்றாள். அவள் சுருக்கமாக.

"நினைத்தேன். ஆனால் நேற்று டீ குடிக்க நெடுநேரம் எடுத்துக் கொண்டாய் போல. நான் பார்த்த ஒரு முழுமணி நேரமும் உன்மீசைக் கார பாலன்சார் தான் வரவேற்பில் அமர்ந்திருந்தார்..." என்றான் ஆனந்தன் ஒரு மாதிரிக்குரலில்.

நிர்மலாவின் இதயம் வேகமாகத் துடித்தது.

இவன். இந்த ஆனந்தன் எதையோ அறிந்து கொண்டு விட்டானோ என்று ஐயமுற்றுக் கலங்கியது அவள் மனம்.

"அல்லது நீ போனது டீ குடிக்க அல்லவோ? வேறு வேலை. ஏதோ வேறு வேலையாகப் போயிருந்தாயோ?"

சந்தேகம் இல்லை. இவனுக்கு விஷயம் தெரிந்து விட்டது. நேற்றிலிருந்து இவன் நடந்து கொள்ளும் முறைக்கு அதுதான் விளக்கம். இது தெரியாமலே விலகி விடக்கூடாதா என்று ஆசைப் பட்டது நடக்கவில்லை. ஆனால் சிலகாலமாக நிர்மலா, ஆசைப் பட்டதுதான் நடந்தது.

நின்று, அவனது குத்தல் பேச்சைக் கேட்க்கும் மன மற்று, "நான் சீக்கிரமாக வீட்டுக்குப் போக வேண்டும் அதனால். ." என்று வேகமாக நடக்க முயன்றாள் நிர்மலா.

ஓர் ஏட்டில் அவள் முன்னே வந்து அவளது வழியை மறைத்து நின்றான் ஆனந்தன்.

ஆள் நடமாட்டம் இல்லாத காலை நேரச் சாலையும் அவனது நடத்தையும் நிர்மலாவைச் சற்று நிலைகுலை யச் செய்தன. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இறுகிப் போய் நின்றாள் அவள்.

"ஒரே ஒரு கேள்வி. அதற்கு மட்டும் நீ பதில் தந்து விட்டால் நான் வழி விட்டு விடுகிறேன்." என்றவன் அவளது விழிகளை நேராக நோக்கி, "இன்று நைட் டியூட்டி பார்க்க என் அறைக்கு வருகிறாயா?" என்று கேட்டான்.

உச்சிமுதல் உள்ளங் கால்வரை தீ யாய் எரிந்தது, நிர் மலாவுக்கு. செய்வது இன்னது என்று அறியுமுன்பே தன்னிச்சையாய் அவளது கை ஓங்கியிருக்க வேண்டும்.

ஏனெனில் அவளது ஓங்கிய கை அவனது முகத்தில் வேகமாக இறங்குமுன் அதைப் பற்றி நிறுத்தி, "உள்ள தைச் சொன்னால் உடம்பு எரிகிறதோ? நீ அடிப்பதற்குக் கன்னத்தைக் காட்டி கொண்டு நிற்க நான் என்ன பைத் தியக்காரனா?" என்று ஏளனமாக கேட்டான் ஆனந்தன்.

தன்கையை விடுவித்துக் கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியாமல் போகவே, "கையைவிடுங்கள், மிஸ்டர் ஆனந்தன்." என்றாள் நிர்மலா ஆத்திரத்துடன்.

"மிஸ்டர் ஆனந்தனா?"அவன் உரக்க நகைத்தான். "தேவையே இல்லை நிர்மலா தேவி. இனி நாம் அடையப் போகும் நெருக்கத்துக்கு இந்த அன்னிய பேச்சு சற்றும் பொருந்ததாது" என்றான் எகத்தாளமாக.

மிகவும் சிரமப்பட்டு உள்ளே பொங்கிய சினத்தை யும், வேதனையையும் அடக்கிக் கொண்டாள் நிர்மலா.

"பாருங்கள், மிஸ்டர் ஆனந்தன். எனக்கு ஒரு பணத் தேவைக்காக இந்த. . இந்த நடனம் ஆடுகிறேன். அவ்வளவுதான். அதற்கு மேல் நீங்கள் நினைக்கிற மாதிரிப் பெண் நான் அல்ல" என்று தன்னால் இயன்ற அளவு அமைதியான குரலில் விளக்கினாள்.

ஆனால் அவன் அதைக் காதில் வாங்கிக் கொண்டால் அல்லவோ? அவளை மேலும் குதறுவதற்கு வகை செய்த வார்த்தையை மட்டுமே எடுத்துக் கொண்டான், "நடனமா?" என்று உரக்க நகைத்தான். "இதன் பெயர் நடனமா? ரொம்பவும் அதிகப்படியாய் நாகரீக வர்ணம் பூசுகிறாயே. சும்மா அவிழ்த்துப் போட்டு விட்டு ஆடுகிற ஆட்டம் என்று உண்மையைச் சொல்லேன். ஆமாம், இந்த ஆட்டத்தில் ஏதோ ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த மிச்சம் இரண்டையும் கூடக் கழற்றி வீசி விட்டு ஆடுவார்களாமே, நீ என்றைக்கு என்று சொன்னால் நானும் வந்து பார்த்து ரசிக்கிறேன்."

நெஞ்சம் பிளந்து விடும் போலான வரியைச் சகித்துக் கொண்டு கையை விடுவித்துக் கொள்ளப் போராடினாள் அவள்.

ஆனால் எளிதாகவே அவளைப் பற்றி நிறுத்தியிருந்தவன் மேலும் குத்தி ரணமாக்கினான். "ஆனால் நாலுபேரோடு நானும் ஒருவனாக நிற்பதை விட, தனிமையில் நான் மட்டுமே ரசித்தால் இன்னும் நன்றாயிருக்கும். எதற்காகத் தயங்குகிறாய்? ஒரு வேளை ஏதாவது ஏஜன்சியில் கட்டுப் பட்டிருக்கிறாயா? ஏஜென்சி பெயர் சொன்னால் அவர்கள் மூலமே உன்னை ஏற்பாடு செய்து கொள்கிறேன்."

இன்னும் எத்தனை குத்து குத்துவான்? கையை விடுவித்துக் கொள்ளும் வலுக்கூட அவளுக்கு இல்லையே கடவுளே...

நல்லவேளையாக அப்போது ஓர் ஆட்டோ ரிக்ஷா வரும் சத்தம் கேட்டது.

"ஆட்டோ" என்று உரக்கக் கூவினாள் நிர்மலா.

ஆட்டோ நெருங்கிவரவும் ஆனந்தன் அவளது கையை விட்டுவிட, அவசரமாக வண்டியில் ஏறி அமர்ந்தாள் நிர்மலா.

மீட்டருக்கு மேலே இரண்டு ரூபாய் போட்டுக் கொடுக்க வேண்டும்» என்ற டிரைவரிடம் மறுக்காமல் தலையசைத்து, செல்வுமிடம் சொல்லி விட்டு தலையைக் கையில் தாங்கிய படி இருக்கையில் சாய்ந்தாள் அவள்.

சற்று நேரம் அவளுக்கு சரியாக மூச்சுகூட விடமுடியவில்லை. நாகூசாமல் என்ன வெல்லாம் சொல்லிவிட்டான்.

இந்த ஆட்டத்தையே உயிரை வெறுத்து ஆடிவிட்டு உள்ளம் மறுகுகிறவளை நெஞ்சில் கொஞ்சமும் ஈரமற்று எப்படி யெல்லாம் பேசி வதைத்து விட்டான்.

இவன் வருகைக்காகவா ஏங்கி ஏங்கிக் காத்திருந்தாள்? இவனையா எட்டாத கொம்புத்தேன், எண்ணி ஏங்கக் கூடத் தனக்குத் தகுதியில்லை என்று வருத்தத்துடன் மறக்கமுயன்று கொண்டிருந்தாள்?

'உண்மையை சொல்லிவிட்டால்' என்றாளே அஞ்சலி. நின்று ஒரு வார்த்தை கேட்கும் எண்ணம்கூட இல்லையே.

வழக்கம் போலக் குளியலறைச் சரணாலயத்தில் ஒரு மூச்சு அழுது தீர்த்தாள். மனது கொஞ்சம் லேசாயிற்று நிர்மலாவிற்கு.

இரவில் துணைக்கு இருந்த ஆயாவை அவளது வீட்டுக்கு அனுப்பிவிட்டு வீட்டு வேலைகளை விரைவுடன் முடித்தாள். இது மாதிரி நாட்களில் வேலை முடிந்ததும் சற்று நேரம் படுத்து உறங்கி விடுவது அவளது வழக்கம்.

ஆனால் அன்று படுக்கத் தோன்ற வில்லை.

அன்னையில் கட்டிலருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, ஆதரவு தேடும் குழந்தையாகத் தாயின் கையைப் பற்றியபடி நாற்காலியில் அமர்ந்து

படுக்கையில் லேசாகத் தலையை சாய்த்துக் கொண்டாள்.

லேசாகச் சரிந்து மறு கையில் மகளின் தலையை வருடி, "என்னம்மா?" என்று கேட்ட கோதையிடம், மீண்டும் துளிர்த்த கண்ணீரை அடக்கிக் கொண்டு, "சும்மா உங்களைத் தொட்டுக் கொண்டு இருக்க வேண்டும் போல இருக்கிறதம்மா?" என்று மெல்லிய குரலில் உரைத்தாள்.

மேலே பேசாமல் தாயார் மகளின் தலையை மீண்டும் மென்மையாக வருடவும் அவளது வலிக்கு அதுவே மருந்தாக அப்படியே தூங்கிப் போனாள் நிர்மலா.

மதியம் வேலைக்கு கிளம்பும்போது, தூக்கு மாட்டிக் கொள்ளச் செல்லும் கைதிபோல் உணர்ந்து தவியாய்த் தவித்தபடிதான் நிர்மலா வீட்டை விட்டு வெளியேறி னாள்.

ஆனால் இந்தத் தவிப்பினால் என்ன லாபம்?

இந்த உறவுக்கு நல்ல முடிவு கிட்டாது என்பது ஏற்க னவே அவள் அறிந்ததுதானே.

வருத்தத்துடன் வில்காமல் வெறுப்பைக் கொட்டுகி றான். வருத்தம், வெறுப்பு இரண்டுமே ஒவ்வாத உணர்ச்சிகள்தானே. வருத்தத்தை ஏற்க தயாராக இருந்த வளுக்கு இந்த வெறுப்புக்காகத் தனியாக ஒரு தவிப்பு எதற்கு?

அப்பாவை இழந்தது போல, படிப்பைப் பாதியில் இழந்தது போல இதுவும் ஓர் இழப்பு. அவ்வளவுதான்.

அவ்வளவேதான் என்று வரும் வழியெல்லாம் யோசித்து ஒருவாறு தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள் நிர்மலா.

ஆனால் முன்தினம் சிவப்பு விளக்கு என்று ஆனந் தன் பேசத் தொடங்கியதிலிருந்து நினைத்துப் பார்த் தால் நிர்மலாவை முடிந்தால் வார்த்தைகளாலேயே

கொன்று விடும் வெறி அவனுக்கு இருப்பது நன்றாகவே தெரிந்தது.

ஆனால் வார்த்தைகள்தானே, அவை அவளுக்கும் உரியவைதானே.

ட்திலுக்குப் பதில் பேசிப் பழக்கமும் இருக்கிறது.

அவள் வேதனையைக் காட்டிக் கொண்டால் தானே அவனுக்கு வெற்றி.

பெற்ற மகனின் வெட்டுண்ட தலையை கண்ணெதிரே வைத்த பிறகும் முகத்தில் வேறுபாடு காட்டாமல் விருந்துண்ட வித்யா சங்கரர்தான் ஏற்கனவே வழி காட்டி இருக்கிறாரே!

தொய்ந்த முது கெலும்பை நிமிர்த்தி வைத்துக் கொண்டு தன் இடத்திற்குச் சென்று அமர்ந்தாள் நிர்ம்லா.

ஆனால் அங்கே அஞ்சலியைக் காணாமல் சற்று திகைத்தாள். பிறகுதான், அந்த ஞாயிற்றுக் கிழமை அஞ்சலியின் வாழ்விலும் ஒரு திருப்பு முனை என்பது அவளுக்கு நினைவுவந்தது.

அஞ்சலியின் வீட்டில் என்ன நடந்ததோ? பாவம். அவள் நிலை எப்படி இருக்கிறதோ? தன் சொந்த வேதனையிலேயே உழன்றவளுக்குத் தோழியைப் பற்றிய நினைவு வராது போயிற்று.

உடம்பு சரியில்லை என்கிற காரணத்தைக் காட்டி அஞ்சலி ஒரு வாரம் லீவு எடுத்திருக்கிறாள் என்பது தெரியவும் நிர்மலாவுக்கு கவலையாக இருந்தது. பாவு விஷயம் படு தோல்வி என்பதை ஊகிக்கமுடிந்தது. ஆனால் இந்த ஒரு வார லீவு மனதைக் கலக்க அவள் வீடு சென்று பார்த்து வரவேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். நிர்மலா அஞ்சியது போலவே ஆனந்தன் அவள் அருகே வந்து நின்று பேச்சுக் கொடுத்தான்.

அஞ்சலிக்குப் பதிலாக அதுவரை பொறுப்பேற்று நின்று கொண்டிருந்தவர் வேறு. "இனி நீ பார்த்துக்

கொள்வாய் அல்லவா? எனக்கு டைனிங் ஹாலில் வேலை இருக்கிறது." என்று சென்றுவிடவும் அவன் பேச்சைத் தனியே நின்று சகிக்கும்படியும் ஆயிற்று.

முதல் கேள்வியே, "இன்றிரவு என் அறைக்கு வருகிறாயா?" என்பதுதான்.

கையிலிருந்த ரிசர்வேஷன் ரிஜிஸ்டரை அவன் முகத்தில் ஓங்கி அடிக்கும் உந்துதலை அடக்கிக் கொண்டு, "இல்லை. முடியாது" என்று சாதாரணமான குரலிலேயே பதிலளித்தாள் நிர்மலா.

"நாளைக்கு?"

"இல்லை வசதிப்படாது"

"வேறு என்றைக்கு?"

"ஒரு நாளும் இல்லை"

குரலோ முகமோ மாறாமல் அவள் சொன்னவிதம் அவனுள் ஆத்திரத்தைக் கிளப்பியதோ!" புதிய சென்ட் அறிமுகத்தை நிறுத்திவிட்டேன்." என்றான் திடுமென. "அதன் தயாரிப்பில் ஒரு மாற்றம் செய்யவேண்டியிருந்ததால் இதை ஒத்திப் போடும்படி ஆயிற்று. என்ன மாற்றம் தெரியுமா?"

"அது உங்கள் தயாரிப்பு. மாற்றுவதும் நிறுத்துவதும் உங்கள் விருப்பம். அது என்னவென்று எனக்குத் தெரியாது. அதை அறிந்து கொள்ளும் ஆர்வமும் எனக்கு இல்லை" என்று சாதாரணக் குரலிலேயே கூறிவிட்டு, ஓட்டலில் தங்கியிருப்பவர்கள் ஆர்டர் செய்த உணவு பற்றிய தனிக் குறிப்புகளை எடுத்துப் பார்க்கத் தொடங்கினாள் நிர்மலா.

"ஊகூம். இப்படிச் சொன்னால் எப்படி? சென்டின் பெயர் உன்னுடையதாயிற்றே, அதனால் இந்த உன்னதம் உயர்வாலே எண்ணத் தூண்டுதல்களை தூக்கி எறியச் சொல்லிவிட்டேன். பதிலாகக் கொஞ்சம் மட்டரகமாய்ப் பாலுணர்வைத் தூண்டும் விதமாய்த் தயாரிக்கச் சொல்லி இருக்கிறேன். சுலபமாகப் பணம்

பண்ணலாம் என்பதோடு பெயருக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும் இல்லையா?" என்றான் அவன் இனிய குரலில் இடக்காக.

குத்துகளை எதிர்பார்த்திருந்ததால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள நிர்மலாவால் முடிந்தது. "நிர்மலா என்கிற பெயர் உலகத்தில் எத்தனை பேருக்கு இருக்கிறதோ" சாதாரணக் குரலில் பதிலளித்துவிட்டு, திரும்பி அவனுக்கு முதுகு காட்டி நின்றபடி சாவிகள் எல்லாம் அததற்கு உரிய அறையில் இருக்கின்றனவா என்று சரிபார்க்கத் தொடங்கினாள்.

என்னதான் மெதுவாகச் செய்தாலும் எந்த வேலையும் முடிந்துதான் தீரும் இல்லையா?

வேலை முடிந்து அவள் திரும்பும் வரையில் விடாக் கண்டனாக அங்கேயே நின்றான் ஆனந்தன். அவள் திரும்பியதும், "உலகத்தில் உள்ள அத்தனை நிர்மலாக்களின் பெற்றோரும் தங்கள் மகள் மாசு மறுவற்றவளாக திருக்க வேண்டும் என்று எண்ணித்தானே இந்தப் பெயர் சூட்டியிருப்பார்கள்?" என்றான் யோசிப்பது போன்ற பாவனையுடன்.

"தெரியாது அவர்களில் யாரும் என்னிடம் அது பற்றிக் கலந்து ஆலோசிக்கவில்லை" என்று நறுக்கென முகத்தில் அடித்தாற்போல நிர்மலா பதில் கொடுக்கவும் ஆனந்தன் முகம் கருத்து விட்டது.

யாரை மட்டம் தட்டுகிறாள் என்கிற ஆத்திரத்துடன் "குறைந்தபட்சம் உன் பெற்றோர் உன்னிடம் யோசனை கேட்டிருக்க வழியில்லை. கேட்கமுடிந்திருந்தால் 'இந்தப் பெயர் எனக்கு பொருந்தவே பொருந்தாது' என்று மறுத்திருப்பாய் சரிதானே?" என்று சிரித்த முகத்துடனே குத்தினான் அவன்.

ஆனந்தனை வெறித்து பார்த்தாள் நிர்மலா.

ஒருவரை எவ்வளவுதான் துன்புறுத்துவது என்று இல்லையா?

"தயவு செய்து இங்கிருந்து போய்விடுங்கள். ஆனந். சார். நீங்கள் இங்கேயே நின்று பேசிக் கொண்டிருந் தால் பார்ப்பவர்கள் தவறாக எண்ணக்கூடும்" என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

இருவருக்குமே அவள் ஆனந் என்று அழைத்தது நினைவு வந்து, அவள் துக்கமும் அவன் ஆத்திரமும் அடைந்தார்கள். அவளது பார்வையால் விளைந்த உறுத் தல் வேறு.

இன்றைய நிலையில் அவனது கோபம் எரிச்சல் அத்தனைக்கும் வடிகால் அவள்தானே. "நீ சொல்வது சரிதான். உடனை ஒத்துக் கொண்டுவிட்டுத் தொடர்ந்து, உன்னைப் பற்றிக் கவலையில்லை. எப்படியும் இங்குள் ளவர்களுக்கு உன்னைப் பற்றித் தெரிந்துதான் இருக்கும். ஆனால் உன்னைப் போன்ற பெண்ணுடன் நாலு பேர் பார்க்க நின்று பேசுவது எனக்குக் கேவலம்தான். எடுத்துச் சொன்னதற்கு நன்றி" என்று கடைசியாக ஒரு அம்பை எய்து விட்டுச் சென்றான் அவன்.

அவ்வளவு நேரம் தளர்வற்றுப் பேசியவள், கால்கள் நடுங்குவதை உணர்ந்து அவசரமாக நாற்காலி யில் அமர்ந்து மூச்சு வாங்கினாள்.

இப்படி வருகிறாயா என்று கேட்டதிலும் இவன் தான் முதல் என்று இல்லை. ஆனால் அஞ்சலி கற்றுக் கொடுத்த மாதிரியில் சிரித்த முகமாகவே அதை வெறும் கேலிபோலாக்கி இலகுவாக மறுத்து விடுவாள்.

இவனது பேச்சினால் மட்டும் அவள் ஏன் இவ்வ ளவு பாதிக்கப்பட வேண்டும்? தன் நெஞ்சறிய பொய் புகலமுடியுமா? பாதிப்பு ஏன் என்று அறிந்ததாலேயே பாதிப்பு இன்னமும் அதிகமாகிப் போயிற்று.

# 9

காலையில் சென்றுவர நேரமிராது என்பதால் மாலை வீடுதிரும்பும் போது அஞ்சலியின் வீட்டுக்குச் சென்றாள் நிர்மலா.

அங்கே தோழியோடு ஒருவார்த்தை கூட அவளால் தனித்துப் பேச முடியவில்லை.

அண்டை கொடுத்தது போல அஞ்சலியின் பெற்றோர் அவர்களுக்கு இருபுறமும் உட்கார்ந்து கொண்டு அசையவே இல்லை.

கையோடு வாங்கிவந்திருந்த திராட்சைப் பழத்தைக் கொடுத்து விட்டு, பொதுவாக நலம் விசாரித்தாள் நிர்மலா.

அஞ்சலி பேச வாயெடுக்கும் முன், "நேத்திலே இருந்து ஒரே காய்ச்சல் . . ஒய்ச்சலாக குழந்தை படுத்துக் கிடக்கட்டும் என்றால் கண்ட நாய்களும் தொல்லை கொடுக்க வந்து விடுகிறதுகள். அய்யய்யோ, உன்னைச் சொல்லவில்லை பாப்பா. நான் நேற்று வந்த வர்களைச் சொன்னேன். எலும்புத் துண்டுகளுக்குப் பறக்கிற பிறவிகள். அதான், பேசாமல் ஒருவாரம் லீவு போட்டுவிடு எந்த நாயும் அண்டாமல் நாங்கள் கூடவே இருக்கிறோம் என்று சொல்லி விட்டேன். உனக்கும் நேரமாகிவிட்டது. உன் அம்மா–அவர்கள் வேறு சீக்கா ளியாமே, அஞ்சலிக்கண்ணு முன்னே ஒருதரம் சொன்னது பாவம், காத்துக்கிடப்பார்கள். கிளம்பும்மா" என்று நிர்மலாவைக் கழுத்தில் கைவைத்துத் தள்ளாத குறையாக வழியனுப்பி வைத்தார்கள்.

சினேகிதியின் அழுது வீங்கிய முகத்தைப் பார்த்து உள்ளூர வேதனைப்பட்டபடியே அங்கிருந்து கிளம்பி னாள் நிர்மலா.

என்ன நடந்திருக்கக் கூடும் என்று ஊகிக்க முடிந்தது. அஞ்சலியின் தாயார் 'நாய்' என்றது பாபுவைத்தான்

என்பது உடனே புரிந்து விட்டது நிர்மலாவுக்கு. அது போலவே பாபுவைப் பற்றிய பெற்றோரின் அபிப்ராயம் அஞ்சலிக்கும் தெரியும்தானே. ஞாயிறன்று என்ன நடக்கும் என்பதுவும் பெருமளவு அஞ்சலி அறிந்தது தான். அப்படியிருக்க முகம் வீங்கும் அளவு அழுவது என்றால் எங்கோ உதைத்தது. அஞ்சலியைப் பற்றிய கவலையில் நிர்மலாவுக்குத் தன் சொந்த வேதனை கூட அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை.

என்னவோ ஒன்றுமே இல்லாததுபோல ஒய்ந்து கிடந்த முகம் ஓயாமல் நினைவு வர கோழைத்தனமாக அவள் ஏதாவது செய்து கொண்டு விடக்கூடாதே என்று ஒரே கலக்கமாக இருந்தது அவளுக்கு.

மறுநாள் வேலைக்குச் சென்று, ஒன்பது மணிவரை காத்திருந்து, பாபுவின் அலுவலகத்துக்கு டெலிஃபோன் செய்து விசாரித்தாள்.

பாபு கோபத்திலிருந்தான். "பின்னென்ன மிஸ் நிர்மலா, அவள் ஒன்றும் சின்னப் பெண் இல்லை. இருபத்தியாறு வயது முடிந்து விட்டது. இன்னமுமா நல்லது கெட்டது தெரியாது? அவளுடைய பெற்றோர் வேறு மாப்பிள்ளை பார்த்துவிட்டதாகச் சொல்கிறார்கள், இவள் மண்ணாந்தை மாதிரி நிற்கிறாள் . அவர்களை எதிர்த்து நான் நிற்க வேண்டுமானால் இவளது ஆதரவு கொஞ்சமாவது இருந்தால்தானே முடியும்? அன்றைக்குக் கேட்டபோதே இப்படி என்று சொல்லியிருந்தால் எப்படியோ போகட்டும் என்று விடடுத் தொலைத்திருப்பேன். அதைவிட்டு குடும்பம் பட்டினி கிடந்து விடும், இது அது என்று புலம்பினாளே என்று ஒருவர் காலைப்பிடித்து அவள் தம்பிக்கு வேறு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து வைத்தேன். இனி அவர்களிடம் வேறு வேண்டாம் என்று சொல்ல வேண்டும். அதை அவர் அவமானம் செய்ததாக எடுத்துக் கொள்வாரோ என்று அது வேறு கவலை எனக்கு. எல்லாம் ஒன்றுமில்லாததற்காக" என்று பொரிந்து கொட்டினான்.

வேறு மாப்பிள்ளை! இது தான் விஷயமாக இருக்குமா?

கடைசிவரை பேசாமல் கேட்டிருந்து விட்டு, "மிஸ்டர் பாபு ஒரு வேண்டுகோள்" என்றாள் அவள் வெகு வினயமாக.

"என்ன?"

"அஞ்சலி, அவளுடைய வீட்டார் பற்றிச் சொல்லியிருக்கிறாள். . நான் ஒரு முயற்சி செய்து பார்க்கிறேன். நீங்கள் அந்த வேலைவேண்டாம் என்று அவசரப்பட்டு சொல்லாமல் இருக்கிறீர்களா பிளீஸ்" என்றாள் கெஞ்சுதலாக.

"அது பெரிய பிரச்சனையில்லை. அந்தப் பெரிய மனிதர் வெளியூர் போயிருக்கிறார். வர பத்துநாள் ஆகும். அதன்பிறகு தான் சொல்லவேண்டும். ஆனால் நீங்கள் என்ன செய்து விடமுடியும் ? எனக்கு என்னவோ நம்பிக்கையே இல்லை. அஞ்சலிக்குத்தான் முது கெலும்பு இல்லையே"என்றான் அவன் சலிப்புடன்.

அவளுக்கும்தான் பெரிதாக நம்பிக்கை இல்லை. அஞ்சலி இப்படி சொட்டை விழுந்த பாத்திரம் மாதிரிக் கண்ணீர் வடித்துக் கொண்டு சும்மா இருப்பாள் என்று நிர்மலா நினைத்ததே இல்லைதான். ஆனாலும் காட்டிக் கொள்ளாமல் குரலில் உற்சாகத்தைக் காட்டி, "கவலை வேண்டாம் எல்லாம் நன்றாகவே முடியும் இன்..இல்லை நாளைக்கு நான் எப்படியாவது, நான் முயற்சி செய்கிறேன் இப்போது என்றவள் அருகே அசைவு உணர்ந்து, "வைக்கட்டுமா? பை "என்று கூறி ரிசீவரைத் தாங்கியில் வைத்து விட்டுத் திரும்பினாள்.

ஆனந்தன் தான்.

ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு "யார், பழைய வாடிக்கையாளரா ? குரல் கொஞ்சுகிறதே!" என்றான் கிண்டலாக.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டபடி, அன்று அறைகாலி செய்பவர்களைப் பற்றிய விவரங்க

ளைக் காலி செய்கிற நேர வாரியாகப் பிரித்து எடுக்கத் தொடங்கினாள் நிர்மலா, எனக்கு வேறு வேலை இருக்கிறது என்று சொல்லாமல் சொல்வது போல "முன்பே சொல்லி விட்டேன். நீ தான் வேண்டும் என்று." என்றான் ஆனந்தன்.

காதே கேளாததுபோல ஒவ்வொருவரின் பெயருக்கும் நேராக, எந்தமாதிரி அறை, எத்தனை நாட்கள், தங்கும்போது செய்த டெலிஃபோன் கால்கள், போன்ற விவரங்களை வரிசையாக எழுதத் தொடங்கினாள், அவள்.

"மவுனம் சம்மதத்திற்கு அறிகுறி." என்று அவன் தொடரவும் அவளுக்கு எரிச்சல் உண்டாயிற்று. " நல்ல மாட்டுக்கு ஒருசூடு என்பார்களே, நான் உங்களிடம் ஒரு தரம் சொன்னால் போதும் என்று நினைத்தேன். ஆனால் அதில் நல் . . ல்ல என்கிற அடைமொழி ஏன் கொடுத்திருக்கிறார்கள் என்று இப்போது தானே தெரிகிறது."

உதட்டைப் பிதுக்கினான் அவன். சளைக்காமல், "நான் என்நிலையில் இருந்து கேட்டேன் உன்னோடு பழகுகிறவர்களை வைத்து என்னையும் எடைபோடுவாய் என்று நினைக்காமல் போனது தப்புதான் தாயே"என்றான் பதிலுக்கு.

"உபமானம் உபமேயம் பற்றிக் கூடத்தெரியாதவர்களை வேறு என்ன வென்று நினைப்பதாம் ? "பழைய பாணியில் பேசிவிட்ட நிர்மலாவுக்கு பழைய நினைவில் கண்கள் பனித்தன.

அவனுக்கும் அதே நினைவுதான் .

இந்தப் பேச்சினால் தானே அவனை வளைத்தாள்! அவளது தன்மை அறிந்த பிறகும் அவளைப் பேசவிட்டது தவறு; பதிலுக்கு விளையாட்டாகப் பேசியதும் தவறு.

சட்டெனமுகம் கடுக்க, "நீ எப்படிச் சுற்றிவளைத்துப் பேசினாலும் ஏமாறுகிறவன் நான் இல்லை. எனக்கு பதில் வேண்டும்" என்றான் கண்டிப்புடன்.

அவளும் தலையைச் சிலுப்பி, "ஒருதரம் கேட்டாலும், ஓராயிரம் முறைகேட்டாலும் என் பதில் ஒன்று தான். அதை ஏற்கனவே சொல்லியாயிற்று. இப்போது என் வேலையைக் கெடுக்காமல் விலகிப் போய்விட்டால் எவ்வளவோ நன்றி உள்ளவளாக இருப்பேன்" என்றாள் அலட்சியமாக. "உன் நன்றி எனக்குத் தேவையில்லை..." என்றவன்,

மேலே பேசுமுன் புதிதாகச் சிலர் தங்கும் அறை கேட்டு வரவே பேச்சு அத்துடன் நின்றது. மேலும் இரண்டு, மூன்றுதரம் ஆனந்தன் அங்கே வந்து பார்த்ததும், புதிதாக ஓட்டலில் தங்க வந்தவர்கள் வெளியே சென்று திரும்பிச் சாவிக்காக நின்றவர்கள், விவரங்கள் கேட்டவர்கள் என்று அங்கே பலர் நின்று கொண்டே இருந்ததால், அதற்குமேல் நிர்மலாவை அவன் வாட்டவில்லை.

வேலை நேரம் முடிவடைந்ததும் 'அப்பாடா' என்றிருந்தது நிர்மலாவிற்கு.

ஆனந்தன் திரும்பவும் எப்போது வந்து எப்படிக் குத்துவானோ என்ற இறுக்கத்துடனேயே வேலை செய்ததால் அவள் மிகுந்த களைப்புற்றிருந்தாள்.

இந்தச் சோர்வுடன் பஸ் நிறுத்தம் வரை நடக்கவோ, பஸ்சில் கூட்ட நெரிசலில் நிற்கவோ, முடியாது என்று எண்ணி ஓர் ஆட்டோவை அமர்த்திக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினாள் நிர்மலா, இந்தச் செலவு அடிக்கடி செய்ய முடியாது என்று எண்ணியபடி.

மாடி அறைப் பால்கனியில் ஒரு கோணல் சிரிப்புடன் ஆனந்தன் நின்று பார்த்துக் கொண்டிருந்ததை நல்ல காலமாக அவள் அறியவில்லை.

நிர்மலாவுக்கு வேலை நேரம் காலையில் எட்டிலிருந்து பனிரெண்டு மணிவரையும், மதியம் இரண்டிலிருந்து ஆறுவரையும் பனிரெண்டிலிருந்து இரண்டுவரை உணவு இடைவேளை. உணவை ஓட்டலிலேயே செலவின்றிச் சாப்பிடலாம்.

அன்று அந்த இரண்டு மணிநேரமும் தேவைப்பட்டதால் மதிய உணவைத் தியாகம் செய்துவிட்டு அவசரமாக ஒட்டலைவிட்டு வெளியேறினாள்.

நாலு எட்டு எடுத்து வைக்குமுன் அருகே காரைக் கொணர்ந்து நிறுத்திவிட்டு, காரிலிருந்து இறங்கி அவளது வழியை மறைத்து நின்றான் ஆனந்தன்.

திகைத்து நிமிர்ந்தவள் அவன் முகத்தைப் பார்த்ததும் விலகிச்செல்ல முயன்றாள்.

அவன் வழிவிடாததோடு "எங்கே இவ்வளவு அவசரமாய்? நேற்று டெலிஃபோனில் பேசிய வாடிக்கையைச் சந்திக்கவா?" என்று ஏளனமாகக் கேட்டான்.

ஆத்திரமாக முறைத்து விட்டு மீண்டும் விலகி முன்னேற முயன்றாள் அவள்.

இரண்டெட்டில் மீண்டும் வழிமறைத்து நின்று, "எங்கே போகிறாய் என்பதைச் சொல்லாமல் உன்னை இங்கிருந்து நான் போக விடப்போவதில்லை "என்றான் ஆனந்தன் அழுத்தத்துடன் .

மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்தாள் நிர்மலா. ஏற்கனவே பத்து நிமிடம் விரயமாகி விட்டிருந்தது. இன்னும் அவனைச்சந்தித்து, விஷயத்தை விளக்கி..

ஒரு முடிவிற்கு வந்தவளாய், "பள்ளிக்கூடத்திற்கு இனி வழியை விடுகிறீர்களா? "என்று எரிச்சலை மறைக்காத குரலில் கேட்டாள்.

"என்னம்மா, கிண்டலா ?"

"கிண்டலுமில்லை, சுண்டலுமில்லை. அஞ்சலியுடைய தம்பி படிக்கும் பள்ளிக் கூடத்துக்குப் போய் அவனிடம் பேசிவிட்டு நான் திரும்பி வந்து இரண்டுமணிக்கு என் சீ ட்டில் இருக்க வேண்டும். தயவு செய்து என் நேரத்தை வீணாக்காதீர்கள் " என்று அழுத்தம் திருத்தமாகக் கூறித் தன் ஆத்திரத்தை வெளிக் காட்டினாள் நிர்மலா.

"ஓகே. நீ சொல்வது உண்மை என்றால் மற்ற எந்த வாகனத்தையும்விட விரைவாக இந்தக் காரில் நானே கொண்டுபோய் விடுகிறேன்" என்றான் அவன்

அந்த 'நானே' சற்று இடறத் தயங்கி நின்றாள் அவள்.

உடனே ஓர் ஏளனப் பார்வையுடன் "சொன்னது பொய் தான் என்று தெரிகிறது. ." என்று தோளைக் குலுக்கினான் அவன். மேலே பேசாமல் கார்க்கதவைத் திறந்து ஏறி அமர்ந்தாள், நிர்மலா. "வாருங்கள் சற்றுச்சீக் கிரமாகக் காரை எடுங்கள் "என்று வழிகூறினாள்.

பள்ளியில், உணவுக்காக வகுப்பறையைவிட்டு வெளியே சென்றுவிட்ட மது எந்த மரத்தடியில் எங்கே இருக்கிறானோ என்று அங்குமிங்கும் தேடி நிர்மலா சிர மப்பட்டபோது, மதுவே அவளைக் கண்டு விட்டு விந்தி யபடியே ஓடிவந்தான்.

அவனுக்குப் பிரியமான அக்காவின் சிநேகிதிக்கு உதவி செய்யவேண்டாமா?

"என்னக்கா வேண்டும் ? யாரைத் தேடுகிறீர்கள் ?" என்று வந்த சிறுவனிடம், கையோடு கொண்டுவந்தி ருந்த கடிதத்தைத் சட்டென்று கொடுக்க முடியவில்லை நிர்மலாவுக்கு.

இந்தப் பதினோரு வயதுச் சிறுவனுக்கு எந்த அள வுக்கு விவரம் புரியும். இவனிடம் எவ்வளவு சொல்வது என்று தீர்மானிக்க முடியாமல் கொஞ்சம் தடுமாறி னாள். சினிமாக்களில் வருவதுபோல எல்லாச் சிறுவர்க ளுமா பிஞ்சிலே பழுத்திருப்பார்கள்?

தமக்கையின் கண்ணீர் மதுவைப் பாதித்திருந்தது அவளது வேலையை லேசாக்கிற்று. "பார் மது, உன்வீட் டில் வேறு யாருக்கும் தெரியாமல் இந்தக் கடிதத்தை உன் அக்காவிடம் கொடுத்தாயானால் அக்கா அழுவது நின்று விடும்" என்று கூறிக் கடிதத்தை அவனிடம் கொடுத்தாள்.

கடிதத்தில் முக்கியமாக அவள் வலியுறுத்தி எழுதியிருந்தது இதுதான்: அஞ்சலியுடைய தம்பிக்கு பாபு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்திருப்பதால் அஞ்சலியின் வருமானம் இல்லாமல் போவதால் அவளுடைய குடும்பம் பட்டினி கிடந்து விடாது. இதை ஏற்காமல் அவள் உழைத்துப் போட்டுக் கொண்டே இருந்தால், அவளுடைய தம்பியும் தந்தைபோலச் சோம்பேறியாகி அவன் வாழ்வும் வீணாகிப்போகும், என்று எடுத்துச் சொல்லியிருந்தாள். கடிதத்தில் இருந்தது எல்லாம் உண்மைதான்.

ஆனால் கடிதத்தை மதுவின் கையில் கொடுக்கும் போது அவளுக்குச் சஞ்சலமாகிவிட்டது.

இந்தச் சிறுவன் மதுவைப் பற்றி அஞ்சலி நிர்மலாவிடம் நிறையக் கூறியிருக்கிறாள்.

அஞ்சலியுடைய தாயாரின் முப்பத்தி ஆறாவது வயதில், காலம் கடந்து பிறந்த இந்தப் பிள்ளையிடம் தாயார் பொறுமையற்று நடப்பது பற்றியும், உரியகாலத்தில் போலியோ தடுப்பு போடாமல் நோய் வந்து விந்துகிற பிள்ளையை அவனது குறையைச் சுட்டிக்காட்டிச் சுள்ளென்று பேசுவாள் என்றும் சொல்லுவாள். அது தாங்காமல் அணைக்கிற அக்காவிடம் மதுவுக்கு உயிர் என்றும் கூறுவாள்.

இப்போது இந்தக் கடிதத்தின் படி அஞ்சலி நடந்தால் இந்தப் பிள்ளை தமக்கையின் அன்பு கிட்டாமல் துன்புற நேருமே என்றிருந்தது அவளுக்கு.

ஆனால் அஞ்சலி நன்றாகிவிட்டால் தம்பியைப் பிறந்த வீட்டில் விட்டுவைக்க மாட்டாள் என்ற நம்பிக்கையோடு கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பினாள்.

கார் அருகே நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்தன்.

நிர்மலா திரும்பி வந்ததும், "கடிதம் யாருக்கு? பையனின் அண்ணனுக்கா? மாமாவுக்கா?" என்று அக்கறையாக விசாரித்தான்.

நின்று மீண்டும் மணியைப் பார்த்தாள் நிர்மலா, "கவனியுங்கள், மிஸ்டர் ஆனந்தன். நான் இரண்டு மணிக்கு டியூட்டியில் இருக்க வேண்டும். உங்களால் என்னை நேராக ஒட்டலுக்குக் கொண்டுபோய் விடமுடியுமானால் சொல்லுங்கள், உங்கள் காரில் ஏறுகிறேன். மற்றபடி, இங்கே ஆட்டோ நிறையக் கிடைக்கும்," என்றாள் கறார்க் குரலில்.

கார்க் கதவைத் திறந்துவிட்டு, அவள் காரில் ஏறியதும் கதவைச் சாத்திவிட்டு, மறுபுக்கம் வந்து, தானும் ஏறியமர்ந்து, காரை எடுத்தான் அவன்.

கார் கிளம்பியதும், "ஆட்டோ கிடைப்பது மட்டும் இல்லை. எங்.....கே கொண்டு விடச் சொன்னாலும் கொண்டுபோய் விட்டுவிடுவார்கள். பணத்தை மட்டும் கொடுத்துவிட்டால் போதும்," என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

"பணத்தைக் கொடுப்பது அதற்காகத்தான்," என்றாள் அவள் வெளியேபார்த்தபடி.

"பணம் நீயே கொடுப்பாயா, அல்லது போகிற இடத்தில் அவர்கள் கொடுப்பார்களா?" என்று, ஆனந்தன் கேட்ட பிறகுதான் அவன் பேச்சு புரிந்தது நிர்மலாவுக்கு.

ஆத்திரத்துடன் திரும்பி அவனை உறுத்து விழித்தாள். "ஒன்று, காரை 'நிறுத்துங்கள். நான் இறங்கிக் கொள்கிறேன். அல்லது உங்கள் திருவாயை மூடிக் கொண்டு ஒட்டுங்கள்" என்று மொழிந்தவள் அவன் பேசாமல் ஒட்டவும் மீண்டும் வெளியே திரும்பிக் கொண்டாள்.

நல்லவேளையாக அன்றிரவே ஆனந்தன் சிங்கப்பூர் சென்றுவிட்டதால் நிர்மலாவுக்குச் சற்று எளிதாக மூச்சுவிட முடிந்தது.

ஆனால் அஞ்சலியைப் பற்றிய ஒரு தகவலும் இல்லாமலேயே வாரம் முழுவதும் கழியவும் அவளைப்பற்றிய கவலை பெரிதாயிற்று.

பாபு வேறு தினமும் ஃபோன் செய்து துளைத்தான்.

அவனிடம் எத்தனை நாள்தான் பொறுத்திருக்கச் சொல்வது?

திங்களன்று அஞ்சலி வேலையில் சேரவேண்டிய நாள். ஆனால் மேலும் ஒருவாரம் லீவை நீட்டித்திருக்கிறாள் என்று தெரியவும் நிர்மலாவுக்கு நம்பிக்கையே போய்விட்டது.

அதுவும் அன்று மதியம் ஆனந்தன் வேறு திரும்பி வந்து, "என் வேலைகளையெல்லாம் ஒதுக்கிக் கொண்டு வந்திருக்கிறேன். இனி என் எண்ணம் நிறைவேறாமல் சென்னையைவிட்டுச் செல்லப்போவது இல்லை." என்று கூறவும் ஒரேயடியாக ஒய்ந்து போனாள் அவள்.

ஆனால் மறுநாள் அஞ்சலியும் பாபுவுமாகச் சேர்ந்து வந்து முகமெல்லாம் மகிழ்ச்சியாக அவளுக்கு நன்றி கூறவும் அவளுக்கு ஒரே ஆச்சரியமாகிப்போயிற்று.

"எல்லோருமாகச் சேர்ந்து என் திருமணத்தை முடிக்குமுன் வேலைக்குக் கூட வெளியே அனுப்புவதாக இல்லை, நிம்மி. அதனால் தான் அன்று அப்படி இடிந்து போயிருந்தேன்." என்று தொடங்கினாள் அஞ்சலி.

"ஆமாமாம், நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள், நிர்மலா. இருபத்திஆறு வயதில் வீட்டாருக்குப் பயந்து இடிந்து போனாளாம். தைரியத்துக்குப் 'பாரத ரத்னா'விருதுதான் கொடுக்க வேண்டும்."என்று கேலியாகவே இடித்துரைத்தான் பாபு.

"நான் முடியாது முடியாது என்றுதான் பிடிவாதம் பிடித்தேன், நிம்மி. ஆனால் ஒட்டுமொத்தமாய்த் தூக்கில் தொங்குவோம், சாவோம் என்றேல்லாம் சொல்லும் போது என்ன செய்வது? உன் கடிதத்தைப் புதனன்று இரவில் மது தந்தானா, அதைப் படித்ததும் கொஞ்சம் நம்பிக்கை. தம்பிக்கு வேலை என்றால் வீட்டு வருமானம் தடைப்படாது என்பதுதானே. ஆனால் மறுநாள் விவரம் சொன்னதும் வேறுமாதிரிப் பூதம் கிளம்பிவிட்டது.

"ஒருவரிடம் கைகட்டி வேலை பார்க்கத் தன்னால் முடியாது என்று போய்விட்டான் தம்பி. அப்பா சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியே போய்விட்டார். சாயங்காலம் திரும்பி வந்து மூட்டைப்பூச்சி மருந்து பாட்டிலை எடுத்துக் காட்டுகிறார்!"

"அய்யோ, அஞ்சி!"

"நானும் ஒரேயடியாய் நிலைகுலைந்து தான் போனேன், நிம்மி. எதற்கும் சரி என்று தலையாட்டி விட்டேன். நம் வாழ்க்கை இனி அவ்வளவு தான் என்று ஒய்ந்து போய்விட்டது."

"அப்புறம்....?"என்று பாபுவையும் தோழியையும் மாறிமாறி நோக்கிக் கேட்டாள் நிர்மலா.

"ஞாயிறன்று இரவு, பாதிராத்திரியில் மதுக்குட்டி வந்து ஒரு துண்டு காகிதத்தைக் காட்டினான். அது ஒரு சினிமா 'ரிசர்வேஷன்" சீட்டு. ஐந்து பேருக்கு. எப்போதுமே சினிமா என்றால் நானும் மதுவும் தள்ளுபடியா, வீட்டில் மற்ற ஐந்து பேருக்கும் திங்கள் கிழமை 'மாட்டினி' க்கு ரிசர்வ் செய்திருந்தது.

"அப்போதும் எனக்கு விஷயம் விளங்கவில்லை. மதுதான் காட்டினான். டிக்கட் ரிசர்வ் செய்தது வியாழக் கிழமை. அந்தத் தியேட்டரில் காலை பத்திலிருந்து பதினொன்றுக்குத்தான் டிக்கட் ரிசர்வ் செய்ய முடியும். புரிகிறதில்லையா? திங்களன்று சினிமா பார்க்க ரிசர்வ் செய்து சீட்டை வாங்கிப் பைக்குள் வைத்துக் கொண்டு, மூட்டைப்பூச்சி மருந்தையும் வாங்கி வந்து என்னை மிரட்டி ஏமாற்றியிருக்கிறார்கள். நான் ப்யந்து விடுவேன் என்று எவ்வளவு நிச்சயம் பார்! எனக்கு இன்னமும் அழுகை வந்து விட்டது.

"பிறகு மதுதான் என்னைத் தேற்றினான். நாளைக்கு இவர்கள் சினிமாவுக்குப் போனதும் நீ பாபு சார் வீட்டுக்குப் போய்விடு அக்கா. கொஞ்ச நாள் கழித்து நானும் உன்னிடம் வந்து விடுகிறேன். என்று உற்சாகமாய்த் திட்டம்போட்டான்."

"அதேபோல நடந்ததாக்கும். பார்த்தாலே தெரிகிறதே."என்றாள் நிர்மலா குதூகலத்துடன்.

"அதுமட்டுமல்ல, இன்னமும் ஒன்று நடந்தது. நேற்று சாயங்காலமே அப்பா, தம்பி எல்லோரும் பாபு வீட்டுக்குப் படையெடுத்து விட்டார்கள்...."

"பெரிய அதிசயமாய் உங்கள் தோழி அசைந்து கொடுக்கவில்லை. கடைசியில் என் வருங்கால மைத்துனன் வேலையிலும் சேருவதாக ஒத்துக் கொண்டு போயிருக்கிறான். சாப்பாட்டுக்கு வேறு வழி ? என் வருத்தமெல்லாம் இதை மூன்று ஆண்டுகள் முன்பே செய்யாமல் இருந்து விட்டேனே என்பதுதான்."

"பெட்டர் லேட் தேன் நெவர்" என்றான் அதுவரை பேசாமல் கவனித்துக் கொண்டிருந்த ஆனந்தன்.

அதுவும் சரிதான் என்று எல்லோரும் சிரித்துக் கொள்ள, "உங்களுக்கும் ரொம்ப நன்றி, சார். நீங்கள் தானே நிம்மியைப் பள்ளிக் கூடத்துக்கு அழைத்துவந்தீர்களாம். உங்கள் காரைப்பற்றி மது நிறையச் சொன்னான்." என்றாள் அஞ்சலி.

"என் காரல்ல. வாடகைக்கு எடுத்தது. எனவே அந்தப் பெருமை எனக்குச் சொந்தமானது." சிரித்த முகமாகவே பதில் கூறினான் ஆனந்தன்.

மேலும் சற்று நேரம் திருமண ஏற்பாடுகள் பற்றிப் பேசிக் கொண்டு இருந்துவிட்டு அஞ்சலி, பாபு ஜோடி கிளம்பியது.

"குட்..செய்கிற பாவத்துக்குப் பரிகாரமாக அவ்வப்போது நல்லதும் செய்வாய் போல?" என்று தொடங்கினான் ஆனந்தன்.

நிர்மலாவின் புன்னகை மறைந்தது.

"பார்க்கிற ஆண்கள் அத்தனை பேரிடமும் பல் சுளுக்கும் அளவு இளிக்கிறாய். என்னிடம் மட்டும் முகத்தைச் சுளுக்குவானேன்?"

தலை தூக்கிய சினத்துடன், "சுற்றி இருக்கிற அத்த ணைபேரும் நல்லவர்களாக இருக்கும் போது நீங்கள் மட்டும் விதிவிலக்காக இருப்பது தான் காரணம்" என்றாள் அவள் துடுக்காக.

"உன் அகாரதியில் நல்லது கெட்டதற்கு அர்த்தம் தப்பாகப் போட்டிருக்கிறதம்மா. கொஞ்சம் தரமான அகராதியை வாங்கிப் படித்துப்பார். புரியும்."என்றான் அவன் கடைசி வார்த்தையை விடாமல்.

இந்த விதண்டாவாதத்தில் அலுப்புற்றவளாகத் தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள் நிர்மலா. பாதி வேலையைப் பகிர்ந்து கொள்ளும் அஞ்சலி இல் லாததால் வேலையும் அவளுக்குச் சற்று அதிகமாகவே இருந்தது.

அதிகமாகச் 'செக்கிங்' பண்ணக் கூடிய நேரங்களி லும், தங்கியிருப்போர் வெளியே செல்லக் கூடிய நேரங் களிலும் உதவிபுரிய அவ்வப்போது நிர்வாகி யாரையாவது அனுப்பி வைத்தால்தான்.

ஆனால் மற்றவகை வேலைகளை அவள் தனியாகவே செய்யவேண்டியிருந்ததால் வேலையும் அதிகமாயிற்று. அத்தோடு அருகில் ஆள் இல்லாமல் தனித்து நின்று வேலை செய்கிற நேரங்களில் ஆனந்த னின் தொல்லையும் அதிகம் ஆயிற்று.

ஆனந்தனைப் பற்றி நிர்வாகியிடம் புகார் செய்ய லாமா என்று ஒருதரம் யோசித்துப் பார்த்துவிட்டு அந்த எண்ணத்தைக் கைவிட்டாள் நிர்மலா. ஒன்று, இந்த ஒட் டலைப் பொறுத்தவரையில் வாடிக்கையாளர்கள் தான் எப்போதும் நல்லவர்கள், நியாயம் அவர்கள் பக்கம் தான் இருக்கும். இல்லையென்று ஒத்துக் கொள்வது இல்லை. அடுத்து, இதுபோன்ற விஷயங்களைச் சமா ளிக்கத் தெரியாதவள் இந்த வேலைக்கு வரக்கூடாது என்பார். இது ஏற்கனவே அனுபவப்பட்ட விஷயம். எனவே அவன் என்ன சொன்னாலும் செவியில் விழாதது போல இருக்கத் தொடங்கினாள்.

ஆனால் அதுவும் ஆனந்தனுக்கு ஆத்திரமூட்டியது. "என்ன, நான் மட்டும் என்ன வித்தியாசம்? முன்னெல்லாம் என்னிடம் சிரித்துக் கொண்டுதானே இருந்தாய்? இப்போது என்ன வந்துவிட்டது?"என்று எரிந்து விழுந்தான்.

சற்று யோசித்தாள் நிர்மலா. "முன்னெல்லாம் நீங்கள் தப்பான எண்ணத்துடன் என்னுடன் பழுகவில்லை" என்று சொன்னால் என்ன ? அவன் மாறியதால் தானே அவளும் மாறும்படி ஆயிற்று.

"கேட்கிறேனில்லையா?" என்று அவன் திரும்பவும் அதட்டவும் நினைத்ததைச் சொல்லி விட்டாள் நிர்மலா.

ஆனால் அவன் வேறுமாதிரிப் பாய்ந்தான். "உன் மேல் நான் தப்பு... அதாவது இந்தமாதிரி எண்ணம் கொண்டதில் என்ன தப்பு?" என்று கேட்டான். "உரியவருக்கு உரிய மரியாதை கொடுப்பதில் யாரும் என்னை மிஞ்ச முடியாது. என் வீட்டு நாய்களுக்குச் சகல வசதிகளுடன் கூடிய நாய் வீடு கட்டிவைத்திருக்கிறேன். பசுக்களுக்குக் கொட்டில். என் அம்மா, தங்கை....." என்று இழுத்துவிட்டு ஒரு கோணல் பார்வையுடன், "..வருங்கால மனைவி முதலியவர்களுக்கு என் வீட்டில் இடம். உன் போன்றவர்களுக்குப் படுக்கையில் மட்டும் இடம்." என்றான்.

வலிக்க வைப்பதற்காகவே சொன்ன பேச்சு.

"இதே மாதிரி இன்னொரு ஆண் மகன் உங்கள் மனைவி... ஓ, உங்களுக்குத்தான் மனைவி இல்லையே, உங்கள் தங்கையிடம் பேசினால் எப்படி இருக்கும்? நினைத்துப் பாருங்கள்." என்றாள் நிர்மலா.

"தகுதி அறியாமல் தங்கையைப் பற்றிப் பேசாதே." என்று உறுமிவிட்டு அவளை உறுத்து விழித்தான் ஆனந்தன்.

"என் தகுதிபற்றி எனக்குத் தெரியும். அத்தோடு இந்தப் பார்வைக்கெல்லாம் நான் பயந்து நடுங்குவேன்

என்ற எண்ணமா ? அப்படி உங்கள் கோபத்தில் எரிந்து விட நான் கொக்கும் அல்ல, என்னை எரித்து சாம்பலாக் கிவிட நீங்கள் கொங்கணவரும் அல்ல. தவமும் சீலமும் அந்த முனிவருக்கு எரிக்கும் சக்தியைத் தந்திருந்தன: ஆனால் உங்களிடம்தான் சீலம் சீரோ ஆயிற்றே." என்றாள் அவள் ஆத்திரத்தினால் உண்டான துடுக்கு டன்.

முன்பு நிர்மலாவைக் கொக்காகவும் தன்னைக் கொங்கணவனாகவும் எண்ணிப் பார்த்தது ஆனந்த னுக்கு நினைவு வந்தது.

எண்ணப்போக்கில் கூட எவ்வளவு ஒற்றமை! இவள் நல்லவளாகவே இருந்திருந்தால் எவ்வளவு நன் றாயிருந்திருக்கும் என்று தோன்றியது ஆனந்தனுக்கு.

இருக்கட்டும். ஏதோ ஒருவழியில் இவளை எப்போதும் உடன் வைத்துக்கொள்ளும் படியான ஏற்பாடு செய்யவேண்டியதுதான். குறைந்த பட்சம் ஒரு மெய்யான சீதையைக் கண்டுபிடிக்கும் வரையிலேனும் இவள்துணை வேண்டும்தான்.

அப்படி ஒரு சீதை இருக்கக்கூடும் என்கிற நம்பிக் கையே இப்போது பெரும்பாலும் குறைந்து போய்விட் டது.

ஆனால் அப்படி ஒருத்தி இருந்து, அவனுக்குக் கிடைத்தாளானால் அதன் பிறகு இதுபோல் உறவை நீடிப்பது நியாயமாகாது.

அதற்காக இவளையும் ஒன்றுமில்லாமல் அனுப்பி விடப் போவது இல்லை. பாதி சொத்து கிடைக்காது தான். ஆனாலும் நிறையவே கிடைக்கும். அதற்கு மேல் அதிகத்துக்கு ஆசைப்படக் கூடாது என்று புரியவைக்க வேண்டும்.

இங்கே வரும்போது இவள் காத்திருப்பாள் என்கிற எண்ணமே தனி சுகம்தான்....

சினச்சூடு தணிந்து விட, லேசாக முறுவலித்து, "உன்னைப் பார்வையால் எரிக்கும் சக்தி எனக்கு இல்லாதிருக்கலாம். ஆனால் உன்னை என்னிடம் கொண்டு வரக்கூடிய சக்தி எனக்கு இருக்கத்தான் செய்கிறது. அந்த அளவுக்குப் போக வேண்டாம், பாவம் என்று பார்த்தால் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாயே!" என்றான் சற்று இரங்கிய குரலில்.

"ஆகா! என்ன பெருந்தன்மை!" என்று ஏளனமாகத் தோளைக் குலுக்கினாள் அவள்.

முகத்தில் இருந்த கடினம் அடியோடு மறைந்துவிட, "நீ ஒப்புக் கொண்டாலும் மறுத்தாலும் பெருந்தன்மையேதான்" என்றவன் ஒரு விஷம முறுவலுடன், "வந்துதான் பாரேன். பெருந்தன்மையின் அளவு உனக்கே புரிந்துவிடும்" என்றான் ஆனந்தன்.

இருந்திருந்து இவனிடம் விளக்க முயன்றேனே என்று தன்னையே கடிந்து கொண்ட போது மனதில் ஏதோ உறுத்தியது.

ஏதோ சக்தி என்றானே! அப்படி என்ன பெரிய சக்தி அவனுக்கு இருக்கக்கூடும்?

பணம் இருக்கிறது உண்மைதான்.

ஆனால் அந்தப் பணத்தை வேண்டி இவள் சென்றால் அல்லவோ அது அவன் நினைத்ததை நடத்தக்கூடிய சக்தியாகமாறமுடியும்?

மனதுக்குப் பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ. அவளிடம் ஒரு தொழில் இருக்கிறது. அவள் குடும்பத்தின் உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்துக்கும், முக்கியமாக அவளுடைய தாயாரின் வைத்தியத்துக்கும் நெறி பிறழாமல் சம்பாதிக்க முடிகிறது. அவளைப் பொறுத்த வரையில் இது போதுமானது.

அதிகத்துக்கு ஆசைப்பட்டால் தானே அடுத்தவர் கையை நாடி நிற்கவேண்டும்? ஆசைப்படாதபோது அவளது மறுப்பை மாற்றும் சக்தி யாருக்கும் கிடையாது. நிச்சயமாகக் கிடையாது.

இல்லாத சக்தியெல்லாம் தனக்கு இருப்பதாக யாரும் எண்ணி ஏமாந்தால் அதற்கு அவள் பொறுப்பு அல்ல.

ஏமாறுகிறவர்கள் ஆசை தீர ஏமாந்து கொள்ளலாம்.

அன்று மதியம் ஒரு நடுத்தர வயது கனவான் ஒருவர் அறையைக் காலி செய்து விட்டுப் போனார்.

செல்லுமுன் நிர்மலாவிடம் வந்து நின்று, அங்கே தங்கியிருந்த நாளெல்லாம் சர்வீஸ் நன்றாக இருந்தது என்றும் அவள்மூலம் அவர் கேட்டது எல்லாம் தாமத மின்றி விரைவாக நடந்தது என்றும் மகிழ்ச்சி தெரி வித்து ஒரு தொகையை 'டிப்சைப்'பிடிவாதமாகப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் கூறிப் பணத்தை அவள் அருகே வைத்தார்.

பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்து, டிப்சைப் பிடி வாதமாக மறுத்து, பணத்தை அவர் பக்கம் தள்ளினாள் நிர்மலா.

அப்போது அவளது கையைப் பற்றி, வெண்டைப் பிஞ்சு போல அழகான விரல்கள் என்று வருடினார் அவர்.

சிரித்த முகமாகவே கையை மெல்ல உருவிக் கொண்டு, "வீட்டில் போய்ப் பாருங்கள், உங்கள் மனை வியின் கை வெண்டைப் பிஞ்சை விட மென்மையாக இருக்கும்." என்றாள் நிர்மலா இனிய குரலில்.

"அவள் கை குண்டு குண்டாக இருக்கும். "என்றார் அவர் வருத்தத்துடன்.

"நல்ல உரம் போட்டுப் பெரிதாகக் காய்த்த புஷ்டி யான வெண்டை சார். கண்ணில் அன்பைப் பூசிக் கொண்டு பாருங்கள். தெளிவாகத் தெரியும்." என்று முறு வலித்தாள் அவள்.

"கெட்டிக்காரி. என்று சிரித்துவிட்டுப் போனார் அவர்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, நல்லவேளை ஆனந்தன் இங்கே இல்லை என்று நிம்மதி அடைந்தாள் நிர்மலா.

ஆனால் ஆனந்தன் இருந்தான். மாடி ஹாலின் திரைக்கு அப்புறமிருந்து அவளையே பார்த்திருந்தவன் கண்களில் கீழே நடந்த காட்சி நன்றாகவே தென்பட்டது.

இருவருக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தை காதில் விழா விட்டாலும், அவரது முக்கால் நரைவிழுந்த கேசமும், அவளது கையைப் பற்றி அவர் வருடியதும், அவளது புன்முறுவலும் தெளிவாகவே அவன் கண்களில் பட்டது.

சற்றுநேரம் இலக்கற்று வெறித்தவன், எழுந்து நிர்வாகியின் அறையை நாடிச் சென்றான்.

அன்று மாலை வீடு செல்லுமுன் அவரைக் கண்டு செல்லுமாறு நிர்வாகியிடமிருந்து நிர்மலாவுக்கு கட்டளை வந்தது.

என்ன பிழை செய்தோம் என்று யோசித்தபடி அவரது அறைக்குச் சென்றாள் நிர்மலா.

அவளை அமரச் சொல்லி விட்டு, சற்றுநேரம் மேசைமேல் இருந்த பொருட்களை அங்குமிங்கும் அனாவசியமாய் மாற்றி வைத்தார் அவர்.

பிறகு எழுந்து சன்னல் பக்கம் சென்று வெளியே நோக்கியவாறு நின்று, தொண்டையைச் செறுமி, "நிர்மலா, நீ மிஸ்டர் ஆனந்தனை அனுசரித்து நடந்து கொள்ளாவிட்டால் இங்கே வேலையில் நீடிக்க முடியாது," என்று அறிவித்தார்.

# 10

சற்று நேரம் பேச்சிழந்து போய் நிர்வாகியின் முதுகை வெறித்தபடி அசையாமல் அமர்ந்திருந்தாள் நிர்மலா.

சற்றுமுன் அவரது பேச்சு அவள் காதில் சரியாகத் தான் விழுந்ததா?

அல்லது இந்த ஆனந்தன் சிக்கலிலேயே உழன்று கொண்டு இருந்த மனம் ஏதேனும் குளறுபடி செய்து விட்டதா?

அப்படித்தான் இருக்கவேண்டும்.

மற்றபடி ஒரு நல்ல குடும்பத் தலைவர், அவளுடைய அருமைத் தகப்பனாருடைய நண்பர், அவருக்கு நன்றிக் கடன்பட்டிருப்பதாக அவ்வப்போது மறவாமல் சொல்லிக் கொள்கிற நல்லவர் இவரால் எப்படி இதுபோலப் பேச முடியும்?

தன் காதுகளையே நம்பமாட்டாமல், "நீங் . . . நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்!" என்று காற்றாகிவிட்ட குரலில் கேட்டாள் அவள்.

ஒரு கணமவுனத்தின் பின் திரும்பத் தன் இருக்கைக்கு வந்து அமர்ந்தார் நாதன். "திரும்பத் திரும்பச் சொல்லிப் புண்ணியம் சேர்க்க இது ராமாயணமா, நிர்மலா? நான் சொன்னது உன் காதுகளில் சரியாகத் தானே விழுந்தது" என்றார் அவர்.

திகைப்பு ஆத்திரமாய் மாற, "இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை?" என்று கோபத்துடன் கேட்டாள் நிர்மலா.

"இருக்கிறது" என்றார் அவர் தணிவான குரலில், "மிகுந்த அவமானமாகவும் இருக்கிறது" என்றார் நாதன்.

மீண்டும் திகைத்தாள் நிர்மலா.

இந்த ஒட்டல் ஆனந்தனுடையது அல்லவே. இவரை அவனால் எப்படி டிஸ்மிஸ் செய்யமுடியும்?

அவள் முகத்தை பார்த்தவர், "புரியவில்லை அல்லவா" என்று கேட்டு விட்டு விளக்கினார். "மிஸ்டர் ஆனந்தனால் இந்த ஒட்டலுக்கு எவ்வளவு லாபம் தெரியுமா? அவரது முதல் தொழில் சிங்கப்பூரில் சென்ட் தயாரிப்பது என்றாலும் இங்கே எத்தனையோ தொடங் கிவிட்டார். மாதம் குறைந்தது நாலு போர்டு மீட்டிங் நடத் துகிறார். பத்திரிக்கையாளர் கூட்டம், டீலர்கள் கூட்டம் என்று மாதம் தவறாமல் நடக்கிறது நம் ஒட்டல் ராயல் சூட் வாடகை என்ன? அவரது தயவால் அது ஒரு நாள் கூடக் காலியாக இருப்பது இல்லை. அவர் தங்கினாலும் தங்காவிட்டாலும் வாடகைக்கு செக் வெட்டிவிடுகிறார். அடுத்து அவரது கூட்டங்களுக்கான ஹால் வாடகை, சாப்பாடு, சிற்றுண்டி, பானங்கள், சர்வீஸ் செலவு... என் றெல்லாம் எவ்வளவு தருகிறார்! ஒரளவு கணக்கு புரிகிற தில்லையா?

"ஆனந்தன் விரும்பினால் இதையெல்லாம் ஓர் ஐந்து நட்சத்திர ஒட்டலில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவருடைய தந்தையின் நண்பர் நம் எம்.டி. என்கிற ஒரே காரணத்தால் இந்த ஒட்டலையே பயன்ப டுத்திக் கொள்கிறார்.

"இந்த நிலையில் அவர் வேறு ஒட்டலை நாடிப் போய் விட்டால் என்ன ஆகும்? இந்த வருமானம் கைவிட்டுப் போனால் மேலிடம் என்னை அல்லவா முதலில் வீட்டுக்கு அனுப்பி வைக்கும்? அப்புறம் என் கதி என்ன? என் குடும்பத்தின் கதி என்ன ஆகும்? என் முதல் கடமை என் குடும்பத்துக்குத்தானே. அதற்குத் துன்பம் வர நான் விடமுடியுமா? யோசி" என்றார் நிர்வாகி.

ஆக அவன் சொன்ன சக்தி என்னவென்று இப்போது நிர்மலாவுக்குப் புரிந்தது.

பணத்தின் சக்திதான். ஆனால் இந்த அளவுக்கு இறங்குவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் ஒரு மரியாதைக் குரிய வயதும் நிலையும் உடைய ஒரு மனிதரிடம் சென்று, உன் கீழ்ப் பணிபுரியும் ஒரு பெண்ணை என்னிடம் அனுப்பிவை, இல்லாவிட்டால்... என்று மிரட்ட ஒரு பெரிய மனிதன் என்கிற நிலையில் இருக்கும் ஒருவனால் எப்படி முடியும்? சொல்லக் கூச்சமாய் இராதா?

ஆனால் கூசாமல்தானே சொல்லியிருக்கிறான். வாய் திறந்து அவன் சொல்லியே விட்ட பிறகு எப்படிச் சொல்லமுடியும் என்று யோசிப்பதும் வியப்பதும் முட்டாள்த்தனம்.

ஆனால் ஒன்று. இப்போது நிர்வாகியிடம் சொன்னதுபோல அவனுடைய தந்தையுடைய நண்பரான எம். டி. யிடம் அவனால் சொல்ல முடியாதே. சொன்னால் அவனது ஒழுக்கம் கேள்விக் குறியாகி அந்த வட்டாரத்தில் அவனுக்கும் கேவலம் ஆயிற்றே.

அதனால் இப்போது நிர்வாகியைச் சும்மா மிரட்டுகிறானே தவிர, கொஞ்சம் தாங்கிநின்றால், ஆனந்தன் அதற்கு மேல் துணிய மாட்டான்.

ஆனால் இப்போது இவரை எப்படித் துணிந்து நிற்கச் செய்வது?

சற்று யோசித்துவிட்டு, "என் அப்பா உங்களுக்காக எவ்வளவோ செய்திருக்கிறார் என்று சொல்வீர்களே, அங்கிள், அந்த நன்றிக்காக..." என்று தொடங்கினாள் நிர்மலா.

"அந்த நன்றிக்காக நானும் எவ்வளவோ செய்திருக்கிறேன் என்பதை மறந்து விடாதே, நிர்மலா" என்று அவளது பேச்சில் குறுக்கிட்டுக் கூறினார் நாதன்.

"நினைத்துப் பார். உனக்காக என்னவெல்லாம் செய்தேன்? முன் அனுபவம் இல்லாத உன்னை வெறும் எடுபிடி மாதிரி வையாமல் ஒரளவு நல்ல சம்பளம் வரும் வேலையில் சேர்த்துக் கொண்டேன். அந்தப் பணமும் போதாது, காபரே ஆடுகிறேன் என்று நீ வந்த போது எவ்வளவோ தடுத்தேன். பெண்மையை விற்பது தவிர இது ஒன்றுதான் வழி என்று நீ சொன்னதால் இந்த ஆட்டம் அறியாத உன்னை ஆட அனுமதித்ததோடு மற்றவர்களுக்குச் சமமான சம்பளமும் கொடுத்தேன். மற்றவர்களைப் போல மேசைகளின் அருகே வந்து ஆடாமல் மேடையிலேயே நின்று கொள்ள அனுமதி கொடுத்தேன். உன் வார விடுமுறையை உன் வசதிக்கு வழங்கி விட்டு மற்றவர்களை அதற்குச் சரியக வேலை செய்ய வைத்தேன். இவற்றில் சில ஒட்டல் விதிமுறையை மீறிய வேலைதான். என் ஒட்டல் சிப்பந்தியான உன்னைக் காபரே ஆட அனுமதித்ததே விதிமுறையை மீறிய செயல்தான். முதலாளிக்குத் தெரிய வந்து கேள்வி கேட்டால் நான் மன்னிப்பு கேட்டாக வேண்டும். ஆனாலும் என் நண்பரின் மகள் என்பதற்காகவே உனக்கு இந்த உதவியெல்லாம் செய்தேன். ஆனால் ஒன்று. உதவி செய்வதற்கும் அளவு இருக்கிறது" என்றார் அவர்.

"அங்..கிள்.." என்று அவள் கெஞ்சலாகத் தொடங்கவும் அவர் கண்களை ஒரு தரம் இறுக மூடித் திறந்தார். "நோ. என்னை அப்படிக் கூப்பிடாதே. இன்றைய நிலையில் உன் அங்கிளாக எதையும் செய்வதற்கு இல்லை. வெறும் பழக்கத்தினால் வந்த அங்கிளாக இல்லாமல் உன் அன்னையோடு பிறந்த தாய் மாமனாகவே இருந்தாலும் அவனுக்கும் சொந்தக் குடும்பமும் அதற்குரிய கடமைகளும் இருக்குமானால் இதைத்தான் செய்ய முடியும். மிஸ்டர் ஆனந்தன் விரும்பியதைச் சொல்ல

வேண்டியது என் குடும்பத்துக்கு முன் என் கடமை. சொல்லி விட்டேன். அதற்குமேல் உன் விருப்பம்."

"அங்கிள், அந்த ஆள் சும்மா உங்களை மிரட்டிப் பார்க்கிறார். அவ்வளவுதான். யோசித்துப் பாருங்கள். இதைப்போய் ஒரு குற்றம் என்று எம். டி யிடம் முறையிட முடியுமா? பிறகு அவர்கள் மத்தியில் இந்த ஆனந்தன் தலைநிமிர முடியுமா? அதனால்..."

"ச்சு" என்று சலிப்பும் பரிவுமாகத் தலையசைத்தார் நாதன். "இப்படி என்று சொல்வாரா, அம்மா? பொதுவாக சர்வீஸ் சரியில்லை, வேறு ஓட்டலுக்குப் போகிறேன் என்று மட்டும் கூறி முடித்து விடுவாராம் சொன்னார். இப்போது நீயோசித்துப்பார்"

"ஓ!" நிர்மலா சோர்ந்து போனாள்.

இவன் இப்படி ஒரு முழுப் பொய்யைச் சொல்லக் கூடும் என்று அவள் நினைக்கவே இல்லையே!

ஆனந்தன் சொல்வது பொய்யென்று மற்ற வாடிக்கையாளர்களின் நற்சான்றுகளைக் கொண்டு நிரூபிக்க முயற்சி செய்யலாம். ஆனால் பல லட்சம் ரூபாய் பணம் நட்டமாகிவிடப் போகிறது என்கிற நிலையில் மற்றது ஏதாவது முதலாளியின் காதில் ஏறுமா, என்ன? அதுவும் நண்பரின் மகன் வேறு.

இல்லை. அந்த வகையில் முயற்சிப்பது நிச்சயமான தோல்விக்கான போர்தான். பொன்னான நேரமும் சக்தியும் வீணாவதுதான் மிச்சமாகும்.

கீழ் உதட்டை பற்களால் அழுத்திய வண்ணம் நின்றவள் மெல்ல நிமிர்ந்தாள். "அங்கிள், உங்கள் நிலையைப் பாதிக்காதபடி எனக்கு இன்னும் ஒரே ஒரு சின்ன உதவி செய்ய முடியுமா?"

"சொல்லு"

"எனக்கு ஒரு மாத நோட்டீஸ் தருவீர்கள் இல்லையா?"

ஒரு தரம் அவளை ஆழப் பார்த்து விட்டு; அவரை மீறி அரும்பிய புன்னகையோடு, "ஆமாம்" என்றார் அவர்.

"இந்த ஒரு மாத நோட்டிஸ் காலத்தில் நான் வேறு எங்கேனும் இது போல ஒரு வேலை தேடிக் கொள்கிறேன். வேலை தேடுவதற்காக அவ்வப்போது ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் விடுப்பு தர முடியுமா?"

"நிச்சயமாய்" என்றார் அவர் உற்சாகத்தோடு. "நீ வேறு வேலை தேடிப் போய் விட்டால் உன்னை நிர்பந்திக்க எனக்கு ஏது அதிகாரம்?" என்றவர் சிறுகவலையுடன், "ஆனால் ஒன்று, எச்சரிக்கையோடு வேலை தேடு. எல்லோரும் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள்." என்று புத்தி கூறினார்.

இப்போது ரொம்ப நல்லவராக நடந்து விட்டதாக நினைப்போ என்று தொண்டை வரை துடித்து வந்த சீற்றம், "இதற்குமுன்னே ஆடிய இடத்தில் ஒரு மணிவரை ஆடிவிட்டு மீதி ராத்திரியை முதலாளி அறையில் கழிக்க வேண்டும். நாலுமணிநேரம் விடாமல் ஆடிக்களைத்திருப்பாளே என்கிற எண்ணமே அந்தப் பிசாசிற்கு இராது" என்று கூட ஆடுகிற ரூபா சொன்னது நினைவு வரவும் பட்டென்று அடங்கிப் போயிற்று.

அவர் சொல்வது சரிதான். கவனத்துடன்தான் இருக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் கழுத்தில் கத்தி வைத்து அவளை நாசப்படுத்த முயற்சிப்பது பற்றிய கூச்சமே இல்லாமல் ஆனந்தன் வந்து நின்றான். "நிர்வாகி அழைத்தாராமே" என்றான் நமட்டு சிரிப்புடன்.

வெண்ணையைத் திருடித் தின்ற பூனை மூஞ்சி இதேதான் என்று எண்ணிக் கொண்டாள் நிர்மலா. ஓர் அலட்சியத் தலைச் சிலுப்பலுடன் தன் வேலையில் ஈடுபட்டாள்.

"நீ ரொம்பவும் நல்ல பெண்ணாமே. உங்கள் நிர்வாகி சொன்னார்."

பட்டென அவளது வேலை நின்றது.

"ஒழுக்கம் தவறுகிற பெண் அல்ல என்றும் அவர் சொல்லியிருக்கலாமே "அவசரமாக நிமிர்ந்து," வேறு என்ன சொன்னார்?" என்று விசாரித்தாள்.

"அனுமதித்திருந்தால் நிறையவே சொல்லியிருப் பார். ஆனால் நான்தான் அவளது வார இறுதி எப்படிப் பட்டது என்று எனக்குத் தெரியும். அவள் நல்லவளா கெட்டவளா என்கிற சந்தேகம் விழுகிறபோது உங்களி டம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன், என்று கூறி அவர் வாயை அடைத்துவிட்டேன். மெய்யாகவேதான், உன் குணத்தைப் பற்றி எனக்கு என்ன அக்கறை?" என்று அவன் சிரிக்கவும் அவள் முகம் கருத்தது.

கடவுள் என்று ஒருவர் இருந்தால் இதே மாதிரி வலியை அவனுக்குத் திருப்பிக் கொடுக்க அவளுக்கு ஒரு வாய்ப்பு அவர் கொடுத்தே ஆக வேண்டும்.

அதே சம்பளத்துக்கு அதேமாதிரி வேலை என்று தேடி அலைந்தாள் நிர்மலா.

தகுதிகள் எதவும் இல்லாததால் வேறு எந்த வேலையும் தேட முயற்சிக்கவே இல்லை அவள்.

இப்போது செய்கிறமாதிரி வேலை போதும்...

முதலில் அவள் வேலை செய்த ஓட்டலை விடவும் பெரிய ஓட்டல்களில் முயற்சி செய்து பார்த்துத் தோற்றாள். இதே மாதிரி ஓட்டல்களிலும் பலன் அப்ப டித்தான் ஆயிற்று.

அலுத்துப்போய் இன்னம் கொஞ்சம் சாதாரண மான ஓட்டல்களில் முயற்சி செய்யத்தொடங்கினாள்.

கடைசியாக அவளுக்கு அளிக்கப் பட்டிருந்த ஒரு மாத நோட்டீஸ் காலமும் ஒரே வாரமாய்ச் சுருங்கி விட்ட சமயத்தில் உள்ளூர அவள் வெகுவாகக் கலங்கத்

தொடங்கியிருந்த வேளையில் இதேமாதிரி வேலை ஒன்று கிடைத்து அவளை நிமிர வைத்தது.

ஒப்பந்த பத்திரம் தயார் செய்து வைப்பதாகவும், மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பும் போது கையெழுத்திட்டு விட்டுச் செல்லும்படியாகவும் அந்த ஒட்டல் முதலாளி கூறவும் அவளுக்கு ஒரே உற்சாகம்.

இடையில் இரண்டு தரம் வெளியூர் சென்று திரும்பி வந்தான் ஆனந்தன். வலையை விரித்து வைத்து விட்டு காத்திருக்கும் வேட்டைப் போல ஒரு வேட்டைப் பார்வையுடன் சுற்றினான் அவன்.

நிர்மலாவின் கண்களில் படரத் தொடங்கியிருந்த கவலை மாறி நடப்பில், செயலில் துள்ளலைக் காணவும், "மெள்ள, மெள்ள, தலை கழுத்திலிருந்து தெறித்து விடும் போலத் தெரிகிறதே என்ன விஷயம்?" என்று விசாரித்தான்.

தலையைச் சரித்து ஓரக்கண்ணால் அவனை நோக்கினாள் நிர்மலா. இவனுக்குக் கொஞ்சமாவது திருப்பிக் கொடுக்க வேண்டாமா?

"கம்பர் சரித்திரம் படித்தபயன்" என்றாள் மிடுக்காக.

"ம்?"

"அதில் மன்னவனும் நீயோ? வளநாடும் நின்னதோ என்று கம்பர் குலோத்துங்க சோழ மன்னனிடம் சொன்னதாக ஓர் இடம் வரும்"

"ஓகோ" வளநாடு வேறு தேடியாயிற்றாக்கும்?" என்றான் அவன் சட்டென ஊகித்து. "எங்கே?"

"தெருவில் எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்!"

ஒரு கணம் திகைத்த ஆனந்தனின் விழிகளில் மறுகணமே சிரிப்பு மலர்ந்தது. " என்னவாம்?"என்றான் அப்பாவி போல .

"அதுதான் என்ன எங்கே என்று அத்தனை விவரங்களையும் ஆதியோடு அந்தமாய் உங்களிடம் சொல்வதற்காக நான் துடித்துக் கொண்டு இருக்கிறேனாமே, அதைத்தான். ஆனால் ஆச்சரியம் பாருங்கள், ஊருக்கெல்லாம் தெரிகிறது, எனக்குத் தெரியவில்லை. அதனால் ஒரு விவரமும் சொல்வதற்கு இல்லை" என்று உதட்டைப் பிதுக்கினாள் நிர்மலா.

இயற்கையாகவே அழகாக அமைந்து, லேசான உதட்டுச் சாயத்தில் பளபளத்த வடிவான இதழ்களில் ஆனந்தனின் பார்வை நிலைத்தது.

"ஏன்? வேலையைக் கெடுத்து விடுவேன் என்கிற பயமா?"

"எல்லோரும் நாதன் சார் மாதிரி முதுகு எலும்பற்று இருப்பார்களா, என்ன? ஆனால் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? கெடுப்பதற்கென்றே அலைகிறவர்கள் இருக்கும் போது ஒப்பந்தம் கையெழுத்தாகிற வரையில் கப்சிப் பென்று இருப்பதே மேல் என்பது என் எண்ணம்." என்றாள் அவள் துடுக்காக.

"ஓகோ! அந்த மசாமசா ஒப்பந்தம் எப்போது கையெழுத்தாகி என்றிலிருந்து அமுலுக்கு வருகிறதாம்?"

"இன்று மாலையே கையெழுத்து. நான் விரும்பினால் நாளையிலிருந்தே தொடங்கலாம்தான்." என்று பெருமையடித்தாள் அவள்.

"ஒரு மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டியது இல்லையா"

"உண்டு. நிச்சயமாய் உண்டுதான். அந்த ஒரு மாத நோட்டீஸ் ஒரு வாரமாய்ச் சுருங்கும்படி புண்ணியம் கட்டிக் கொண்டவர் நீங்கள்தானே" என்று திருப்தியோடு குத்தினாள் நிர்மலா. "இந்த ஒரு வார நோட்டீஸ் காலத்துக்கு உரிய பணத்தை அட்வான்ஸ் தொகையில் கொடுத்து விடும்படி புதிய பாஸ் கூறியிருக்கிறார். எனவே நாளைக்கே டாடாதான்" என்றாள் அவள் செருக்கோடு.

அவனது மகா சக்தி தவிடு பொடியாவதில் அவளுக்கு குதூகலம்.

ஆனால் முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல், "பெஸ்ட் ஆஃப் லக்" என்று உரைத்துவிட்டு அகன்றான் ஆனந்தன்.

வார்த்தைக்கு வார்த்தை திருப்பிக் கொடுத்தவளுக்கு, விலகிச் சென்று கொண்டிருந்த அவனது பரந்த முதுகைக் காண்கையில் உள்ளே வலித்தது.

வலிப்பானேன் என்று தன்மீதே ஆத்திரம் கொண்டவளாக மீண்டும் ஒரு தரம் தலையை சிலுப்பிவிட்டு வேலையில் ஈடுபட்டாள் அவள்.

அன்று மாலையில் இன்னொரு ஆனந்தம் அவளைத் தேடி வந்தது.

தங்கள் திருமணத்திற்காக அஞ்சலி, பாபு இருவரும் அவளை அழைக்க வந்தார்கள்.

தோழியின் முகத்தில் இருந்த பூரிப்பைக் காணவும் நிர்மலாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது.

இந்தக் கல்யாணத்துக்கு நானும் உதவியிருக்கிறேன். கடலில் அணைகட்ட ராமருக்கு உதவிய அணில் போல் ஒரு சிறு உதவி நானும் செய்திருக்கிறேன் என்கிற எண்ணம் அவளுக்குப் பூரிப்பைத் தந்தது.

ஆனால் அவளது உதவியை அற்பமாக மதியாமல் அவளை வானளாவ உயர்த்திப் பேசி, அழைப்பதற்கென்று கூடவே வந்திருந்த பாபுவுடைய தம்பி, தங்கைக்கு அறிமுகம் செய்து வைத்தனர் மணமக்கள்.

கூச்சத்தில் கன்னம் சிவக்க, வந்திருந்தோருக்குக் குளிர் பானங்கள் வரவழைத்து உபசரித்தாள் நிர்மலா.

இந்த உற்சாகத்துடனேயே மாலை வேலை முடிந்ததும் புதிய வேலை ஒப்பந்ததில் கையெழுத்திடுவதற்காகக் கிளம்பிச் சென்றாள் அவள்.

# 11

நிர்மலா புதிதாக வேலை ஒத்துக் கொள்வதாக இருந்த நவயுகம் ஓட்டல் நகர்புறத்தை விட்டுச் சற்று ஒதுங்கினாற் போல இருந்தது.

டெலிஃபோன் டைரக்டரியில் ஓட்டலின் பெயரைப் பார்த்து விட்டு, விலாசம் தேடி ஒருவாறு அங்கே சென்று பார்த்தபோது முதலில் அவளுக்குப் பெரும் ஏமாற்றமாகத்தான் இருந்தது.

ஒன்று வீட்டிலிருந்து இருந்த தூரம்.

அடுத்து, அங்கொருவர் இங்கொருவராக ஓரளவு அழுது வடிந்தாற்போல இருந்த அந்த ஓட்டலின் தோற்றம்.

இந்த ஓட்டலில் அவளுக்குத் தேவையான சம்பளம் கிடைப்பது சந்தேகம்தான். கிடைக்காது என்றே சொல்லிவிடலாம். ஆனால் வந்தது வந்தோம், கேட்டுவிட்டே போகலாம் என்று பெருமளவு அவநம்பிக்கையுடன் ஓட்டல் முதலாளியை அவள் பார்க்கப் போனாள்.

வேலைக்கு ஆள் எடுப்பதை எல்லாம் முதலாளியே நேரடியாக கவனிக்கிறார் என்கிறபோது இது ரொம்பவும் சின்ன ஓட்டலோ என்கிற சந்தேகம் வந்தபோதும் ஒரு பக்கம் அவளுக்கு நிம்மதியாகவும் இருந்தது. ஏனெனில் சில இடங்களில் சாமி தரக்கூடிய வரத்தைக் கூட இடையிலிருந்த பூசாரிகள் தனியாகக் காணிக்கை கேட்டு தட்டி விட்ட அனுபவங்களும் அவளுக்கு நேர்ந்திருந்தன.

ஓட்டல் முதலாளியைப் பார்த்ததும் அவளுக்கு மேலும் நம்பிக்கை உண்டாயிற்று.

பொது பொதுவென்று பஞ்சுப் பொதியால் ஆனது போன்ற அவரது சதை வளமும், பொன்னிறமும், இரு கை விரல்களிலும் ஒளிவிட்ட வைர மோதிரங்களும் அவரது செல்வ நிலையைப் பறைச்சாற்றின. அப்படி யானால் இந்த ஒட்டல் வருமானம் நன்றாக இருக்கிறது என்றுதானே அர்த்தம். அவளுக்கு சம்பளம் கொடுப்பதி லும் சிரமம் ஏதும் இராது.

அத்தோடு ஐம்பதைத் தாண்டியிருந்த அவரது தோற்றமும் அவளுக்கு நிம்மதியூட்டியது.

அவள் தன் தகுதியைக் கூறி வேலை கேட்டதும் சம் மதம் என்றார் அவர்.

"ஒட்டல் சுபத்தில் ஒரு தரம் உன் ஆட்டம் பார்த்திருக் கிறேன். ஆனால் நீ சொல்லும் வரை அது நீதான் என்று நான் நினைக்கவே இல்லை. அதிக மேக்கப் அந்த அளவு ஒப்பனை உன் முகத்துக்கு அவசியம் இல்லை. . . ஆனால் அதைப் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். முகத் தோடு, உனக்கு இந்த ஆட்டத்துக்குத் தேவையான உடலும் இருக்கிறது. இசைக்கும் சரியாக ஆடும் வயதும் இருக்கிறது. அதுபோதும் மற்றதற்கு இங்கே கொஞ்சம் பயிற்சி எடுத்தால் போதும். ." என்றவர் சம்பள விவரம் பேசினார்.

அதுவும் கிட்டத்தட்ட பழைய அளவே தருவதற்கு அவர் ஒத்துக் கொள்ளவும் அவளுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

"குறைந்தது ஓர் ஆண்டு ஒப்பந்தம். . ." என்று அவர் தொடங்கிய போது டெலிஃபோன் மணி அடிக்கவே எடுத்துப் பேசிவிட்டு, "இப்போது நான் வெளியே போக வேண்டியிருக்கிறது. ஒப்பந்தம் தயார் செய்து வைக்கச் சொல்லுகிறேன். மாலையில் கையெழுத்திட்டு விட்டு உடனேயே கூட வேலையைத் தொடங்கி விடலாம், அங்கே ஏதும் நோட்டீஸ் தரவேண்டும் அது இது என்றால் 'அட்வான்ஸ்' பணம் தருகிறேன். கட்டி விட்டு உடனே வேலையை ராஜினாமா செய்து விட்டு வந்து விடு" என்று கூறி அனுப்பினார் அவர்.

நிம்மதியும் மகிழ்ச்சியுமாக நன்றி கூறி விடை பெற்றுச் சென்றாள் அவள்.

மாலையில் பாதிவழி ஆட்டோவில் வந்த போதும் ஓட்டல் நவயுகத்தை அவள் சென்று அடைந்த போது கிட்டத்தட்ட இருட்டி விட்டது.

அவள் வந்து சேரும் வரை அன்னைக்குத் துணை இருக்கும் ஆயா போய்விட்டாள் என்றாலும் மகளைக் காணவில்லையே என்று தாயார் தேடத் தொடங்கி விடக் கூடாதே என்ற கவலையுடன் இறங்கியவளுக்குச் சற்று நேரம் இடம் மாறி வந்துவிட்டதாகவே தோன்றி விட்டது.

கண்ணைப் பறிக்கும் வண்ண விளக்குகளுடன் பிரகாசமாய் ஒளிர்ந்த இந்த இடம்தான் காலையில் அழுது வடிந்த அதே இடம் என்று எப்படி நம்புவது?

நவயுகம் என்று நியான் எழுத்துக்களும் கூடச் சேர்ந்து பள பளத்ததைக் கண்டிராவிட்டால் இது வேறு இடம் என்று திரும்பிச் சென்றிருப்பாள் நிர்மலா.

வரவேற்பில் சென்று அவள் பெயரைச் சொன்ன துமே பணியாள் ஒருவன் ஓடிவந்து அவளை ஓட்டலின் பக்கவாட்டில் இருந்த வழியில் அழைத்து சென்றான்.

அழைத்துச் சென்றவனையும் காலையில் பார்த்த நினைவு இருக்கவே பேசாமல் அவன் பின்னே சென்றாள் நிர்மலா.

ஆனால் ஓட்டலின் உள்ளிருந்து வந்த காதை பிளக் கும்படியான இசையும், அதை மீறிய உரத்த பேச்சும் சிரிப்பும் அவள் மனதைக் கலக்கின.

அவள் முன்பு வேலை செய்த ஓட்டல் சுபத்தில் இது போன்ற கூச்சலை அவள் கேட்டதே இல்லையே.

கட்டிடத்தின் பக்கவாட்டில் இருந்த மாடிப்படி வழியே மேலே மாடிக்கு அவளை அழைத்துச் சென்றான் அவளுக்கு வழிகாட்டி வந்தவன்.

படி; ஏறி முடிக்கையில், கீழிருந்து வந்த சத்தம் தூரத்து இடிமுழக்கம் போலச் சற்று ஓசை குறைந்து கேட்டது.

சொல்லப்போனால் இங்கே ஒளியும் குறைச்சல் தான். அங்காங்கே இருந்த சிவப்பு நிற சீ ரோவாட் பல்பு கள்தான் அந்தப் பகுதியை ஓரளவு வெளிச்சப்படுத்திக் கொண்டிருந்தன.

சிவப்பு நிற பல்புகள்

ஏதோ அவள் வயிற்றைப் பிசைய, 'சிவப்பு விளக் குப் பகுதி' என்ற ஆனந்தனின் குரல் அவளது செவிக ளில் துல்லியமாக ஒலித்து அவளது கலக்கத்தை அதிகப் படுத்தியது.

சை! இருக்கிற வேதனையில் இவன் வேறு என்று ஆத்திரத்துடன் தலையை சிலுப்பி ஆனந்தனின் நினைவை உதற முயன்றாள் நிர்மலா.

முடிவே இல்லாததுபோல நீண்ட அந்த வராந்தா வின் கடைசியில் இருந்த அறையின் கதவை மரியாதை யுடன் தட்டி விட்டு, கதவைத் திறந்து உள்ளே இருந்தவரிடம் இந்தியில் ஏதோ சொன்னான் நிர்மலா வுக்கு வழிகாட்டியவன்.

காதைத் தீட்டிக் கொண்டு கூர்மையுடன் கவனித் தாள் நிர்மலா.

"வரச்சொல்" என்று உள்ளிருந்து கேட்ட குரல் ஒட்டல் முதலாளியுடையதுதான்.

எதற்கும் சந்தேகத்துக்கு வெளியில் இருந்து அறைக் குள் எச்சரிக்கையோடு எட்டிப் பார்த்தாள்.

அவரேதான். வெண்ணிற பைஜாமாகுர்தாவில், வைர மோதிரங்கள் பளபளக்க அங்கே அமர்ந்திருந்த வர் அவளுக்கு வேலை கொடுப்பதாகவும் சொன்ன ஒட்டல் முதலாளியேதான்.

அப்பாடி என்று நிம்மதியுற்றவளாக அறைக்குள் சென்றாள் அவள்.

உள்ளே சோபாவில் அமர்ந்து ஃபிளானல் துணியால் வைர மோதிரங்களைத் தேய்த்து மெருகேற்றிக் கொண்டு இருந்தவரின் அருகில் சென்று நின்று, "சற்று தாமதமாகி விட்டதற்கு மன்னியுங்கள் சார்" என்றாள் பணிவுடன்.

"இம்" என்று அடுத்த மோதிரத்தைத் தேய்க்கத் தொடங்கினார் பெரியவர்.

"ஒ.ஒப்பந்தப் பத்திரம் டைப் செய்தாயிற்றா, சார்" என்று வினயமாகவே வினவினாள் நிர்மலா.

"ஆமாமாம்" என்றார் கருமமே கண்ணாயிருந்தவர்.

"எங்கே இருக்கிறது, சார்? எடுத்துக் கொடுத்தீர்களானால் கையெழுத்துப் போட்டு விடுகிறேன்." என்றாள் அவள்.

"பொறு, பொறு தருகிறேன்" என்று கூறி மோதிரங்களை விளக்கொளியில் இங்குமங்கும் திருப்பிப் பார்த்துத் திருப்பதியுற்றபின், அவளிடம் கவனத்தைத் திருப்பினார் அவர்.

"ஓர் ஒப்பந்தம் என்பது இருசாராரையும் கட்டுப்படுத்துகிற ஒன்று. உனக்கோ சம்பளமும் அதிகம். கொடுக்கிற சம்பளத்துக்கு நீ தகுதிதானா என்று எனக்கு தெரிய வேண்டாமா?" என்று அவர் கேட்கவும் நிர்மலா திகைத்தாள்.

"நீங்கள். .நீங்கள்தான் என் ஆட்டத்தை ஒட்டல் சுபத்தில் பார்த்திருப்பதாகச் சொன்னீர்களே, வே. .று என்ன?" என்றாள் சிறு கலக்கத்துடன்

"ஆங்! வெறும் ஆட்டத்துக்கு ஆயிரக் கணக்கில் சம்பளம் கொடுக்க நான் என்ன இளிச்ச வாயனா?" என்று அந்தச் சதைமலை கூறவும் நிர்மலா மேலும் திகைத்தாள்.

வரவேற்பு வேலையைச் செய்ய வேண்டாம் என்று ஏற்கனவே சொல்லியாயிற்று பிறகு என்ன?

"பி..பின்னே?" என்றாள் உள்ளூற மூண்ட கலவரத்துடன்.

"சொல்கிறேன்... சொல்லாமல் எப்படி? என்று அறையைப் பாதி மறைத்துத் தொங்கிய திரையைக் காட்டி "அதோ அங்கே படுக்கை இருக்கிறது, (முதலில் நீ என்னைத் திருப்திப்படுத்து. பிறகு உனக்கு சரியான வாடிக்கையை நானே நிறையப் பிடித்துத் தருகிறேன்." என்றது சதைமலை.

மாலையில் அருந்திய காஃபி வெளிவந்துவிடுமோ என்று அஞ்சி சில கணங்கள் வாயை இறுக மூடி நின்றாள் நிர்மலா. கொஞ்சம் சரியானதும், "சாரிசார். இந்த மாதிரி வேலை எனக்குச் சரிப் படாது." என்று கூறி அறை வாயிலை நோக்கி நடக்கலானாள்.

நெஞ்சுகனத்துப் போயிற்று அவளுக்கு.

புதிய வேலை அவளுக்கு கிடைக்க வில்லை! இரண்டு வேளை அலைச்சல், ஆட்டோ செலவு, எல்லாவற்றுக்கும் மேலாக ஆனந்தனிடம் அடித்த பெருமை எல்லாம் வீண்!

வருத்தமும் சோர்வுமாய் நடந்தவளை உள்ளிருந்தவனின் குரல் அழைத்தது. "அட, நில்லு பொண்ணு. இந்த இடம் வரை வந்து விட்டு அவ்வளவு லேசாய் வெளியே போய் விடலாம் என்றா நினைத்தாய்?" என்று கேட்டபடி எழுந்தான் அவன்.

சாத்தியிருந்த கதவு சந்தேகத்தை தர ஓடிச் சென்று கதவை இழுத்துத் திறக்க முயன்றாள் நிர்மலா. அவள் அஞ்சியது போலவே கதவு வெளிப்புறமாய்ப் பூட்டப் பட்டிருக்க அச்சத்துடன் திரும்பிப் பார்த்தாள் அவள்.

மாமிச மலை நிதானமாக அவளை நோக்கி வந்து கொண்டு இருந்தது. தூண்கள் போல தொங்கிய பெரும் கரங்களைப் பார்க்கையில் கதிகலங்கியது அவளுக்கு.

உண்டு, உண்டு வளர்த்த வலு இருக்கத்தானே செய்யும்? பலத்தில் இவனை எப்படி வெல்லமுடியும்?

வயதானவராகத் தெரிகிறது என்று நிம்மதியாய் இருந்தாளே, கொழுவிய சதையல்லவா வயதைக் கூட்டிக் காட்டியிருக்கும் போலத் தெரிகிறது.

தொண்டை கிழிய கத்தினாலும் கீழேயிருந்த இரைச்சலைத் தாண்டி யார் காதிலும் அவள் குரல் விழப் போவது இல்லை. அப்படியே கேட்டாலும் உதவிக்கு வருகிறவர்கள் போல கீழே இருந்தவர்கள் தோன்றவில்லையே.

பின்னே? மனம் கவர்ந்த ஆனந்தனிடமே இழக்க மறுத்த மானம் இந்த யானையின் காலில் சிக்கி அழிவதா? நிச்சயமாக இல்லை.

அச்சத்தை விலக்கிய வண்ணம் அங்கும் இங்கும் பார்த்தாள். அருகே ஒரு மேசைமேல் அழகான பீங்கான் பூக் கிண்ணம் ஒன்று பல வண்ணச் செய்மலர்களுடன் இருந்தது.

சட்டெனப் பாய்ந்து, மலர்களைக் கொட்டி விட்டு அந்தப் பூக்குவளையைக் கையில் தூக்கிக் கொண்டாள்.

நல்ல கனமான பூச்சாடிதான். இதில் அடித்தால் மண்டை உடைவது திண்ணம்.

இருகைகளாலும் சாடியை மூச்சுப்பிடித்துத் தூக்கி, "அங்கேயே நில். மரியாதையாக யாரையாவது கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் சொல்லு. இல்லையானால் மண்டை பிளந்துவிடும்" என்று மிரட்டினாள்.

அவன் முகத்தில் கோபம் தெரிந்தது. "ஏய், முதலில் அதைக் கீழே வை. அதன் விலை என்ன தெரியுமா? அதை உடைத்தாயானால் உன்னைத் தொலைத்துக் கட்டிவிடுவேன். ஜாக்கிரதை" என்று அதட்டியபடியே முன்னேறினான்.

இதற்கு மேல் தாங்காது என்று பூச்சாடியை ஓங்கி அடித்தாள் நிர்மலா.

சட்டென அவன் நகர்ந்து கொள்ள, பூச்சாடி அவனைத் தாண்டி சென்று மெத்தென்றிருந்த ரத்தினக் கம்பளத்தில் விழுந்து, உடையாமலே உருண்டது.

அது உடையவில்லை என்பதை அறிந்து நிம்மதியுடன் மீண்டும் அவள் புறம் திரும்பினான், ஒட்டல் முதலாளி. "கழுதை, உனக்கு என்ன திமிர் இருக்க வேண்டும். ஐநூறு ஆண்டுகளுக்கு முந்தைய சாடி அது. அதன் விலை தெரியாமல் விட்டெறிந்து விட்டாயே! உடைந்திருந்தால் என்ன ஆவது? என்னை யார் என்று நினைத்து ஆட்டம் காட்டுகிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்.!" என்று ஆத்திரத்துடன் அவளைப் பற்றி உலுக்கினான்.

தோள் பட்டை பிய்ந்துவிடும் போல வலித்தது நிர்மலாவுக்கு. எவ்வளவோ சமாளிக்க முயன்றும் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. கை கால்கள் தொய்ந்தன.

அந்த ராட்சதனை எதிர்ப்பதற்குத் தேவையான பொன்னான சக்தியை வேகமாக இழந்து கொண்டிருப்பது புரிந்து அவள் கதிகலங்கிய வேளையில் அவனது உலுக்கல் நின்றது.

அவனது பொடிக் கண்களின் பார்வை அவள் முகத்தைவிட்டு அவளுக்குப் பின்புறம் பாய்ந்தது. "யாரடா நீ?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் அந்த வில்லன்.

"உனக்கு எமன்" என்று சுருக்கமாக வந்தது பதில்.

ஆனந்தன்!

சென்ற உயிர் திரும்பிவந்தாற்போல அவசரமாகத் திரும்ப முயன்ற நிர்மலா கை கால்கள் வசத்துக்கு வராமல் தடுமாறினாள்.

அதற்குள் அவளை அப்பால் தள்ளிவிட்டு, "போடா வெளியே" என்று கையை நீட்டிக் கொண்டு முன்னேறினான் ஒட்டல்காரன்.

கால்கள் துணியாய்த்துவள தொப்பென்று விழுந்த நிர்மலாவுக்கு மறுபடியும் அச்சம் மிகுந்தது.

இந்த ராட்சதனுக்கு ஆனந்தன் தான் எந்த மூலை?

ஆனால் அவனது பிடிக்கு அகப்படாமல் சட்டென நகர்ந்து கொண்டான் ஆனந்தன். மற்றவன் சமாளித்துத் திரும்புமுன் இருகைகளாலும் வேகமாக அவன் தலையில் அடித்தான்.

சரமாரியான அடிகள். தலையில், கழுத்தில், காதில் என்று விழ விழ சதைமலை தடுமாறிக் கடைசியாகக் கீழே விழுந்தது. அவனது காட்டுக் கத்தல் கூட அடங்கலாயிற்று.

கீழ்த்தளத்து இரைச்சலுக்கு இப்போது மனமார நன்றி சொன்னாள் நிர்மலா. இந்த எருமைக் கத்தல் கூடக் கீழே கேட்டிராதல்லவா?

மீண்டும் ஒருதரம் ஆனந்தன் அடுத்தவன் தலைக்கு நேராகக் கை ஓங்கவும் கைகூப்பி விட்டு விடுமாறு மூச்சிரைக்க வேண்டினான் அவன்.

"தலை தவிர எங்கே அடித்தாலும் இந்தச் சதை மலைகளுக்கு உள்ளே உறைக்காது. இந்த அதிகப்படி சதை மெத்தை மாதிரி தாங்கிக் கொள்ளும். " என்று விளக்கியபடியே நிர்மலாவுக்குக் கை கொடுத்து எழுப்பி விட்டான் ஆனந்தன்.

இன்னமும் கால்கள் லேசாக நடுங்க ஒரு விம்மலுடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள் நிர்மலா.

அவளை அணைத்து, தோளைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் படுத்தியவன், "இங்கே அதிக நேரம் தாமதிப்பது நல்லதில்லை, நிர்மலா. இவனுடைய எடுபிடி எப்போது வேண்டுமானாலும் திரும்பி வந்து விடலாம்." என்று உரைக்கவும் ஒருவாறு விலகி நின்றாள் நிர்மலா.

ஆனால் பாதுகாப்பை இழந்தாற் போல உணர்ந்து உடல் லேசாக நடுங்குவதை அவளால் தவிர்க்க முடியவில்லை.

நடுங்கிய உதட்டின் மேல் அவளது பற்கள் பதிவதைக் காணவும் ஆனந்தனின் முகம் கருத்தது. சினம் கொண்ட பார்வை சுழலக் கீழே விழுந்து கிடந்த ஐநூறு ஆண்டு பூச்சாடி அவன் கண்ணில் பட்டது.

குனிந்து அதை எடுத்து ஓங்கிச் சுவரில் அடித்தான் ஆனந்தன்.

பூச்சாடி சுக்கு நூறாக உடைந்து சிதறவும் கீழே கிடந்தவனின் முகம் போன போக்கைப் பார்த்து நிர்மலாவின் முகத்தில் புன்னகை கீற்றாக மலர்ந்தது.

திருப்தியுற்றவனாக அவளது தோளை அணைத்தபடி கிளம்பிவிட்டான்.

அவனது அணைப்பு தென்பூட்டிய போதும், படியிறங்கிச் சென்று, காரில் ஏறி, கார் கிளம்பி, அந்த இடத்தைவிட்டு அகலும் வரை நிர்மலாவிற்கு உள்ளூரக் கிலிதான்.

எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறாள்!

அந்தக் குண்டனைக் காயப் படுத்தாமல் பூச்சாடி கீழே விழுந்ததும் அவன் ஆத்திரமாக பற்றி உலுக்கியதை நினைக்கையில் அப்போதும் உடல் நடுங்கியது அவளுக்கு.

காரைச் சற்று ஓரமாக நிறுத்தினான் ஆனந்தன்.

நிர்மலாவின் அருகே நகர்ந்து அவளை லேசாக அணைத்துக் கொண்டான். அந்தக் கதகதப்பில் மெல்ல அவளது நடுக்கம் குறைந்தது.

சாலையிலும் நடமாட்டம் தெரியவே, அவளை விட்டு விலகி அமர்ந்து, "ரொம்ப சாரிம்மா" என்றான், அவன் சோகமாக.

"ஏ.. ஏன்?"

"ச்சு. இதுவே சினிமா கதாநாயகன் என்றால் கோட்டுப்போட்டு வந்திருப்பான். குறைந்தது ஓர் இருபது பேரையாவது அடித்துப் போட்டுவிட்டு, சற்றும் கசங்காத அழுக்குப் படாத தன் கோட்டைக் கழற்றி உனக்கு போர்த்தி விட்டிருப்பான். ஆனால். . . அதற்காக இந்த சென்னை வெப்பத்தில் நான் கோட்டு அணிந்து காப்பாற்ற வருவேன் என்று எதிர்பார்ப்பது ரொம்பவும் அதிகப் படி"என்று அவன் விளக்கவும் அவளுக்கு சிரிப்பு வந்து விட்டது.

"ம்ம்..இதுசரி.இப்போது ஏதாவது குடிக்கலாமா?"

"நான் குளிர்பானத்தைதான் சொன்னேன் தாயே!" என்று கூறி பத்தடி தூரத்தில் இருந்த பஸ் நிறுத்தத்து பங்க் கடையைக் காட்டினான் ஆனந்தன்.

அவள் தலையாட்டவும் இறங்கிச் சென்று இரண்டு மாம்பழச் சாறு பாட்டில்களை வாங்கி வந்தான்.

தொண்டைக்குள் பழச்சாறு இதமாக இறங்க, "நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? அதுவும் சரியான சமயத்தில்?" என்று விசாரித்தாள் நிர்மலா.

செல்வுமிடம் பற்றிச் சொல்லவே முடியாது என்று மறுத்ததை நினைத்து அவமானத்துடன் தான் கேட்டாள்.

## 12

புதிய வேலை பற்றி ஆனந்தன் விசாரித்தபோது, அவனைக் கேலி என்கிற பார்வையால் மட்டம் தட்டிப் பேசியதையும் மற்ற விவரங்களைக் கூற மறுத்ததையும் எண்ணி நிர்மலாவிற்கு மிகவும் அவமானமாக இருந்தது.

கடைசியில் அவள் யாரை மட்டம் தட்டிப் பேசினளோ அவன்தானே அவளைக் காப்பாற்ற வரும்படி ஆயிற்று!

தெரு விளக்கின் ஒளியில் அவள் முகத்தில் அவமானக் கன்றலைக் காணவும், ஆனந்தன் அவள் கையைப் பற்றி அழுத்தி, "ஏய், நிர்மலா, என்ன இது? சும்மா வெறும் கேலிப் பேச்சு. எப்போதும் பேசுவதுதானே. அதைப் போய்ப் பெரிதாக நினைத்துக் கொண்டு...ஊகூம்" என்று தேற்றினான்.

மேலே அவள் அதிலேயே உழன்று கொண்டிருக்க இடம் கொடாமல் தன் விவரம் சொல்லத் தொடங்கினான்.

"ஒப்பந்தம் போடுவதற்கு மாலையில் வரச் சொன்னதாக நீ கூறியதுமே எனக்குச் சந்தேகம். ஏதோ மட்ட ரகச் சதைக் கடையில் மாட்டப் போகிறாய் என்று தோன்றிவிட்டது. அப்போது சொன்னால் நீ ஒத்திருக்க மாட்டாய்" என்றவன் ஒரு கிண்டல் சிரிப்புடன், "விவரம் கேட்டாலே உனக்குச் சொல்லப் பிடிக்கவில்லை. சரிதான் என்று காத்திருந்தேன். மாலையில் நான் எதிர் பார்த்தது போலவே நீ பின் வழியாகக் கிளம்பினாயா, உன் பின்னலேயே வந்தேன்" என்று கூறி நன்றாகவே சிரித்தான்.

ஓர் அசட்டு நகையுடன் அவள் தலைகுனியவும், மேலும் நகைத்துவிட்டு, "நீ உள்ளே சென்றதும் வெளியே வந்து கதவை வெளிப்புறமாகப் பூட்டிக் கொண்டு வந்த எடுபிடி என்னைப் பார்த்துவிட்டான். நான் உடனே இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை அவனிடம் நீட்டி, அவன் ஒத்துக் கொள்ளும் விதமாக, எனக்கு ஒரு பார்ட்டி அழைத்து வரச் சொன்னேன். வாயெல்லாம் பல்லாகிப் போயிற்று. அழைத்து வந்த பின் இன்னும் தரவேண்டும் என்று பேரம் வேறு எனக்கு அவன் போனால் போதும் என்று இருந்ததா, எல்லாவற்றுக்கும் தலையாட்டி விட்டேன்.

"அடுத்த ஹாலில் என்னை உட்கார வைத்து விட்டு அவன் ஆள் அழைத்துவரப் போனானா, அவன் தலை மறைந்ததும் ஓடி வந்தேன். அதற்குள்... பிறகு நடந்தது உனக்குத் தெரியும்" என்றான் ஆனந்தன்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு மீண்டும் தலை குனியவும், வேடிக்கை போலச் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு, "அய்யா போர்க்கலைகள் கற்றிருந்தது நல்லதாகிப் போயிற்று. ஒரு மகா பயங்கர கேவலத்திலிருந்து உன்னைக் காப்பாற்ற முடிந்தது" என்று பெருமையடித்தான்.

பொறிதட்டினாற்போல ஒன்று தோன்ற, அவன் முகத்தை ஆழ்ந்து நோக்கினாள் நிர்மலா. ஓரக் கண்ணில் கூர்மையுடன், "எதிலிருந்து காப்பாற்றினீர் கள்?" என்று சீரியசாக விசாரித்தாள்.

சட்டெனப் புன்னகை செய்து, "என்னை அந்த மாதிரி மடக்க முடியாது பெண்ணே. அந்தப் பாணை வயிற்று அரைக் கிழமும் நானும் ஒன்றல்ல. அத்தோடு உனக்கு என்னிடம் லயிப்பு உண்டு என்பதும் எனக்கும் உனக்கும் தெரிந்த விஷயம்" என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக. "ரொம்பவும் அதிகத்துக்கு ஆசைப்படுகி றாய் அதுதான்பிழை"

என்ன பெரிய லயிப்பு? அதற்காக மானம் மரியாதை எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு விடுவார்களா? அதைத்தானே இவனும் எதிர் பார்க்கி றான்? இதில் இவன் மட்டும் என்ன உயர்வு?

அவன் மட்டரக சதைக் கடைக்காரன் என்றால் இவ னுடையது உயர்ரகச் சதைக் கடையாக்கும்!

கசந்த மனதுடன் முகத்தை வெளிப்புறம் திருப்பி இருளை வெறித்தாள் நிர்மலா.

அவளது பின்னந்தலையைச் சற்று நேரம் வெறித் தான் ஆனந்தன். அவளை இந்த மன நிலையில் விட்டு விட மனம் வராமல், "ஆமாம், இவ்வளவு மெனக்கெட்டு இருக்கிறேன். அடி தடி வேறு. பதிலுக்கு ஒரு கிஸ்... ஒரு கை குலுக்கல், குறைந்தபட்சம் இந்த செப்பு வாயால் ஒரு நன்றி கூடக் கிடையாதா? ஊகூம்" என்று ஏங்குவது போல் நடித்தான்.

தலையைத் திருப்பி அகன்ற விழிகளை உயர்த்தி அவன் முகத்தை சற்று நேரம் நோக்கியவள் மெல்லத் தலையசைத்தாள், "இந்த மாதிரி மட்டரகமான இடத்தி லாவது வேலை தேடியாக வேண்டிய கட்டாயத்தை எனக்கு உண்டாக்கியதே நீங்கள் தானே. உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்ல முடியும்? உங்களிடம் அந்த மாதிரி நன்றிக்கடன் பட்டதுபோல எண்ணத்தை

மனதில் உருவாக விடுவது பெரிய முட்டாள்தனமும் கூட ஆனால்... என்று பாதி மீதியிருந்த பானத்தோடு பாட்டிலை சரிந்து விழுந்து விடாமல் கவனத்துடன் இருக்கையில் வைத்து, "இதற்கு நன்றி" என்று கூறி வேகமாக இறங்கி நடந்து அப்போது அந்த நிறுத்தத்தில் வந்து நின்ற பஸ்சில் நம்பரைப் பாராமல் ஏறி அமர்ந்து கொண்டாள் நிர்மலா.

மேலும் இரண்டு பஸ் மாறி ஒரு வழியாக நிர்மலா வீடு சென்று சேர்ந்த போது மணி ஒன்பதை எட்டியிருந்தது.

தாயாரைப் பார்த்துக் கொள்ளும் ஆயாவிடம் ஆயிரம் மன்னிப்புக் கேட்டு, அன்னைக்காக வாங்கி வைத்திருந்த இரண்டு ஆப்பிள்களையும், இரண்டு சாத்துக்குடிப் பழங்களையும் எடுத்துக் கொடுத்த பிறகே அந்த அம்மாளின் முகம் இளகிற்று.

"நான் ஒண்டிக்கட்டை எனக்கெதற்கு இத்தனை?" என்று கூறி இருவகைப் பழங்களிலும் ஒவ்வொன்றை மேசை மேலேயே வைத்து விட்டு, "இங்க வாம்மா. உனக்கு ராத்திரிக் கென்று உப்புமா கிளறினேன். வா. போதுமா என்று பார்" என்று நிர்மலாவைச் சமையல் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

"உங்கள் அம்மாதான் துடித்து போயிட்டாங்க, கண்ணு. அம்மாவே உடம்பு சரியில்லாதது. அதுதான் எனக்கு உன் மேலே கோபமாயிட்டது ஆனா... ஏன் கண்ணு. அங்கே உன் ஆபிசில் ஏதேனும் தகராறா? ஒரு மாசமா லேட்டா லேட்டா வர்றியே?" என்று விசாரித்தாள் ஆயா.

இவளிடம் என்னவென்று விளக்குவது? ஒன்றுமே இல்லையென்று மறைப்பதும் முடியாது. வேலையை விடுகின்ற நாளில் இவளுக்கும் வேலை இல்லை என்று சொல்லியாக வேண்டுமே!

"ஆமாம். ஆயா " என்று ஒத்துக் கொண்டாள் நிர்மலா. "இந்த வேலையில்... இதில் நீடிக்க முடியாது

ஆயா. அதனால் வேறு வேலை தேடிக் கொண்டு அலை வதில் லேட்டாகி விடுகிறது" என்று ஓரளவு உண்மையே உரைத்தாள். "அம்மாவுக்குத் தெரிந்தால் வருத்தப் படுவார்களே என்று சொல்லாமல் வைத்திருக் கிறேன்."

உடனே வெகுவாக இளகி, "கவலைப் படாதே, கண்ணு. உனக்கு இதைவிடப் பெரிய வேலை கிடைக்கட்டுமென்று நான் புள்ளையாரை வேண்டிக்கி றேன். தைரியமாயிரு" என்று நிர்மலாவுக்குத் தேறுதல் உரைத்து கிளம்பினாள் ஆயா.

அஞ்சலி இல்லாததால் வேலை அதிகம் என்று தாயாரிடம் உரைத்து சமாளித்து வேலைகளை முடித்துப் படுத்தபோது மிகவும் களைப்பாக இருந்தபோதும் அவ ளுக்குத் தூக்கம் வரமறுத்தது.

இன்னும் வேறு வேலை தேடுவதில் அவளுக்கு நம் பிக்கை இல்லை. அதுவும் இந்த மாதிரி வேலை தேடும் எண்ணமே செத்துப் போயிற்று.

வரவேற்புப் பெண் வேலை கிடைக்கத்தான் செய்யும். அதில் வரக்கூடிய சம்பளம் இரு வயிறுகளுக் குத் தாராளமாகப் போதும் தான்.

ஆனால் வெறும் வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாதே.

படிப்பை முடித்திருந்தால் கூட அதற்குரிய வேலை கிடைத்திருந்தாலும் கூட அவளுக்குத் தேவையான பணம் அதில் வருவது சாத்தியமில்லை.

இழக்கப் போகிற நேரத்தில்தான் நாதன் அங்கிள் செய்த உதவியின் அளவும் மதிப்பும் கூட முழுமையா கப் புரிந்தது.

வேறே யார் எங்கே இந்த உதவி செய்யப் போகி றார்கள்.

நிச்சயமாக யாரும் செய்யப்போவது இல்லை. எனவே இன்னமும் ஆறே நாட்கள்தான்.

சூரியனை நிறுத்திவைத்த நளாயினியை நினைக்கையில் இப்போது புது மரியாதை தோன்றிற்று.

கட்டிய கணவனைத் தாசி வீட்டுக்கு சுமந்து சென்றாளாம். சீ ச்சீ . புழுவை விடக் கேவலம் என்று முன்பு ஏளனமும் எரிச்சலுமாக நினைத்த பெண்மணி தான்.

ஆனால் அவள் காலத்தையே அல்லவா நிறுத்தியிருக்கிறாள்!

நிர்மலாவுக்கு மட்டும் அந்த சக்தியிருந்தால் இந்த ஆறுநாட்களையும் அப்படியே நிறுத்திவைத்துக் கொள்வாளே.

அது இல்லாத காரணத்தால், அந்த கடைசி ஒரு வாரத்தில் மீதியிருந்த ஆறு நாட்களும் சற்றும் நில்லாமல் ஓர் இரக்கமற்ற அரக்கத் தனத்துடன் சீ ரான வேகத்துடன் சென்று மறையத் தொடங்கின.

கையாலாகாத நிராசையுடன், ஒவ்வொரு நாளாகச் சென்று மறைவதைக் கையைக் கட்டிக் கொண்டு பார்த்திருந்தாள் அவள்.

' ஆறு, ஐந்தாகி, நாலாகி, மூன்றாகி, இரண்டில் வந்து நின்றது.

இன்னும் ஒரே ஒரு நாள்,

அப்புறம் வேலை இல்லாதுபோகும். அதன் விளைவாகச் சம்பளம் இல்லாது போகும். பிறகு அம்மாவுக்கு மருந்து வாங்க முடியாமல் போகும். அப்புறம் தரையில் விழுந்த மீன் போல ஒரு மூச்சுக் காற்றுக்குத் தவியாய்த் தவித்து அவளுடைய அருமைத் தாயாரின் உயிர் ஒடுங்குவதை அவள் பேசாமல் பார்த்துக் கொண்டு இருந்தாக வேண்டும்.

இது எவ்வளவு பெரிய துக்கம் என்று ஆனந்தனுக்கு ஏன் தெரியவில்லை!

ஒரு வேளை தண்ணீரில் வாழும் மீனுக்கு பாலைவனத்தில் தாகத்தினால் இறப்பவர்கள் பற்றி உணரமுடி

யாதது போல சுகத்திலேயே பழகிவிட்ட இவனுக்கு பிறரின் துன்பம் புரியவில்லையோ?

எடுத்துச் சொன்னால் புரியக் கூடுமா?

அந்த ஒரு முயற்சியைத்தான் ஏன் செய்யாமல் விடுவது?

நினைத்ததும் முடிவு செய்து, நேரே நாதனிடம் சென்று நின்றாள்.

ஒரு தரம் அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, மேசை மேல் இருந்த எதையெல்லாமோ அடுக்கத் தொடங்கினார் அவர். "என்ன விஷயம்?" என்றார் நிமிராமலேயே.

"நான்.. நான் கடைசி முயற்சியாக மிஸ்டர் ஆனந்தனிடம் பேசிப் பார்க்கலாம் என்று நினைத்தேன். அங்கே வரவேற்பில் கூட இருப்பது புது ஆள். பாலன் சாரை ..." என்று அவள் இழுக்குமுன், "இதோ அனுப்பி வைக்கிறேன்" என்று முடித்தார் அவர்.

இவ்வளவேனும் அவர் செய்யா விட்டால் எப்படி?

இன்னமும் குனிந்து மேசையின் இழுப்பறையில் எதையோ தேண்டியபடி, "ஜாக்கிரதையாக இரு" என்று எழும்பாத குரலில் சேர்த்து உரைத்தார்.

ஒரு கசந்த முறுவலுடன் திரும்பிச் சென்றாள் நிர்மலா.

அவள் திரும்பிப் போகத் தொடங்கியதும் நிமிர்ந்து அவள் முதுகை வெறித்துப் பார்த்த நாதனுக்குக் கண் கலங்கியது.

ஏற்கனவே சற்று மெல்லிய மேனி நிர்மலாவுக்கு. அது இந்த ஒரு மாதத்தில் மேலும் மெலிந்து விட்டதைக் காண அவருக்கு வேதனையாக இருந்தது.

என்னதான் குடும்பமும், அதற்குதான் முதல் கடமை என்று பேசிய போதும் அவரும் மனச் சாட்சி உள்ள மனிதர்தானே. கேளாமலே குறிப்பறிந்து எத்தனையோ

உதவிகள் செய்து கைதூக்கி விட்ட நண்பரின் நினைவு வேறு அவரைத் துன்புறுத்தியது. அவருடைய அருமை மகளை இந்த இக்கட்டில் கைவிட்டு விட்டுச் சும்மா இருப்பதா?

இல்லையில்லை. ஏதாவது செய்தாக வேண்டும் ஏதாவது.... அவருடைய குடும்பத்துக்கும் கஷ்டம் நேர்ந்து விடாமல் ஏதாவது செய்யவேண்டும். ஏனெனில் அவருக்கும் ஒரு சின்ன மகள் இருக்கிறாள். அவளுக்கு இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது.

ஆனந்தன் அவன் வழக்கமாகத் தங்கும் ராயல் சூட்டில்தான் இருந்தான். டெலிஃபோனிலேயே தன் வேலைகளை முடித்து எஸ். டி. டி பில்லை விஷமென ஏற்றிக்கொண்டு, அன்று சொன்னது போல அங்கேயே தான் இருந்தான் என்பது நிர்மலா அறிந்ததே. தொலைபேசித் தொடர்புகள் செல்வது அவள் மூலமாகத்தான்.

கண்ணைமறைத்து விழுந்த முன்னுச்சி மயிர்ச் சுருளை அலட்சியமாக ஒதுக்கி விட்டுக் கொண்டு கதவைத் தட்டினாள்.

முன்பெல்லாம் ஆனந்தன் இந்நேரம் வரக்கூடுமோ என்று தோன்றினால் கூடக் கூந்தல், உடையைப் பரபரப்புடன் சீர் செய்து கொண்டது நினைவு வந்தது. எல்லாம் வெறும் பைத்தியக்காரத்தனம்.

உள்ளிருந்து "வரலாம்" என்று அவன் குரல் கேட்கவும் ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்றாள்.

ஏதோ கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தான் போலும். பேனாவை மூடி வைத்து விட்டு எழுந்தவன் முகத்தில் முதலில் தோன்றிய வியப்பு விரைவிலேயே மறைந்தது.

முகத்தில் வெற்றியின் கர்வம் பரவ, "ஹல்லோ, வெல்கம்!" என்று புன்னகையோடு அவன் முன்னேறவும் அவளது வரவை ஆனந்தன் தவறாகப் புரிந்

கொண்டான் என்பதை நிர்மலா உணர்ந்து கொண்டாள்.

இல்லை என்பதுபோல தலையசைத்து, "நான் உங்களிடம் சற்று பேச வேண்டும்" என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

"தாராளமாய்" என்று ஒத்துக் கொண்டான் ஆனந்தன். பேசுவதை அங்கே உட்கார்ந்து கொண்டுபேசலாமே என்று அங்கேகிடந்த நீண்ட சோஃபா அருகே சென்று அதன் ஒரு புறத்தைச் சைகையால் காட்டினான்.

அவனது முகபாவனை மாறவில்லை என்பதை அறிந்து உள்ளூர மூண்ட சினத்தை அடக்கியபடி, அவனுக்கு எதிர்ப்புறமாய் கிடந்த ஒற்றை சோஃபாவின் முனையில் அமர்ந்தாள் நிர்மலா.

விலை ஏற்றுவதற்காகப் பிகு பண்ணிவிட்டு வந்து நிற்பதாக எண்ணுகிறான். முதலில் அந்த எண்ணத்தைப் போக்க வேண்டும், "மிஸ்டர் ஆனந்தன், நான் உங்களது கேவலமான ஏற்பாட்டை ஒத்துக் கொண்டு இங்கே வரவில்லை. அதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

"இதைச் சொல்லவா இவ்வளவு தூரம் வந்தாய்!" என்று வியந்தான் ஆனந்தன்.

இவன் நம்பவில்லை என்பதை உணர்ந்து, "இன்னும் ஒன்று, மிஸ்டர் ஆனந்தன். நான் அந்த மாதிரி பெண் இல்லை" என்றாள் நிர்மலா.

"ம்ம். இந்த வாசகத்தை முன்னம் எப்போதோ கேட்ட ஞாபகம் இருக்கிறதே!" என்று யோசிப்பது போலப்பாவனை செய்தான் அவன்.

"ஆமாம். முன்பும் இதையேதான் சொன்னேன். இப்போதும் இதைத்தான் சொல்கிறேன். இனி எப்போதும் இதையேதான் சொல்லுவேன்" என்றாள் நிர்மலா வேகத்துடன்.

"தாராளமாகச் சொல்லு" என்றான் ஆனந்தன் சற்றும் அலட்டிக் கொள்ளாமல். "ஒரு சின்ன விஷயம் சொல்லட்டுமா? லஞ்சமே வாங்க மாட்டேன் என்று அதிகமாகக் கத்துகிறவன்தான் நிறைய லஞ்சம் வாங்குகிறவனாக இருப்பான். இது அனுபவத்தில் கண்ட விஷயம்" என்றான் ஆனந்தன் கண்ணில் சிரிப்பும் குரலில் வினயமுமாக.

பிரமாத வேடிக்கை பேசிவிட்டான் என்று இவனோடு சேர்ந்து சிரிக்க வேண்டுமா?

பற்றிக் கொண்டு வந்தது நிர்மலாவுக்கு.

இல்லை. விஷயத்தை அவள் கையாளுகிற விதமே சரியில்லை. ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு கோபப்படாமல் நிதானமாகப் பேசவேண்டும்.

ஒருவாறு தன்னை அமைதிப் படுத்திக் கொண்டு மீண்டும் தொடங்கினாள் நிர்மலா, " மிஸ்டர் ஆனந்தன், நான் கல்லூரியில் கடைசி ஆண்டு படித்துக் கொண்டு இருந்தபோது என் அப்பா திடீரென்று. . திடீரென்று இறந்து போனார். என் அம்மா ஏற்கனவே நோயாளி. இந்த விபத்தில் உடம்பு மேலும் சீர் கெட்டுப் போயிற்று. சாப்பாட்டுக்காக மட்டும் இல்லாமல் அம்மாவின் வைத்தியத்துக்காகவும் அதிகமாய்ப் பணம் தேவைப் பட்டதால்தான் நான் இப்படி. இந்த மாதிரி ஆடிச் சம்பாதிக்கும்படி ஆயிற்று. மற்றபடி..." என்றபோது நிதானமாக் அவளது பேச்சில் இடையிட்டுப் பேசினான் ஆனந்தன்.

"கவலையே வேண்டாம், நிர்மலா. நான் கஞ்சன் அல்ல. நான் தரும் பணத்தில் உன் தாயாருக்கு இன்னும் உயர்ந்த வைத்தியம் செய்யலாம்" என்று கூறி முறுவலித்தான்.

என்ன இலகுவாகச் சிரிக்கிறான். ஓர் உயிரின் வேதனை இவனுக்குச் சிரிப்பாகவா இருக்கிறது! இவனது பேச்சையும் சிரிப்பையும் ஒவ்வோர் அசைவு

களையும் மனதில் பொத்தி பொத்திப் பாதுக்காத்ததை நினைத்து தன்னையே நொந்து கொண்டாள் நிர்மலா.

அவ்வளவு நேரம் இழுத்துப் பிடித்து வைத்திருந்த பொறுமை பறக்க, "நான் அப்படிப் பிழைக்கிறவள் இல்லை என்றுதான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்" என்றாள் அவள் சுள்ளென்று.

அவன் தோளைக் குலுக்கிக் கொண்டு பேசாதிருக்கவும் தானாகவே தணிந்து, "இந்த வேலை இல்லை என்றால் என் தாயார் மிகவும் வேதனைப்பட்டு... அவர்கள் உயிருக்குக்கூட ஆபத்தாகிவிடும், ஆனந்தன்" என்றாள் கெஞ்சலாக.

"அதற்குத்தான் அவசியமே கிடையாது என்கிறேனே, நிர்மலா நான் தரும் பணத்தில்.."

"நீங்கள் என்ன எனக்குப் பணம் தருவது?" என்று மீண்டும் சீறினாள் நிர்மலா, "என் பிழைப்பு அதுவல்ல" என்று தொடர்ந்தவளுக்கு ஒன்று தோன்றவும், "நீங்கள் என் பேச்சை நம்பவேணடாம். நிர்வாகி நாதன் சாரை அழைத்துக் கேட்டுப் பாருங்கள். அவர் சொல்லுவார் எது மெய் என்று" என்று உரைத்தாள்.

ஆனால், "அவர் ஏன் சொல்லமாட்டார்!" என்று ஆனந்தன் ஒரு மாதிரிக் குரலில் கூறவும் அவளுக்கு அருவெறுத்துப் போயிற்று.

நிர்வாகியையும் அவள் மயக்கி வைத்திருக்கிறாள் என்று அவன் எண்ணுவதை ஊகிக்கப் பிரமாதமான புத்திசாலித்தனம் தேவையில்லையே.

"சீ ச்சீ, இருந்திருந்து உங்களிடம் போய்ப் பேசவந்தேனே" என்று எழுந்தாள், "ஒரு சின்னக் கேள்வி உங்களிடம் கேட்கலாமா? நீங்கள் நினைப்பது போல இது என் தொழில் என்றால் இளைஞரும் பணக்காரருமான உங்களை நான் ஏன் மறுக்க வேண்டும்? எண்ணிப் பாருங்கள், நீங்கள் வேறு பெருந்தன்மை, தாராளமனம், நிறையத் தருவேன் என்றெல்லாம் ஆசை காட்டிக்

கொண்டே இருக்கிறீர்கள். அப்படியிருக்க மறுப்பா னேன் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்" என்றாள் ஆற்றாமையுடன்.

"அதை நன்றாகவே யோசித்து சரியான விடையை யும் தெரிந்து வைத்திருக்கிறேன்" என்றான் ஆனந்தன் கடுமையான குரலில்.

இந்த மாதிரி யோசித்துமா இந்தப் பிடிவாதம்! சற்று வியப்புடன் அவன் பேச்சைக் கவனித்தாள் நிர்மலா.

"நிர்மலா, நீ முதலில் கண்டது என் பணத்தை. இந்தப் பணத்துக்கு உரிமைக்காரி ஆகிவிடவேண்டும் என்பதற்காகவே என்னை மணக்க முடிவு செய்தாய் அழகாகப் பேசினாய், ஆசை ஊட்டினாய், உத்தமி போல நடித்தாய். அப்படியே மணந்தும் இருப்பாய் ஆனால் தெய்வாதீனமாக உன் சுயரூபம் எனக்குத் தெரிந்து விட்டது. கிட்டிமுட்டி வந்தது தட்டிப் போயிற்றே என்கிற ஆத்திரம் உனக்கு. கூடவே மறுத்துக் கொண்டே இருந்தால் உன் மேல் கொண்ட மோக வெறியில் மற்றதை மறந்து உன்னை மணந்து கொண்டு விடமாட் டானா என்கிற பேராசை. அவ்வளவுதான் விஷயம். என்னகம் சரிதான் இல்லையா? கண்டுபிடித்துவிட் டேனே என்று அதிர்ச்சியாய் இருக்கிறதா? மற்றவர்க ளுக்கும் மூளை இருக்கும் நிர்மலா. அவர்களாலும் யோசிக்க முடியும்" என்றான் ஆனந்தன் ஏளனமாக.

"இல்லாமலா? அதுதான் பிரமாதமாய் அலசி ஆராய்ந்து யோசித்து முடிவு செய்திருக்கிறீர்களே" என்றாள் அவள் ஒரு மாதிரிக் குரலில். திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

"எனக்கு முடிவு சொல்லவில்லை?"

"அதுதான் நீங்கள் நன். .றாக யோ. . சித்துக் கண்டு பிடித்திருக்கிறீர்களே. இப்போது போய் அந்த ஆசை வெறியை அணைய விட்டு விடுவேனா என்ன?" என்று குத்தலாக மொழிந்து விட்டு மீண்டும் கிளம்பினாள் நிர்மலா.

இரண்டு எட்டில் அவளை தாண்டிச் சென்று அவளது வழியை மறைத்து நின்றான் ஆனந்தன்.

"இந்த அறையில் இப்போது நான் உன்னை என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் தெரியுமா?" என்றான் ஆத்திரத்துடன்.

# 13

திடுமென்று ஆனந்தன் வழிமறித்ததோடு இவ்வாறு அடாவடித்தனமாகப் பேசவும் நிர்மலா திகைத்துத் தான் போனாள்.

சிலகணங்களுக்குள்ளாகவே அந்தத் திகைப்பு தெளிந்து விட்டது.

ஆனந்தன் அவ்வளவு மோசமானவன் அல்ல. விரும்பியிருந்தால் அவளை என்றைக்கோ ஆள் வைத்துத் தூக்கிச் சென்று என்னென்னவோ செய்திருக்க அவனால் முடியும். அத்தோடு அவனுக்கே ஆபத்து என்கிற நிலையில் அதேமாதிரி ஒரு நிலையில் அவளைக் காப்பாற்றியவன் அந்த வில்லத்தனம் செய்ய மாட்டான். இது வெறும் மிரட்டல்.

பேசாமல் நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள்.

"மெய்யாகத்தான் சொல்லுகிறேன். அதற்குரிய பலமும் எனக்கு இருக்கிறது. ஆனால் அது எனக்கு விருப்பம் இல்லை. நாம் இருவரும் மனம் ஒப்பி இணைய வேண்டும் என்று தான் உனக்கு விட்டுக் கொடுத்துக் கொண்டே இருக்கிறேன்." என்றான் ஆனந்தன்.

அன்று பாவம் பார்த்த மாதிரி இன்று விட்டுக் கொடுக்கிறானாக்கும்.

ஏளனமாகக் கேட்க வாயெடுத்தவளுக்கு எல்லாம் அலுத்துவிட்டது. என்ன பேசினாலும் அவன் மனதை மாற்றிக் கொள்ளப் போவது இல்லை. பிறகு எதற்கு வீண் பேச்சு?

"இதோ பாருங்கள், எனக்கென்று சில கோட்பாடுகள் உண்டு. அதன்படி திருமணமற்ற உறவு கொள்வது எனக்குச் சாத்தியப்படாது." என்று அவள் முடிக்குமுன் "அந்தக் கதை என்னிடம் விடாதே" என்று சீறினான் ஆனந்தன்.

பார்வை தளராமல் நின்றபடி, "என்ன செய்வதாக உத்தேசம்? சமுத்திரம் கூட முழங்கால் அளவு இருக்கிற நிலைமையும் உண்டு. என்னவோ தெரியவில்லை. உங்கள் மிரட்டல் வேலை, எதிர்காலம் பற்றி இப்போது எனக்கு ஒரு பயமும் இல்லை." என்று கூறி அவனைச் சுற்றிக் கொண்டு நடந்து சென்று வெளியேறினாள்.

மறுநாள் கணக்குத் தீர்த்து அந்த மாதச் சம்பளத்தைக் கையில் வாங்கியபோதும் அவளிடம் அவ்வளவாகக் கலக்கம் இல்லை.

கூடவே இன்னொரு கவரில் தனியாக ஆயிரம் ரூபாய் இருக்கவும் அது பற்றி நாதனிடம் தெரிவித்தாள்.

"அது. அது என் பணம் நிம்மிம்மா. ஏதோ என்னால் ஆன உதவி ..." என்று தடுமாறினார் நாதன்.

"வேண்டாம் அங்கிள்" என்று மறுத்தாள் நிர்மலா.

"உங்கள் குடும்பத்தின் அளவும் செலவும் எனக்கும் தெரியும், இந்த ஆயிரத்தின் இழப்பு அங்கே எந்த அளவு பாதிக்கும் என்பதும் தெரியும். அதனால் வேண்டாம் அங்கிள். அத்தோடு இந்த ஓர் ஆயிரம் வந்து பெரிதாக என்ன ஆகிவிடப்போகிறது?" என்று சிறு முறுவலுடனேயே மறுத்து விட்டுக் கிளம்பினாள்.

நிர்மலா கிளம்பிச் செல்லவும் நாதனும் தன் அறையை விட்டுக் கிளம்பிச் சென்றார்.

கதவைத் தட்டிவிட்டு ஆனந்தனின் அனுமதியோடு அறையினுள் செல்லும் போதும் கூட அவருக்கு உள்ளூ ரக் கொஞ்சம் உதறல்தான்.

ஆனாலும் அவன் சொல்லுக்கு வார்த்தை பிறழா மல் பணிந்து நிர்மலாவை வீட்டிற்கே அனுப்பி ஆயிற்றே, இனி சர்வீஸ் சரியில்லை என்று அவரைக் குற்றம் கூற வழி கிடையாதே என்று தனக்கே தைரிய மூட்டியபடிதான் சென்றார்.

ஒரு சிகரட்டைப் பற்றவைத்துக் கொண்டு இருந் தான் ஆனந்தன்.

அருகிலேயே சாம்பல் கிண்ணத்தில் நிரம்பி வழிந்த சிகரட் அடிக்கட்டைகளைக் காணவும் அவருக்கு உள்ளூர திருப்தி உண்டாயிற்று. ஓர் அபலைப் பெண்ணின் வாழ்வைப் பந்தாடியதில் அவனும் ஒன்றும் களிப்புக் கடலில் மூழ்கித் திளைத்துக் கொண்டு இருக்கவில்லை. அந்த மட்டும் சந்தோஷம்தான்.

லைட்டரை அருகே மேசைமேல் வைத்தபடி அவரை உட்காரச் சொன்னான் ஆனந்தன், "என்ன விஷயம்? எஸ்.டி.டி. பில் அதிகம் வந்து விட்டதா? பில் அனுப்புங்கள். உடனே பணம் தர ஏற்பாடு செய்கி றேன்" என்றான்.

"அய்யோ, உங்களிடம் பணம் கேட்பேனா சார்? அதுதான் பில் அனுப்பின மூன்றாம் நாள் டாணென்று செக் வந்து நிற்கும்" என்று பல்லைக் காட்டியவர் உடனே சுதாரித்து, "நான் நான் வந்தது வேறு விஷயம்" என்று ஒருவாறு தொடங்கினார்.

சிகரட் புகையை வெளிவிட்டபடி வெறுமனே அவரை ஏறிட்டான் ஆனந்தன்.

சிறு தயக்கத்தின் பின் மீண்டும் பேசத் தொடங்கிய வரைக் கை உயர்த்தித் தடுத்து நிறுத்தினான். "வேறு விஷயமாய் சந்தேகம் வரும்போது நானே கேட்டுத் தெரிந்து கொள்வதாகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு

முன் நீங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை. மற்றபடி முக்கியமாய் எதுவும் இல்லையே? அப்படியானால். ." என்று எழுந்து "எனக்குக் கொஞ்சம் டெலிஃபோன் பண்ண வேண்டியிருக்கிறது." என்று மரியாதையாகவே பேச்சைக் கத்தரித்து அவரை அனுப்பி விட்டான்.

கதவை மெல்லச் சாத்திவிட்டு வெளியேறிய நாதனுக்கு நிர்மலாவுக்காக ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று உள்ளூர வேதனைதான். ஆனால் அவரும் சும்மா கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கவில்லையே! ஏதோ, அவரால் ஆன முயற்சி செய்து பார்க்கத்தான் முயன்றார். இனிக் கடவுள் விட்ட வழி என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றார் அவர்.

கடைசித் தரமாக என்று எண்ணியபடி ஓட்டலை விட்டு நிர்மலா கிளம்பிய போது அவளது கைப்பையில், ஒரு மாத ஆட்டத்திற்கு உரிய பணமும் இரண்டு மாதச் சம்பளப் பணமும் இருந்தது. வீட்டில் இருந்த பொருட்களுக்கும் ஏற்கனவே மதிப்புப் போட்டு வைத்திருந்தாள். எல்லாமாகச் சேர்ந்து இன்னமும் இரண்டு மாதங்கள் இதே போல வாழ முடியும். தந்தை இறந்த புதிதில் இதுபோல நிதானமாகக் கணக்கிட்டு செலவு செய்யத் தெரியாமல் வீணாக்கிவிட்ட பணத்தை நினைத்து முதலில் அவளுக்கு கொஞ்சம் வருத்தம் ஏற்பட்டது. ஆனால் இந்த இரண்டு மாதங்களை நாலுமாதங்களாக நீட்டிப்பதில் அப்படி என்ன பெரிய நன்மை விளைந்து விடப் போகிறது என்று எண்ணிப் பார்த்தபோது அந்த வருத்தம் மறைந்து போயிற்று.

முன்தினம் இரவு முழுவதும் உறங்காமல் யோசித்து முடிவு செய்ததுதான். இந்த இரண்டு மாதங்களும். அதன் பிறகு. என்று சிந்தனை செய்து அதற்கும் திட்டமிட்டாள்.

அதன்படி அவள் முதலில் சென்ற இடம் மருந்துக் கடை.

அவள் கேட்ட மருந்துகளை, குறித்து அளவுப்படி எடுத்து வைத்துவிட்டு பில் போட்டார் கடைக்காரர்.

வழக்கமாக நிர்மலா மருந்து வாங்குகிற கடை அது. எனவே பில் தொகையை திரும்ப ஒரு தரம் சரிபார்த்து விட்டு வியப்புற்றவராய், "என்னம்மா, இந்த முறை பில் மிகவும் அதிகமாகி விட்டது போல் தெரிகிறதே. இரண்டு மடங்குக்கு மேல் போயிருக்கிறதே."என்றார்.

ஏதோ யோசனையில் இருந்த நிர்மலா சற்றுத் திடுக் குற்று, "ஆ. .ஆமாம் சார். கடைசித் தடவையாக வாங்குகி றேனில்லையா? முடிந்த அளவு மொத்தமாய் வாங்கிவிடலாம் என்று வாங்குகிறேன்" என்றாள் அலுப்புடன்.

அவளது குரலைக் கேட்டதும், கடையின் மறுபுறம் நின்று ஏதோவாங்கிக் கொண்டிருந்த ஓர் இளைஞன் வியப்பும் ஆர்வமுமாய்த் திரும்பிப் பார்த்தான்.

பில் பணத்தைக் கையில் வாங்கியபடி, "கடைசித் தடவையா? அப்படியானால் அம்மாவுக்கு உடம்பு குணமாகி விட்டதா? இந்த செட் மருந்தோடு வைத்தியம் போதும் என்று டாக்டர் சொல்லிவிட்டாரா?" என்று விசாரித்தபடியே பணத்தை எண்ணத் தொடங்கினார் கடைக்காரர்.

"ம்.ம் என்னது?. . ஓ. ஆ ஆமாம் சார். இதற்குப் பிறகு அம்மாவுக்கு மருந்து தேவையிராது. வாங்குவதற்கு நானும் இரு. . . இ. .இங்கே வரமாட்டேன்" என்று தவறி விழுந்த வார்த்தையை ஓர் உதட்டளவுப் புன்னகையால் மறைத்து முடித்தாள் நிர்மலா.

"ரொம்பவும் சந்தோஷம்மா. உன் பில் பெரிதுதான் என்றாலும் சம்பாத்தியத்தை எல்லாம் தாயார் வைத்தி யத்திலேயே செலவிட்டுத் தேய்கிறதே இந்தக் குழந்தை என்று எனக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருக்கும். நல்லவேளை, இனி அந்த வருத்தம் இராது" என்று மருந்து பாட்டில்களையும் டப்பாக்களையும் மொத்தமா கக் கட்டிக் கொடுத்தார் கடைக்காரர்.

"ஆமாம் சார், எனக்கும் இனி.. இனி வருத்தம் இராதுதான்" என்று கூறியபடியே பாக்கெட்டைப் பெற்றுக் கொண்டு கிளம்பினாள் நிர்மலா.

மறுபுறம் நின்று கேட்டுக் கொண்டிருந்த வாலிபனின் முகத்தில் இப்போது திகைப்பும் சேர்ந்து கொண்டது.

சற்று யோசித்த வண்ணம் நின்றவன், தன் வேலையை முடித்துக் கொண்டு நேராகத் தன் வருங்கால அண்ணியான அஞ்சலியிடம் சென்று நின்றான்.

திருமண அழைப்பிதழ் கொடுக்கச் சென்றபோதே அழகியான நிர்மலாவின் தோற்றமும் இனிய குரலும் இளைஞனான அவன் மனதில் நன்றாகப் பதிந்து விட்டிருந்தது.

மருந்துக் கடையில், பணக்கணக்கில் ஈடுபட்டிருந்த கடைக்காரர் கவனியாதபோதும் நிர்மலாவின் பேச்சில் அபசுரமாய் இழையோடிய மறை பொருளை அவன் மனம் கிரகித்துக் கொண்டது.

அன்று புன்னகை தவழநின்ற அழகிய பெண்ணுடன் இந்த அவலத்தை இணைத்துப் பார்க்க முடியாமல் திணறியவன் அவளுடைய தோழியான அஞ்சலியிடமே வந்து தன் ஐயம் உட்பட எல்லாவற்றையும் கொட்டி விட்டான்.

அஞ்சலி அதிர்ந்து போனதில் ஆச்சரியம் ஏதுமில்லை. விழுந்தடித்துக் கொண்டு நிர்மலாவின் வீடு நோக்கிச் சென்றாள்.

வேலைநாளில் வேலை நேரத்தில் வீட்டில் இருந்தது தவிர வேறு எதையும் அஞ்சலியால் கண்டு பிடிக்க முடியவில்லை.

பொதுவாக வயதில் மூத்தவளானபோதும், வீட்டில் மூச்சுமூட்டிப் போகிற அஞ்சலிதான் தன் விவகாரங்களை நிர்மலாவிடம் கொட்டி விடுவாளே தவிர நிர்மலாவிடமிருந்து துயரமான எதையும் அஞ்சலி கேட்டதில்லை.

ஒரு தரம் தகப்பனாரைப் பற்றிப் பேசும் போது, "மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்; துக்கத்தைத் தனகுள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று தந்தை கூறுவார். அது போலவே வாழ்ந்து முடித்தார்." என்று சற்று பெருமையாகவே நிர்மலா கூறியதுண்டு. மகளும் பெற்றவரைப்போலவே வாழ்கிறாள் என்று அஞ்சலி மனதிற்குள் நினைத்து அதற்கு மதிப்புக் கொடுத்தே பழகி வந்தாள்.

ஆனால் இன்றைய சந்தேகம் அப்படி விட்டுவிடக் கூடியது இல்லையே.

பொதுவாகக் கோதையிடம் குசலம் விசாரித்து விட்டு விடை பெறும் சாக்கில் நிர்மலாவைத் தனியே அழைத்துச் சென்று வெளிப்படையாகக் கேட்டு விட்டாள் அஞ்சலி.

கோதைக்கு உடம்பு அப்படியே இருக்கும் போது குணமாகி விட்டதாக நிர்மலா ஏன் மருந்துக் கடையில் பொய் சொன்னாள்? அதிலும் கடைசித் தடவை என்று சொல்வானேன்? அந்தக் கடைசித் தடவைக்கு என்ன அர்த்தம்?

ஒரு கணம் திகைத்த நிர்மலா உடனேயே கல·கல வென்று சிரித்தாள். "அந்த மருந்துக் கடையில் சில மருந்துகள் கிடைப்பது இல்லை அஞ்சலி. அதனால் கடையை மாற்றப் போகிறேன். அதைச் சொன்னால் கடைக்காரர் வருத்தப் படுவாரில்லையா, அதற்காகச் சொன்னது. இதைப்போய்ப் பெரிதாகத் துப்பதுலக்க வந்துவிட்டாயே" என்று சிரிக்கவும் அஞ்சலிக்குப் பெருமளவு மனம் நிம்மதி அடைந்தது. அடுத்த குழப்பத்தையும் தெளிவு படுத்திக் கொள்ள எண்ணி, "இன்று உனக்கு வேலை நாள், வீட்டில் இருக்கிறாயே?" என்று விசாரித்தாள்.

மீண்டும் தடுமாறிப் போனாள் நிர்மலா.

இதற்கு முழுப்பொய் உரைத்தால் உடனே தெரிந்து விடும் என்பதை உணர்ந்தவளாய், "அங்கு. அந்த

வேலையை விட்டு விடலாம் என்று விட்டுவிட்டேன், அஞ்சலி.." என்று தொடங்கினாள்.

உடனேயே தோழியின் முகத்தில் பழைய கலக்கம் சூழ்வதைக் காணவும், "வேறு வேலை கிடைத்து விட்டது அஞ்சலி. அடுத்தமாதம் போய்ச் சேரவேண்டும். அதுவரை அம்மாவோடு ஒரு மாதம் ஜாலியாக கழிக்க லாம் என்று இருக்கிறேன். அவ்வளவுதான் விஷயம்." என்று புன்னகை செய்தாள்.

"நிஜமாக அவ்வளவுதானா நிம்மி?" என்று கவலை யோடு வினவினாள் அஞ்சலி.

"நிஜம். .ம். .மாக அவ். வளவேதான் ஐந்தெலி" என்று விளையாட்டாகத் தோழியைக் கிண்டல் செய்யும் பெயரைக் கூறி வேடிக்கை போல முடித்தாள் நிர்மலா.

அதற்குமேல் யோசிக்கவிடாமல், "அஞ்சி, இப்போ தெல்லாம் பாபு யாரைப்பார்த்தாலும் கைகூப்பிக் கும்பி டுகிறாராமே, கேட்டால் என் பெண்டாட்டி. நினைவில் கைகள்தானாக அஞ்சலி முத்திரை பிடித்துவிடுகின்றன என்கிறாராம். ஆமாம், வீட்டில் உனக்கும் இதே மரியா தைதானா, வேறுமாதிரியா? என்று கண் சிமிட்டவும் முகம் சிவந்து கிளம்பிவிட்டாள் அஞ்சலி.

சினேகிதி நிம்மதியோடு திரும்பிச் செல்வதைக் காண நிர்மலாவுக்கும் ஆறுதலாக இருந்தது.

இன்னமும் பத்தே நாட்களில் அஞ்சலியின் திரும ணம் நடைபெற இருந்தது. எவ்வளவோ துன்பங்களுக் குப் பிறகு இப்போதுதான் அவள் முழு மகிழ்ச்சியோடு இருக்கிறாள். அதைக் குலைக்கலாமா!

அஞ்சலியின் திருமணம்தான் நிர்மலா கலந்து கொள்கிற கடைசி விசேஷமாக இருக்கக்கூடும்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவளது சந்தேகம் சரிதான் என்று தெரிய வரும்போது அஞ்சலிக்கு எப்படி இருக்கும்? பாவம்!

ஆனால் அவளுக்கு மட்டும் சாவதில் ஆசையா? இல்லையே. கைப்பையைத் திறந்து மருந்துக் கடைக்கு அடுத்ததாகச் சென்று வாங்கிய லாட்டரி சீட்டை எடுத்துப் பார்த்தாள் நிர்மலா. குலுக்கல் தேதிக்கு இன்னமும் ஒரு மாதம் இருந்தது.

இந்தப் பெண் அனுபவித்த துன்பம் போதும் என்று கடவுளுக்கே தோன்றி இந்தச் சீட்டுக்கு பரிசு விழுந்து அம்மாவின் வைத்தியம் தடைபடாமல் நடக்க முடிந்தால் சரி. மற்றபடி அவளது முடிவில் மாற்றம் இல்லை.

## 14

நிர்மலாவின் வீட்டிலிருந்து கிளம்பியபோது அஞ்சலியின் மனதில் இருந்த நிம்மதி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, பஸ் நிறுத்தத்தை அடைந்தபோது அடியோடு மறைந்து போனது.

அவளது முக்கியமான இரண்டு கேள்விகளுக்கும் நிர்மலா உடனடியாகப் பதில் சொல்லவில்லை. ஏதோ யோசிப்பதற்கு அவகாசம் எடுத்துக் கொண்டாற் போலச் சற்றுத் தயங்கித்தான் பேசினாள்.

அவள் பேச்சு உண்மை என்றால் அந்தத் தயக்கம் எதற்கு? அவள் சொன்னது ஒன்றும் தோழியிடம் மறைத்தாக வேண்டிய விஷயம் இல்லையே.

மேலும் துளைத்தெடுக்காமல் தவிர்ப்பதற்காகத் தான் கடைசியில் கூட அந்தக் கேலி செய்தாளோ? மற்றபடி நிர்மலா இந்த விஷயம் பேசுகிறவள் இல்லையே.

திரும்பவும் நெஞ்சுக்குள் நம நமவென்றது அவளுக்கு. இப்போது திரும்பிச் சென்று விட்டாலும் நிர்மலா வேறு எதையும் ஒத்துக் கொள்ளப் போவது இல்லை.

செய்வது அறியாமல் அஞ்சலி திணறிக் கொண்டு நின்ற போது, "யாரு? நிர்மலாவுடைய சினேகிதிப் பெண்ணா? முன்னே இரண்டுதரம் நிர்மலாவீட்டிற்கு வந்திருக்கிறாயே.." என்று ஒரு வயதான பெண் அவள் அருகில் வந்தாள். "என்னைத் தெரியுதா? நான்தான் கோதையம்மாவைப் பார்த்துக் கொள்ளுகிற. . கொள்ளு கிற என்ன, நேற்றுவரை பார்த்துக் கொண்ட ஆயா." என்று தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டாள்.

நிர்மலாவின் வீட்டில் இந்த அம்மாளைப் பார்த்த ஞாபகம் அஞ்சலிக்கும் இருந்தது. அவளது பேச்சு மேலும் பதட்டத்தைக் கிளப்பிவிட, "நேற்றுவரை பார்த் துக் கொண்ட என்றால்? இ. இப்போது இல்லையா?" என்று கவலையும் பயமுமாக விசாரித்தாள்.

"ஆமாம்மா. நேற்றைக்கு நிறுத்திவிட்டாள் அந்தப் பெண். தாயாய் பிள்ளையாய்ப் பார்த்துக் கொண்டு இருந்தேன். ஆனால் வேலை போய்விட்டது, பண வசதி இல்லை என்கிறபோது, பாவம் அவளைத்தான் எப்படிக் குற்றம் சொல்வது?"

அஞ்சலியின் நெஞ்சுக்குள் குட்ஸ் வண்டியே தட தடக்கத் தொடங்கிவிட்டது.

ஆக நிர்மலா சொன்னது எல்லாமே பொய். ஒரு மாதத்தில் வேறு வேலை என்றால் இந்த ஆயாவை எப்படி நிறுத்தமுடியும்? இந்த ஆயா கிடைத்தது ஒரு வரம் என்பாளே, ஒரு மாதம் கழித்து வேலைக்கு செல்லுகிற போது ஆளுக்கு எங்கே போவாள்? அது பொய் அந்தக் கடைசித் தடவையின் விளக்கமும் பொய்தான்.

"அதோ, என் பஸ் வருகிறதம்மா" என்று அந்த ஆயா கிளம்பிச் சென்று விட, மீண்டும் என்ன செய்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டு நின்றாள் அஞ்சலி.

"சுபம்" ஓட்டல் பணியாளர்களுக்கு ஒரு மாத கால நோட்டீசு உரிமை உண்டு என்பதை அஞ்சலி அறிவாள். கணக்கிட்டுப் பார்த்தால் வேலை போய்விடும் என்கிற வேதனையை மறைத்துக் கொண்டுதான் அன்று அஞ்சலி அழைப்பிதழ் கொடுக்கப் போனபோது நிர்மலா சிரித்துப் பேசியிருக்க வேண்டும். இந்த மாதிரி அன்புக்குப் பிரதி செய்யாமல் சும்மா இருப்பதா?

அஞ்சலி மீண்டும் யோசித்தாள்.

வேலையைப் பற்றி எண்ணியதும் அவளுக்கு நிர்வாகி நாதனின் நினைவு வந்தது. அவர் நிர்மலா வின் குடும்பத்துக்கு வேண்டியவர். ஆனால் அவர் மூல மாகத்தான் நிர்மலா வேலையிழந்ததும் நடந்திருக்க வேண்டும். எனவே அவரிடம் சென்று முதலில் விவ ரத்தை அறிந்து அதன்பின் வேண்டியதைச் செய்ய வேண்டும். எப்படியும் நிர்மலாவிடம் திரும்பிச் சென்று பயன் கிடையாது என்பது தெளிவு. அவள் முட்டாளல்ல. கோழையும் அல்ல. ரொம்பவும் யோசித்துதான் இந்த முடிவு எடுத்திருப்பாள்.

எனவே நாதனையே சந்தித்துப் பேசுவது என்று முடிவெடுத்து, வீடுவரத்தாமதமாகும் என்று பாபு வீட் டிற்கு டெலிஃபோன் மூலம் தகவல் கொடுத்து விட்டு முன்பு வேலை செய்த இடத்தை நாடிச் சென்றாள் அஞ்சலி.

அஞ்சலிக்கு விளக்கம் எதுவும் கொடுக்காத போதும் அவள் கொணர்ந்த சேதியில் நாதனும் பதறிப் போனார்.

தாயாருக்கு மருந்து அதிகம் வாங்கினாள் என்பதை அறிந்து உடனடியாக ஆபத்து இல்லை என்று ஓரளவு நிம்மதியுற்றார்.

அவரால் முடிந்த உதவியெல்லாம் செய்வதாகவும் குறைந்த பட்சம் பழைய வேலையேனும் நிர்மலாவிற் குத் திருப்பிக் கிடைக்க வகை செய்வதாகவும் அஞ்சலி யிடம் வாக்களித்தார்.

—

ஆயினும் ஒருவேளை அவருக்கு எதுவும் செய்யக் கையாலாகவில்லை என்றால் சாகத்துணிந்த ஒரு பெண்ணுக்கு வீண் ஆசை காட்டுவது பாவம் என்கிற எண்ணம் அவருக்கு உள்ளூர இருந்தது.

ஒரு கல்யாணப் பெண்ணிடம் அதைச் சொல்லி வருத்த மனம் இல்லாமல், எதற்கும் இப்போதைக்கு நிர்மலாவிடம் எதையும் சொல்லாமல் சற்றுப் பொறுத்திருக்குமாறு அஞ்சலியிடம் கேட்டுக் கொண்டார்.

ஒருவாறு நிம்மதி அடைந்தவளாக அஞ்சலி செல்லவும் அவளது கவலையும் நிர்மலாவின் வேதனையும் அவர் தன் தலையில் ஏற்றுக் கொண்டு தவித்தார்.

எப்படியோ, ஆனந்தனின் கையைக் காலைப் பிடித்தேனும் நிர்மலா மீண்டும் வேலை செய்ய அனுமதிக்கும்படி வேண்டிக் கொள்ள முனைந்தவருக்கு அவனை நெருங்கவே முடியவில்லை.

எப்போதும் இன்முகமாய்க் காட்சி அளித்த இளைஞன் இவன்தானா என்பது போல் அவனது இறுகிய தோற்றம் அவரை அவனிடம் அணுக விடவில்லை.

கண்ட வேளையில் அந்தக் கனலை நெருங்கித் தானும் எரிந்துவிடக் கூடாதே என்ற அச்சம் வேறு.

இப்படி ஒரு வாரம் நாதன் தவியாய் தவித்தபிறகு ஒரு நாள் ஆனந்தன் வெளியே சென்றிருந்த வேளையில் அவனுக்கு சிங்கப்பூரிலிருந்த அவனுடைய தாயாரிடமிருந்து டெலிஃபோன் வந்தது.

"பழகிய இரு பெண்களும் இல்லாது போய்விட்டதால் புதிதாக வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண், "எப்போது வருவார் என்று கேட்கிறார்கள், சார். என்ன சொல்வது?" என்று அவரிடமே கேட்டாள்.

வினாடிக்குள் முடிவெடுத்து, "தொடர்பை இங்கே கொடு" என்று கேட்டு அவரே ஆனந்தனுடைய தாயாருடன் பேசத் தொடங்கினார். "அம்மா, இப்படி இடையிட்

டுப் பேசுவதற்காக என்னைப் பெரிய மனது பண்ணி மன்னிக்க வேண்டும்." என்று பெரிதாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, "நான் இந்த சுபம் ஒட்டல் நிர்வாகி. இங்கே வரவேற்பில் ஒரு பெண்... நல்ல பெண் அம்மா." என்று தொடங்கி மகனது விஷயத்தை ஓரளவு கோடி காட்டி, அவளை வேலையை விட்டு விலக்க நேர்ந்ததை யும் அந்தப் பெண் இப்போது தற்கொலைக்குத் தயார் செய்து கொண்டு இருப்பதையும் விவரித்தார்.

பெரியவர்கள் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டும் என்று வேண்டி முடிக்கும் போது, "அவன் அவ்வளவு ஆத்திரப் படும்படி அவள் செய்த குற்றம் என்ன?" என்று கேட்டாள். அதுவரை குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்த அந்தத் தாயார்.

பாயிண்டைப் பிடித்து விட்டார்களே என்று சற்றுத் திணறிவிட்டு, "அம்மா, அந்தப் பெண் ரொம்பவும் நல்ல வள், படிப்பு முடியுமுன்னால் அவளுடைய தகப்பனார் என் நண்பர் திடுமென ஜ்வரத்தில் இறந்து போனார். ஒன்றும் வைத்து விட்டுப் போகவில்லை. தாயார் சீக்காளி. அந்தம்மாளின் வைத்தியத்துக்கே மாதம் மூவாயிரம் ஆகும். இரண்டு உயிர் சாப்பிட வேண்டும்...

"என்ன செய்தாள்?"

"கா. காபரே... அது கூட மேடையை விட்டு இறங்கி மேசைகள் அருகே வந்து ஆடுவது இல்லை. மேடையில் ஆடும் போதும் இந்த ஒட்டலில் ரொம்ப மோசத்துக்குப் போவது இல்லை. அ. தற்காக அவளைத் தப்பாக எண்ண வேண்டாம்.."

"உங்கள் பெயர் என்ன?"

சற்றுத் திகைத்து, "நா. நாதன், அம்மா" என்றார் அவர்.

"பாருங்கள் மிஸ்டர் நாதன். நான் வசிப்பது சிங்கப் பூரில். கடவுள் வசதியை கொடுத்திருப்பதால் உலகம் முழுவதும் சுற்றி இருக்கிறேன். நான் பாராததோ கேளாததோ இல்லை. ஆனந்தன் ஒட்டலுக்குத் திரும்பி

வந்ததும் என்னிடம் பேசச் சொல்லுங்கள். நான் பேசி முடித்ததும் நீங்கள் அந்தப் பெண் நிர்மலாவைப் பற்றி இப்போது என்னிடம் சொன்னதை அவனிடம் ஒரு தரம் சொல்லுங்கள்."

"அம்மா!" என்று அலறிவிட்டார் நாதன். "என் தலை உருண்டுவிடும் அம்மா. நான் பிள்ளைக் குட்டிக்கா ரன். இங்கே ஏற்கனவே. ." என்று தொடங்கி ஆனந்த னின் மிரட்டலைப் பற்றியும் ஒருவாறு சொல்லிவிட்டார்.

தாய் மகனோடு சேர்ந்து கொண்டால் அவர்கதி அதோகதிதான். ஆனால் அந்தக் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவரது பயத்தைக் குறைத்து தைரிய மூட்டியது எப்படியும் நிர்மலாவிற்கு அவரால் ஆன உதவி!

ஆனால், "மிஸ்டர் சுகவனம் தானே உங்கள் முதலாளி. கவலைப்படாமல் நீங்கள் தைரியமாக ஆனந் தனிடம் பேசுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்ளுகி றேன்" என்று கூறி ரிசீவரை வைத்தாள் அந்தப் பெண்மணி.

"ஊ. .ப்" என்று அடைத்திருந்த மூச்சை வெளி விட்டார் நாதன்.

ராஜா ராணி எல்லாம் இல்லை என்கிறார்களே, இது மகாராணியின் குரல் இல்லை என்றால் வேறு என் னவாம்? ஆனால் நல்ல அரசி.

நிர்மலாவிடம் இந்த கெம்பீரம் உண்டுதான். எந்தக் கஷ்டத்தையும் காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்ளும் விதம் அந்த ஆயிரம் ரூபாயை மறுத்த அழகே போதுமே!

ஆனந்தனின் வர்வுக்காகக் காத்திருந்தார்.

அவன் வந்து விட்ட சேதி அறிந்ததும் தாயார் பேச விரும்பியதைத் தெரியப் படுத்தினார்.

அவனும் உடனே தொடர்பு கொள்ளவும், அனாவ சியமான குசலங்களில் நேரத்தைச் செலவிடாமல் நேராக விஷயத்துக்கு வந்தார் ஆனந்தனுடைய

அன்னை. "புதிய சென்ட் தயாரிப்பில் ஏதோ மாற்றங்கள் சொன்னாயாமே. தேவையில்லை என்பது என் கருத்து. பழைய ஐடியாவிலேயே செய்யச் சொல்லி விட்டேன்." என்றார்.

"அம்மா.. "என்ற மகனது குறுக்கிடலைக் கவனியாதது போலத்" தொழில் விவகாரங்களில் எனக்கு இன்னமும் சில அதிகாரங்கள் .இருக்கின்றன என்று நினைக்கிறேன். சரிதானா?" என்று கேட்டார்.

"உம்" என்றான் மகன் சுருக்கமாக.

"அப்புறம் குடும்ப விஷயங்களிலும் கொஞ்சம் உரிமை எடுத்துக் கொள்ளலாம் என்று ஓர் எண்ணம். புது சென்டுக்கு நிர்மலா என்ற பெயர் வைக்கப் போவதாகச் சொன்னாய். எனக்கும் அப்போது அந்தப் பெயர் நன்றாயிருந்ததால் பிடித்தது. இப்போதோ அந்தப் பெயர் மட்டும் தான் பிடித்திருக்கிறது. அதனால் நீ சுபம் நிர்வாகி நாதனிடம் சற்று பேசுவது நல்லது"

"அதற்கு அவசியம் இல்லை, அம்மா. நீங்கள் முதலில் அழைத்தபோது நான் எங்கே போயிருந்தேன் தெரியுமா? கோ ஆப் டெக்சில் ஒரு சிவப்பு நிறஜரிகைச் சேலையும் பூவும் பழங்களும் வாங்க" என்றான் மைந்தன்.

"ரொம்ப சந்தோஷம். ஆனாலும் நீ ஆண்பிள்ளை பார். உங்கள் வர்க்கத்துக்கென்றே சில வக்கிரங்கள் உண்டு. எனவே நீ மிஸ்டர் நாதனிடம் பேசிவிட்டே நிர்மலாவிடம் செல்." என்கிற கட்டளையோடு பேச்சை முடித்தாள் ஆனந்தனுடைய அன்னை.

டெலிஃபோன் பேச்சு முடிவடைவதற்காகக் காத்திருந்தாற் போல ஓடோடி வந்தார் நாதன்.

அவர் உள்ளே வந்ததும், "இப்போதும் எனக்குச் சந்தேகம் இல்லைதான்." என்று மேசை மேல் இருந்த பொருட்களைக் காட்டினான் ஆனந்தன்.

வியப்பால் கண்கள் விரிய, "சா. ர்" என்று வாயைப் பிளந்தார் நாதன்.

லேசாக முறுவலித்து, சோஃபாவைக் காட்டி உட்கா ருமாறு சைகை செய்தான் ஆனந்தன். "ஆனாலும் உங்கள் பேச்சை நான் கேட்டாக வேண்டும் என்பது என் தாயாரின் உத்திரவு. அவர்கள் லேசில் எங்களுக்கு கட்டளை இடுவது இல்லை. அப்படிக் கட்டளையிட்டால் அதை மீறிப் பழக்கமும் இல்லை. சொல்லுங்கள். கூடவே நிர்மலாவின் முகவரியையும் தாருங்கள்" என்றான்.

இந்த ஒரு வாரமாகத் தாயின் அருகிலேயே இருப்ப தால் நிர்மலாவுக்கு ஓர் அபூர்வ நிம்மதி கிடைத்தது. இந்த இரண்டுமாத முடிவில் என்ன நேர்ந்தாலும் கடைசி நாட்களை அன்புக்கு உரியவர்களோடு சேர்ந்து கழிக்க முடிவது கூட ஆனந்தம் தான் என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

ஆற அமர எண்ணெயை ஊறவைத்துக் குளித்து விட்டு, அன்னையோடு சேர்ந்து மதியம் உறங்கிவிட்டு, பால் வந்ததும் எழுந்து, தாயாருக்கும் தனக்குமாய் காபி தயாரித்துக் குடித்து முடித்தபின் சாவதானமாகத் தலையை வாரிக் கொள்ளத் தொடங்கிய போது வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது.

சீப்பை வைத்துவிட்டுப் போய்க் கதவைத் திறந் தாள்

வாயிலில் நின்றவனைக் கண்டதும் அவள் முகத் தில் குரோதம் தோன்றியது.

## 15

விரிந்து பறந்த நீண்ட கருங்கூந்தலையும் ஒப்பனை யற்ற வீட்டுத்தோற்றத்தையும் விழுங்குகிறவன்போலப் பார்த்துக் கொண்டு நின்றவன் ஆனந்தன்தான்.

இவனுக்கு இங்கே என்ன வேலை?

வேலையைப் பறித்த பிறகு உயிரோடு இருக்கிறாளா செத்து விட்டாளா என்று பார்க்கவந்தானா?

முகம் கருத்து, "என்ன விஷயம்?" என்று மிடுக்கோடு கேட்டாள் நிர்மலா.

"வழிவிட்டால் உள்ளேவந்து சொல்லுகிறேன்" என்றான் அவன் வழக்கமான இலகுக்குரலில்.

"தேவையில்லை. சொல்லாமலே நீங்கள் போகலாம்." என்று கறாராக அவள் மொழிந்தபோது உள்ளிருந்து, "யாரம்மா, அது?" என்று கோதையின் மெல்லிய குரல் கேட்டது.

"அது...."

யாரென்று சொல்வது என்று நிர்மலா தயங்கவும், அவளைத் தொட்டு நகர்த்திவிட்டு உள்ளே சென்றான் ஆனந்தன்.

அவன் பின்னோடு வந்த ஒருவன் ஒரு பெரிய வெள்ளித் தட்டைக் கொண்டு வந்து உள்ளே கிடந்த சிறு முக்காலி மேல் வைத்துவிட்டுப் போனான்.

தட்டில் இருந்த பட்டுச் சேலையையும் நகைகளையும் பூ பழங்களையும் பார்த்த நிர்மலாவின் கண்களில் மின்னல் வெட்டியது.

"இதெல்லாம் இங்கே ஏன் கொண்டு வந்தீர்கள். எடுத்துக் கொண்டு போங்கள்." என்று அடிக்குரலில் ஆனந்தனிடம் சீறினாள் அவள்.

அவன் கேளாதது போல கோதையிடம் சென்று, "அடடா, உங்கள் உடம்பு இப். இப்படி என்று தெரியாதே. நான் வேண்டுமானால் இப்போது போய் விட்டு இன்னொரு நாள் வரட்டுமா?" என்று அக்கறையோடு விசாரித்தான்.

"வேண்டாம்" என்று அயர்வோடு முறுவலித்தாள் கோதை. "இன்னோருநாள் மட்டும் என்னப்பா, நான் நன்றாகி விடவா போகிறேன். என் செல்வம் பாடுபட்டுத் தேடும் பணத்தை எல்லாம் விழுங்கிக் கொண்டு

நான் இப்படியேதான் இருக்கப் போகிறேன். என்னவோ, இந்த ஒன்றரை ஆண்டாக விடாமல் வேலை செய்ததால் இரண்டு மாதம் தொடர்ந்து லீவு கிடைத்ததாம். என் கண்மணி பறக்கப் பறக்க ஓடாமல் கொஞ்சம் ஓய்வாய் இருக்கிறாள்" என்று கூறி இவ்வளவு பேசிய சிரமம் தாளாமல் பெருமூச்சுவாங்கினாள்.

"ஷ். சும்மா இருங்கள் அம்மா. நம் கதை மற்றவர்களுக்கு எதற்கு?" என்று தாயார்ரை அடக்கினாள் நிர்மலா.

"அதுவும் சரிதான்" என்று ஒத்துக் கொண்டார் தாயார். "கஷ்டத்தை வெளியே சொல்லக் கூடாது என்று இவள் அப்பா சொல்லுவார். எனக்குதான் இரவு பகல் என்று இல்லாமல் இவள் படுகிற பாடு வேதனையாக இருக்கும்... என் கதை இருக்கட்டும். நீங்கள் யார்? என்ன விஷயமாய்... தட்டில் என்ன?" என்று விசாரித்தாள்.

தன்னைப் பற்றிய விவரத்தை அடக்கமான குரலோடு கூறினான் ஆனந்தன். "என் சீதை உங்கள் மகள்தான் என்பது என் முடிவு. உங்கள் மகளை மணந்து கொள்ள உங்கள் அனுமதி வேண்டும். அதனால்தான்..." என்று தட்டைக் காட்டினான்.

ஸ்விட்சை தட்டினாற்போலப் பளிச் சென்று கோதையின் முகம் மலர்ந்தது. "நி. .நிஜமாகவா? என். . .என் கண்ணே! வாம்மா, வந்து தட்டை எடுத்துவை. அதிலிருக்கும் பூவைத்தலையில் வைத்துக் கொள்." என்று பரபரத்தாள்.

சற்றும் அசையாமல் நின்று ஆனந்தனை வெறித்தாள் நிர்மலா. பிறகு, "அம்மா, உங்களுக்கு மாத்திரை தர வேண்டும்." என்று உள்ளே திரும்பினாள்.

"என்னடா, இப்போதா?"

"ஆமாம்மா. டா. க்டர் வேறே ஏதோ எழுதியிருந்தார், பார்த்துவிட்டு வருகிறேன்" என்று அடுத்து அறைக்குள் சென்று விட்டாள் அவள்.

தன் முகத்தையும் குரலையும் சமனப் படுத்திக் கொள்ள அவளுக்குச் சற்று அவகாசம் தேவைப்பட்டது.

சீதையாமா? சீதையேதான். இவனைப் பார்த்த பாவத்துக்கு நேசித்த குற்றத்துக்கு எத்தனை முறை தீக்குளித்தது போலத் துடித்தாயிற்று? இன்னமுமா?

"கண்ணும்மா. . " என்று தாயின் பலவீனமான குரல் கேட்கவும், "இதோம்மா," என்று ஒரு வைட்டமின் மாத்திரையை எடுத்துக் கொண்டு விரைந்தாள்.

மாத்திரையும் நீரும் கொடுக்க மாத்திரை விழுங்கிய அந்தச் சில வினாடிகளில் தொண்டை கமறிச் சற்று சிரமப் பட்டாள் கோதை.

அதன் பிரதி பலிப்பாய் ஆனந்தனிடம் சலனத்தைக் காணவும் நிர்மலாவுக்குள் ஒரு வக்கிரம் தோன்றியது.

"சிலிண்டர் மாற்ற வேண்டும் அம்மா" என்று தாயாரின் மறுபுறமாய் இருந்த பிராண வாயு சிலிண்டர் அருகே சென்றாள்.

"அப்படியா? நேற்றுத்தானே. . ." என்று யோசித்த அன்னையிடம். "இல்லையம்மா. முடியப்போகிறது." என்று கூறி ரெகுலேட்டரை மூடிவிட்டு அடுத்த சிலிண்டரை எடுத்து வந்தாள்.

மனதைக் கல்லாக்கிக் கொண்டு நிதானமாகவே மாற்றவும் மூச்சுக் காற்றுக்காக கோதை தவித்துப் போனாள்.

ஒருவாறு திரும்பவும் மூச்சு சீராகும் வரை காத்திருந்து விட்டு, மறுநாள் வருவதாக சொல்லிக் கிளம்பினான் ஆனந்தன்.

அயர்வுடன் கண்களை மூடிக் கொண்டாள் கோதை.

வழியனுப்பும் பாவனையில் முன் ஹால்வரை வந்தாள் நிர்மலா.

அவனும் எதிர்பார்த்தவன் போல, "என்ன?" என்று கேட்கவும் பொரிந்து கொட்டினாள். "பார்த்தீர்கள் அல்லவா? ஒரு மூச்சு காற்றுக்கு இந்தப் பாடு. என்னை

விற்பது தவிர எதையாவது செய்து அம்மாவுக்கு வைத்தியம் பார்த்தாக வேண்டிய நிலை. அதனால்தான் அந்த அரைக்கால் ஆடை ஆட்டம் ஆடவந்தேன். நிறைய சம்பாதித்து சுகபோகத்தில் மிதக்க அல்ல" என்றாள் ஏளனமாக.

அவளையே கூர்ந்தவன் கேட்டான். "வேண்டுமென்றுதான் சிலிண்டரை மெல்ல மாற்றினாய். இஞ்லையா?"

அவள் முகம் கன்றவும், "எனக்கு சில விலை விவரங்கள் தெரியும் நிர்மலா. ஒரு சிலிண்டர் பிராண வாயு விலை என்ன? நாற்பது ரூபாய் இருக்குமா? இடைவிடாமல் பயன் படுத்தினால் கூட மாதம் நானூறு ரூபாய் ஆகுமா?" என்று சிறு கண்டிப்புடன் அவன் மேலே பேசவும் அவளுக்குப் பொங்கிக் கொண்டு வந்து விட்டது.

"இது மட்டும்தானா?" தன்னைமறந்து அவன் கையைப் பற்றி கோதை படுத்திருந்த அறைக்கு அடுத்த அறைக்குள் அவனை இழுத்துச் சென்றாள். அலமாரியைத் திறந்து, " இங்கே பாருங்கள். ஒவ்வொன்றாக எடுத்து விலையையும் சேர்த்துப் பார்த்துக் கூட்டிக் கணக்கிடுங்கள்" என்றாள் கொதிப்புடன், " பாருங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏற்கனவே அம்மா நோயாளி. இப்போது அப்பாவிடம் செல்லத்துடிக்கும் அந்த உயிரை பிடித்து வைக்க ஆகிற செலவு என்ன என்று நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று பட படத்தபோது கோபமும் துக்கமுமாக அவளது குரல் தழுதழுத்தது.

நாதன் பேச்சை இன்னமும் சற்று காது கொடுத்துக் கேட்டிருக்க வேண்டும். நல்ல பெண் தன்மானம் அது இது என்றதும் நானே அறிந்து கொண்ட விஷயம் தானே என்று அவன் அவசரப்பட்டது தவறு.

சற்று பிரமித்த தோற்றத்துடன், "சாரி" என்று தணிந்தவனின் பார்வை மேல் தட்டில் கடைசியாக

இருந்த இரு பாட்டில்களில் வந்து நிலைத்து மேலும் திகைத்தது.

"இது. . ." என்று அந்தத் தூக்கமாத்திரை பாட்டில்களைக் கையில் எடுத்துப் பார்த்தவன் சுட்டுவிட்டாற் போல அவைகளை வைத்து விட்டு அவள் புறம் திரும்பினான். "நிர்மலா...நீ..?" என்றான் ஒரு வேக மூச்சுடன்.

உதடுகள் அழுந்தத் தலையைத் திருப்பிக் கொண்டாள் அவள். "இரண்டு மாதங்களுக்கு அம்மாவுக்கு மருந்து வாங்கி வைத்துவிட்டேன். கடைசி நேர ஆசை. ஒரு லாட்டிரிச் சீட்டு கூட வாங்கினேன். ஒரு வேளை அதிருஷ்டம் திரும்பினால்? ஆனால் அப்படித் திரும்பா விட்டால் இந்த இரண்டு மாதங்கள் சென்ற பின் அம்மா ஏன் துடிதுடித்துச் சாகவேண்டும்? அதைப் பார்த்து நான் ஏன் வேதனைப் பட வேண்டும்? அதற்காகத்தான்..விடுங்கள்" என்று சட்டென இறுக அணைத்தவனைத் திமிறி விலக்கியபடி அடிக் குரலில் சீறினாள்.

அவளை மெல்ல விடுவித்து விட்டு, "சாரி நிர்மலா என் தவறுக்கு நான் மெய்யாகவே வருந்துகிறேன்." மிகவும் தணிந்து விட்ட குரலில் உரைத்தான் ஆனந்தன்.

அவளுக்கு இன்னமும் கோபம் அடங்கவில்லை. இரண்டு மாதங்களாக அவள் மனதில் பட்ட காயங்கள் அவ்வளவு எளிதில் ஆறுவதாகவும் இல்லை. தலை நிமிர்ந்து, "உங்கள் சீதையைக் கண்டு விட்டதாகச் சொன்னீர்கள். என்னுடைய ராமன் எப்படி இருக்க வேண்டும் என்று எனக்குள்ளும் சில கற்பனைகள் இருக்கும் அல்லவா? உங்கள் எண்ணம் நிறைவேறி இருந்தால் இப்போது உங்கள் முன் உயிரோடு நிற்பேனா?"

முகம் கன்ற, "ப்ளீஸ்...ப்ளீஸ்.. நிர்மலா, அதையெல்லாம் தயவு செய்து மறந்து விடு" என்று வேண்டினான் ஆனந்தன்.

"மறப்பதா? யார்? அன்று சொன்ன மாதிரி ஆசை வெறி மீறித்தான் மணக்கத் துடிக்கிறீர்களோ,

என்னவோ? நாளைக்கே ஒருவர் வந்து முன்னே உன் மனைவி ஆடியபோது என்று தொடங்கி ஏதாவது சொன்னால் எப்படி மாறுவீர்கள் என்று யார் சொல்ல முடியும்? துன்பப்படுவதும் தீக்குளிப்பதும் அந்த சீதைக்குச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் என்னால் முடியாது" என்றாள் அவள் உறுதியான குரலில்.

"அதற்கு அவசியமே இராது." என்றான் அவனும் அதே உறுதியுடன். "பகலில் ஒரு வேடம் இரவில் நேர் மாறாக இன்னோரு வேடம் போடுகிறவள் எப்படி என்று.. ."என்று தொடங்கியவன் நிறுத்தி இருகை விரித்து, "நிர்மலா, நான் எப்படி சொல்லட்டும்? உன்னைத் தவறாக எண்ணியவரை நீ ஒரேடியாக என்னை விட்டுப் போகக் கூடும் என்று நான் நினைக்கவே இல்லை. ஆனால் இந்த ஒருவாரம் எனக்கு உன்னை உணர்த்திவிட்டது. இனி உலகமே திரண்டு வந்து உன் மேல் பிழை சொன்னாலும் நான் அதை ஒப்ப மாட்டேன், நிர்மலா. இன்று வரை உன்னை வேதனைப் படுத்தியதற்குப் பரிகாரமாய் இனி உன்னை ஒரு துரும்பு கூட உறுத்தாமல் பாதுகாப்பேன் . . . சத்தியமாய், நிம்மி, நீ இதை நம்ப வேண்டும்.."குரல் கம்மக் கூறி முடித்தான் ஆனந்தன்.

உள்ளார்ந்த உணர்ச்சிகளை மறைவின்றி வெளிப்படுத்திய அவனது பேச்சும் குரலும் ஒரு புறமிருக்க, அவளுடைய தந்தையின் செல்லப் பெயரான நிம்மி, என்று அவன் அழைத்தது, அவளது நெஞ்சை என்னவோ செய்தது.

அவள் பேசாமலேயே நிற்கவும் தவித்துப் போய், "நீ — நீ நம்புகிறாயில்லையா?" என்று குரல் பதறக் கேட்டான் ஆனந்தன்.

அதுவரை அவனது முகத்தைத் தவிர்த்து எங்கோ வெறித்திருந்த பார்வை மெல்லத் திரும்பி, உயர்ந்து ஆனந்தனின் முகத்தில் பதிந்தது.

"நம்புகிறேன்" என்று மிருதுவாக ஒலித்தது நிர்மலாவின் மென்குரல்.

★★★

# ராமன் தேடிய சீதை

ரமணிசந்திரன்